ஸ்ரீ:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்
25 DEC 1986

உயர் திரு. வித்துவான் வே. வேங்கட

ராஜுலு ரெட்டியார்

அவர்களுக்கு

அன்பளிப்பு.

1.10.62.

கி. [illegible]

# சிலப்பதிகாரக் கட்டுரை

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
25 DEC 1986
தஞ்சாவூர்

ஆசிரியர் :
லயோலா கல்லூரியில் தமிழ்ப் புலவராயிருந்தவர்,
திருக்குறள் விரிவுரையாளர்
கு. மதுரை முதலியார்

புத்தக நிலையம்
தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை :
முதற்பதிப்பு—1950

... கழக ... தஞ்சாவூர்
25 DEC 1986

ரூபாய் 1—8—0

45290.

ஸ்ரீ

## உரிமையுரை

அன்பின் வடிவாய் அருங்குணக் குன்ருய்
மாணவர் மனத்திருள் மாய்க்கும் கதிராய்க்
கோதிலாப் பொருளாம் **கோவிந்த ராசன்**
நாயினும் கடையா னைந்த என்னையும்

ஆண்டே அகத்திடை அமர்ந்துளன் அதனல்
நன்றி மறவா நலனைக் காட்ட
இச்சிறு நூலை அப்பெரி யோற்கே
உரிமை யாக்கினேன் உள்ளம் உவந்தே.

The Royal Printing Works, Madras-2.

மகா மகோபாத்தியாய பண்டித மணி
மு. கதிரேசச் செட்டியார்
எழுதிய

# முன்னுரை

சிலப்பதிகாரக் கட்டுரை என்னும் இவ் வுரைநடை நூல், சென்னை, லயோலாக் கல்லூரியில் தமிழ்ப் புலவரா யிருந்தவரும், இப்பொழுது சில ஆண்டுகளாக அரமழம் என்னும் நகரில் அறிவுடைய அன்பர் சிலர்க்குத் திருக்குறள் விரிவுரை கூறிப் பயிற்றி வருபவரும் ஆகிய புலவர், திருவாளர் கு. மதுரை முதலியாரவர்களால் எழுதப்பட்டதாகும்.

தமிழில் உள்ள பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம், கற்பவர் உள்ளத்தை இன்புறுத்தும் பெற்றி வாய்ந்தது; இனிய செஞ்சொற்களால் இயன்றது; கூறப்படும் பொருளைக் கண்கூடாகக் காட்டுவதுபோல் தெளிவுறுத்துவது; இயல், இசை நாடகமாகிய முத்தமிழ்ப் பகுதியும் அமையப்பெற்றது. வரலாறு தமிழ் நாட்டில் நிகழ்ந்ததாகும்; பிறிதொரு நூலினின்று மொழி பெயர்க்கப்பட்டதன்று. இன்ன பல நலங்கள் அமைந்த இப்பெருங் காப்பியத்தை இயற்றிய ஆசிரியர், அரசர் குடியிற்பிறந்து, உண்மைத் துறவுபூண்ட இளங்கோவடிகளாவர். மக்கள் வாழ்க்கையில் இனப துனபங்களின் இயல்புகளையும், அவ்வக்காலை மக்களுக்கு உண்டாம் மன நிலைகளையும் நுணித்துணரும் புலவர் திலகமாகிய அடிகள் இயற்றிய இபபெருங் காப்பியத்தில், காப்பியச் சுவைகள எல்லாவற்றையும் ஒருங்கே காணலாம். இச் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் பழைய உரைகளோடு படித்தறிவது இலக்கிய இலக்கணங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கேயன்றிப் பிறர்க்கு அரிதாகும். இக் காலத்தில் உயர்ந்த கருத்துக்களை எளிமையில் விளங்கிக் கொள்ளும்படி தெளிவான உரைநடையில் எழுதி வெளி

யிடுதல் பலர்க்கும் பயன்படுவதாகும். இம்முறையைத் தழுவி, திரு. முதலியார் அவர்கள் நல்ல தமிழ் நடையில் சிலப்பதிகாரக் கட்டுரை என்னும் பெயரால் எழுதியிருக்கின்றனர்.

இதன்கண் சிலப்பதிகார மூலப்பொருள் விடாமல் உரைநடைப்படுத்தப்பட்டுள்ளது. படிப்பவர்க்கு மூலத்தின் அமைப்புத் தெரிந்து கொள்ளுதற்கு இம்முறை ஏற்றதொன்றும். உரை நடையின் இடையிடையே சிலப்பதிகாரத்துள்ள சுவையுள்ள பாடற் பகுதிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. திருக்குறள், தக்கயாகப்பரணி, கம்ப ராமாயணம், பெரிய புராணம் முதலிய இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்கள் எடுத்துக் காட்டிப் பொருள் நயங்களை விளக்கியிருத்தல் இன்புறத்தக்கது. இவ்வுரை நடை நூலை ஊன்றிப் படிக்கும் மாணவர்கள் சிலப்பதிகாரப் பெருங்காப்பியத்தைப் பயிலுதற்கு உரிய தகுதியை அடையலாம்.

இதன் ஆசிரியராகிய திரு. முதலியாரவர்கள் இன்னோரன்ன உரைநடை எழுதுவதிலும், தமிழ் நூல்களைக் கற்பிப்பதிலும் ஆற்றல் படைத்தவர்கள். இவர்கள் இன்னும் இது போன்ற நூல்களை எழுதித் தமிழன்பர்க்கு உதவி புரிந்து நீடு வாழும் வண்ணம் இறைவன் திருவருள் முன்னிற்பதாக.

மு. கதிரேசன்.

மகிபாலன்பட்டி<br>*15—1—48*

ஸ்ரீ:

# சிலப்பதிகாரக் கட்டுரை

## மங்கல வாழ்த்தும் மண விழாவும்

புலவர் மணியாய் விளங்கும் இளங்கோ அடிகள், தாம் இயற்றும் சிலப்பதிகாரம் என்னும் சீரிய முத்தமிழ் நூல் முட்டின்றி இனிது முடிதற் பொருட்டு, மங்கல வடிவாய் இலகும் மறை முதற் பொருளை வாழ்த்துகின்றார். இப் புலவர் பெருந்தகையார், ஏனைய புலவர் சென்ற நெறியைப் பின்பற்றாது, புது நெறி யொன்றான் இறைவனை வணங்கும் இயல்பு இறும் பூது சான்றது. ஊழ் கொண்ட சமயத்து, அன்னான் உருவு காண்டல் ஒவ்வாதெனக் கருதியோ, மற்றெக் காரணத்தாலோ, இப் பெரியார், இயற்கை வழிபாட்டான் இறைவனைக் கண்டு களிக்கின்றார் :

**"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்"**

என்று இயற்கைப் பொருளை இறைஞ்சுகின்றார் முற்றத் துறந்த முனிவர்.

தண்ணிழல் தந்து, தரையினைக் காக்கும் தண் மதியத்தினை நூல் முதற்கண் போற்றுதற்குக் காரணம் தெரிவிக்கின்றார் கவியரசர் இளங்கோ அடிகள். சோழனது குளிர் வெண் குடை போன்று திங்களும் இவ்வுலகை அளித்தலான், அத்திங்களைப் போற்றுவதாக அடிகள் கூறுவதிலிருந்து அவர்க்குச் சோழன் பால் இருந்த பெருமதிப்பும், அத்தகைய பெரு மதிப்பிற்குக் காரணமாயிருந்த அம்மன்னன் தண்ணளியும் நன்கு புலனாம்.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"**

என்பது தெய்வப் புலவரின் திருவாக்கு. இத்தகைய மன்னரை முற்றத் துறந்த முனிவரும் இறை யெனப் போற்றுவதைச் சிலப்பதிகாரத்தில் காண்கின்றோம்.

சோழனது வெண்கொற்றக் குடை, மக்களது வறுமைப் பிணியைப் போக்கி, இன்பமாகிய நிழலைத்தந்து, அவர்களைக் காக்கின்றது. திங்களோ, உலகின் கண்ணுள்ள இருளைப் போக்கி, தண்ணிய இன் கதிரால், இயங்கும் பொருள், நிலைப் பொருள் ஆகிய பல்லுயிரையும் பரிந்து காக்கின்றது.

கவிக்கரசராகிய கம்பர், தண்ணிழல் பரப்பவும் இருளைத் தள்ளவும் அரசன் குடையொன்றே அமையும்; விண் மதி வேண்டா எனக் கூறிச் செங்கோல் மன்னரின் வெண்கொற்றக் குடையின் மூலம் அவரது மாட்சியை விளக்கினார்.

தக்கயாகப்பரணி ஆசிரியர்,

"இறைவாழி தரைவாழி நிரைவாழி யியல்வாழி யிசைவாழியே
மறைவாழி மனுவாழி மதிவாழி ரவிவாழி மழைவாழியே"

எனக் கூறியுள்ள அட்ட மூர்த்த வாழ்த்தில், மதியையும் சூரியனையும் மழையையும் வாழ்த்தி யிருத்தலையும், அந் நூலின் உரையாசிரியர், "மதியை முதலில் வாழ்த்தியது சந்திராதித்தர் என்னும் முறைமை கொண்டு" எனக் கூறி யிருத்தலையும் காண்க.

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்."

தண் மதியைப் போற்றிய புலவர், செஞ்ஞாயிற்றினை வணங்கும் திறனைக் காண்போம். கதிரவன் இல்லையேல் உலகம் இல்லை. புற் பூண்டுகளும் அவனது செங்கதிரால் உரம் பெற்று வளர்கின்றன எனின், மற்றைய உயிர்களை அவன் காக்கும் வகை வெள்ளிடை மலை யென விளக்கமுறும். காவிரி நாடன் திகிரி,இணையற்றுப் பொற்கோட்டு மேருவை வலம் வந்து உலகைப் புரக்கின்றது. அது போல், ஞாயிறும் மேல்

நின்று, தன்னேரிலாது உலகெலாம் காத்து ஒளிர்கின்றது. உலகைக் காக்கும் மா மழைக்கும் கதிரவன் காரணம் எனின், அவனது பெருமை மாணப் பெரிது.

கம்பர் தசரதனது திகிரிக்கு இரண்டு உவமைகள் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று செஞ்ஞாயிறு; மற்றொன்று தத்துவம் கடந்த தனிப் பெரும் பொருள்.

“ வென்றியந் திகிரிவெம் பரிதி யாமெனா
ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை
நின்றுநின் றுயிர்தொறு நேடிது காக்குமே ”

என்று மிக்க அழகுபடக் கூறினார் கல்வியிற் பெரிய கம்பர். மேல் நின்று, உலகெலாம் உலாவி உயிர்களைக் காக்குந் தன்மையில் சூரியனும், ஒன்றே யாகி உயிர்தொறும் நின்று காப்பதில் எல்லாம் வல்ல இறைவனும் திகிரிக்கு உவமையாதலைக் காண்கின்றோம். இத்தகைய பெருமை வாய்ந்த சூரியனை இன்றும் மக்கள் சூரிய நாராயணன் எனத் தொழுது வருவதைக் காணலாம். கலிங்கத்துப் பரணியிலும்,

“ பேராழி யுலகனைத்தும் பிறங்கவளர் இருள்நீங்க
ஓராழி தனைநடத்தும் ஒண்சுடரைப் பரவுதுமே ”

எனச் சூரியன் துதி கூறப்பெற்றுள்ளது.

திங்களையும் ஞாயிற்றையும் போற்றிய அடிகள்,

“ மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான் ”

என்று மழையைப் போற்றும் மாண்பைக் காண்போம். மழை யில்லையேல் மன்னுயிர் இல்லை. மக்கள் பசிப்பிணி யின்றி நன்னெறியில் ஒழுக வேண்டுமானால், மழை யென்னும் மாண் பொருள் வேண்டும்.

“ நீரின் றமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு ”

என்றார் பொய்யா மொழியார். இவ்வண்ணம் உலகம் அமைதியும் ஒழுங்கும் பெற்று ஒளிர்வதற்குக் காரணமாயுள்ள மாமழைக்குச் சோழனது தண்ணளியை அடிகள். உவமை யாக்கும் திறன் பெரிதும் வியத்தற்குரியது. இறுதியாக, இளங்கோ அடிகள்,

"பூம்புகார்ப் போற்றுதும் பூம்புகார்ப் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற்கு அவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்"

எனச் சோழனது தலை நகராகிய காவிரிப்பூம்பட்டினத்தைப் போற்றுகின்றார். இவ்வாறு, திங்களையும் ஞாயிற்றையும் மழை யையும் போற்றும் வாயிலான், சோழனது சிறப்பையும் புகாரின் சிறப்பையும் தமக்குச் சோழ மன்னன்பாலுள்ள பெரு மதிப் பையும் விளக்குகின்றார் அடிகள்..

இனி, கற்பிற் சிறந்து விளங்கும் காரிகையாகிய கண்ணகியின் ஓவியத் தெழுத வொண்ணு உருவத்தை, இளங்கோ அடிகள், செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீந் தமிழ்ச் சொற்களான் ஓர் அழகிய படம் வரைந்து தமிழ் உலகிற்கு வழங்கியுள்ளார். அப்படத்தின் அழகில் சிறிது ஆழ்வாம்:

முதன்முதல் இளங்கோ அடிகள், கண்ணகியின் குடிப் பிறப்பை உலகிற்கு அறிவிக்க விழைகின்றார். அப்பெரியார்,

"மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்"

எனக் கண்ணகியைக் குறிக்கின்றார்; கண்ணகியின் தந்தை யாகிய மாநாய்கன் மழையென வழங்கும் வள்ளல் என் கின்றார். இதனால் மாநாய்கன் உயர் குடியிற் பிறந்த உத்தமன் என்பதை அறியலாம். வரையாது கொடுக்கும் வள்ளல் தன்மையை இழிகுடிப் பிறந்தாரிடம் காணல் அரிது.

"இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள"

"பேரில் பிறந்தமை யீரத்தின் அறிப"

"இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்"

என்ப் பேரறிவாள ரெல்லாம் கூறியுள்ளார். இவற்ருன் கற்பரசியாம் கண்ணகியின் உயர்குடிப் பிறப்பு உள்ளங்கை நெல்லிக் கனியாம்.

"போதிலார் திருவினுள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங்கண்ணகியென் பாள்மன்னோ".

எனச் சில அடிகளான் வரையப்பெற்றுள்ள கண்ணகியின் படம் நம் கண்முன் நிற்கின்றது. ஒரு பெண்ணின் பேரழகைக் கண்டு வியந்து, மற்றைப் பெண்கள் எல்லாம் அந் நல்லாளைத் தொழுது எத்துகின்றனர் எனின், அவ்வழகின் அளவை அளத்தலும் கூடுமோ? செந்தாமரையில் வீற்றிருக்கும் திரு மகளின் வடிவழகு கண்ணகியின் வடிவழகை யொக்கும் என்கின்ருர் அடிகள். உலகில் வாழும் கட்டழகிகட் கெல்லாம் உவமையாய் விளங்கும் பூமகட்கே உவமைப் பொருளாய்க் கண்ணகி கனிந்து நின்ருள் எனின், இவ்வுருவை ஒவியத்தில் எழுதிக் காட்ட ஒல்லுமோ? அருந்ததியின் கற்பு கண்ணகியின் கற்பை யொக்கும் என்று மாதரார் கண்ணகியைப் போற்று கின்றனர் எனக் கூறி, கற்பரசிகட்கெல்லாம் நாயகமாய்க் கண்ணகியை வீற்றிருக்க வைக்கின்ருர் நம் அடிகள். கண்ணகியின் அழகின் திறம்தான் இவ்வாறெனில், அம் மாதரசி குணக் குன்ருயும் விளங்குகின்ருள். பெருங் குணங்கள் எல்லாம் அவளைச் சேர்ந்துய்ய விரும்புகின்றன எனின், அவளது பெருங்குணச் சிறப்பை என்னென்று பேச லாம்!

இத்தகைய சிறப்பு வாய்ந்த கண்ணகி செய்த தவமே தவம்! குடிப்பிறப்பிலும் அறிவிலும் திருவிலும் ஆண்டிலும் ஒத்த தலைவனை மகளிர் பெறுதல் அருமையினும் அருமை. கோவலன் கண்ணகிக்கேற்ற கொழுநன். அவனது படத்தை யும் கண்டு களிப்போம் :

"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலனென் பான்மன்னோ"

என்று கோவலன் படத்தைச் சித்திரிக்கின்றார் அடிகள். இப் படத்திலிருந்து கோவலனது புகழ் உலகினும் பெரிது என் பதை யறிந்து உள்ளம் மகிழ்கின்றது. கோவலன், பெண் கள் கூட்டத்தின் முன்னர், அழகிலும் ஆண்மையிலும் முருகன் எனக் காட்சியளித்து விளங்குகின்றான்.

கற்பிற் சிறந்த கண்ணகியை, ஆண்டகை யாகிய கோவலன் மணக்குங்கால்,

"சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது.............."

என்பதுதான் கூறப்பட்டுள்ளதேயன்றி, மங்கல நாணைப்பற்றிய ஒருவிதக் குறிப்பும் இல்லை. இதிலிருந்து அக்காலத்தில் தமிழர் மங்கல நாணை மனைவிமார் கழுத்தில் கட்டும் வழக்கம் இல்லை போலும் என ஐயுறுதற்கு இடன் உளது. ஆனால், மண வினைக்கு முன்னர்,

"முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
அரசெழுந்ததொர் படியெழுந்தன
அகலுள்மங்கல அணியெழுந்தது"

என்ற அடிகளில், "அகலுள் மங்கல அணி யெழுந்தது" என்ற சொற்றொடருக்கு, அரும்பத உரையாசிரியர், "ஊரிலே மாங் கலிய சூத்திரம் வலஞ் செய்தது" என்று எழுதியுள்ளார். இவ்வுரை பொருத்தமின்மை கட்டுரை காதையால் தெரி கின்றது. அக்காதையில்,

"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலனெனக்
கொற்றவை வாயில் பொற்றொடி தகர்த்து"

என வரும் அடிகளால், கண்ணகி, துர்க்கை கோயிலில் கையில் அணிந்திருந்த வளைகளை உடைத்தெறிந்தாள் என்ற குறிப்பு மட்டும் உளதே யன்றி, மங்கல நாணைப்பற்றிய செய்தி ஒன்றுமில்லை. அடியார்க்கு நல்லார் "மங்கல அணி" என்பதற்கு மங்கல அணி யென்றே பொருள் கூறிவிட்டுச் சென்றார்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நிகழ்ந்த பின்னர், பூங்கொடி போன்ற சில பெண்மணிகள், அம்மண மக்களை மங்கல நல்லமளியில் ஏற்றி,

**" காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீதறுக "**

என வாழ்த்துகின்றனர்.

"கண்ணகி, தன் இன்னுயிர்க் காதலனைக் கண்ணிலும் நெஞ்சிலும் பிரியாமல் வாழ்க; கோவலன், தன் வாழ்க்கைத் துணையாகிய கண்ணகியைத் தழுவிய கை எக்காலத்திலும் ஞெகிழாமல் வாழ்க!" என்பது அம்மகளிர் வாழ்த்து.

மணமக்களை வாழ்த்திய பின்னர், அப் பெண்மணிகள், குடி யோம்பும் கொற்றவனையும் வாழ்த்துவதாக இளங்கோ அடிகள் மங்கல வாழ்த்துப் பாடலை முடிக்கின்றார். முதலிலும் இறுதியிலும் மங்கல வாழ்த்தைக் கொண்டு, இடையிலும் திருமணமாகிய மங்கல வினையைக் கொண்டிருப்பதால், அடிகள் இப்பகுதியினை மங்கல வாழ்த்துப் பாடல் என்றனர் போலும்.

# நலம் பாராட்டலும் நல்லறம் படுத்தலும்

பெரும் புகழ் வாய்ந்த காவிரிப்பூம்பட்டினம் திருமகளின் உறைவிடமாய் விளங்கிய தன்மையை இளங்கோ அடிகள் இனிது விளக்கியுள்ளார் :

*" முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்*
*வழங்கத் தவாஅ வளத்த தாகி*
*அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்*
*ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்*
*கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட "*

என்ற அடிகள், பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே நம் தமிழ் நாடு பல்வகைச் செல்வத்தான் சிறப்புற்றிருந்த உயரிய நிலையை உள்ளங்கை நெல்லிக்கனியென உலகிற்கு எடுத்துக் காட்டுகின்றன. உலகம் அனைத்தும் ஒன்று சேர்ந்து வரினும், வழங்கத் தவா வளமுடையது பூம்புகார் என்கின்றார் அடிகள். கப்பல் வாணிபத்தானும், மற்றை வாணிபத்தானும் மக்கள் ஈட்டிக் குவித்துள பல்வேறு பண்டங்களின் காட்சி, அரும் பொருளைக் கொடுக்கும் பல்வேறு தேயங்கள் ஒருங்கு தொக்க காட்சியை ஒத்தது என்ற உவமை, உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பேரழகு வாய்ந்துளது. இத்தகைய வளமுடைய நாட்டையே நம் தெய்வப் புலவர்,

*" நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு "*

எனக் குறிப்பிட்டுள்ளார்.

*" அத்தகு திருவின் அருந்தவ முடித்தோர்*
*உத்தர குருவின் ஒப்பத் தோன்றிய*
*கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும் "*

என்ற அடிகளால், கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்தமையான், அஃது உத்தர குருவினை யொத்தது என்றார் இளங்கோ அடிகள். உத்தர குரு என்பது அறுவகைப் போக பூமிகளுள் ஒன்று. மற்றவை, ஆதியரி

வஞ்சம், நல்லரி வஞ்சம், ஏமத வஞ்சம், இரண வஞ்சம், தேவ குருவம் எனப்படும். நல் வினை செய்த நல்லோர், அவ்வினைப் பயனைத் துய்க்கப் பதினாறு ஆண்டுக் காளையாகவும், பன்னீராண்டு மட மானாகவும் போக பூமியிற் பிறந்து, ஆண்டுள கற்பகத்தரு, தாம் கருதிய பொருள்களை யெல்லாம் மறாது கொடுக்க, அப் போகத்தினைச் செய் தவத்தளவு நுகர்ந்து கொண்டிருப்பர்.

இனிக் கோவலனும் கண்ணகியும் இல்லற இன்பம் நுகர்ந்த விதத்தை இளங்கோ அடிகள் சுருங்கிய சொற்களான் சொல்லும் ஆற்றல் போற்றற்பாலது.

> "மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
> நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்துழி"

என்ற அடிகளிலிருந்து, கோவலனும் கண்ணகியும் இன்பக் கனி நுகரத் தெய்வத் தச்சனாகிய மயனால் செய்யப்பட்டதோ இக்கட்டில் என்று மக்கள் கண்டு ஐயுறத்தக்க அழகு வாய்ந்த கட்டில்மிசை, நெடுநிலை மாடத்து இடை நிலையில் இருந்தனர் என்பது தெரிகிறது. ஆனால், "நெடுநிலை மாடத்து இடை நிலம்" என்ற சொற்றொடர்க்கு அடியார்க்கு நல்லார், "எழு நிலைகளுள் இடை நிலமாகிய நாலாம் நிலம்" என்று பொருள் கூறுகின்றனர். அப்புலவர் பெருமானார் அங்ஙனம் பொருள் கொள்ளுதற்குரிய காரணம் எமக்கு விளங்கவில்லை. நெடுநிலையென்பதற்கு மூன்று, ஐந்து, ஒன்பது என வேறுவகையாகப் பொருள் கூறின் வரும் இழுக்கு என்னையோ அறியோம்.

கோவலனும் கண்ணகியும் நெடுநிலை மாடத்து இடை நிலத்து இன்புற்றிருந்த பொழுது, கழுநீர், ஆம்பல், குவளை முதலிய நறு மலர்களின் தாது தேர்ந்துண்டு, கண்ணகியின் புரி குழல் அளகத்துப் புகுதற்கு விரும்பித் திரிந்துகொண்டிருந்த சுரும்பொடும் வண்டொடும் சாளரத்தின் வழியாய்ப் புகுந்த தென்றலை அவர்கள் கண்டு மகிழ்ந்து, காதல் மிக்கு, மலரம்புகளோடு காமன் வீற்றிருக்கும் நிலா முற்றத்திற்குச்

சென்றனர். ஆண்டு, அவ்விருவரும் நறும் பூஞ் சேக்கைக்கண் இருந்த காட்சிக்கு,

"முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
கதிரொருங் கிருந்த காட்சி போல"

எனக் கதிரவனையும் கலை மதியத்தையும் உவமை ஆக்கிய திறன் மிக்க பொருத்தம் வாய்ந்தது.

கோவலன், அறிவின் விளக்கமும், வாய்மையும் வீரமும் செறிந்து, கதிரவன் போல் காட்சியளித்தலையும், கண்ணகி, பேரிடர்க்கண்ணும் பெருங் கருணை காட்டி, எல்லோராலும் போற்றப்பட்டு, நன்மகளிராகிய உடுத்திரளிடை, கலைநிறை மதி யெனக் காட்சி யளித்தலையும், சிலப்பதிகாரத்தில் பற்பல இடங்களில் கண்டு மகிழலாம்.

இனி, கோவலன் கண்ணகியாகிய இரு பெரு மக்களின் கூட்டத்தை, அடிகள் இடக்கரடக்கலான் கூறியுள்ள அழகு அறிஞரின் உள்ளத்தை அள்ளும் நன்மைத்து.

"தாரும் மாலையும் மயங்கி" என்ற சொற்றொடர்கள் கலவியைக் கவினுற உணர்த்துகின்றன. இளங்கோ அடிகள் போன்ற முற்றத் துறந்த முனிவராகிய திருத்தக்கதேவர், சீவகனும் காந்தருவதத்தையும் கூடிய கூட்டத்தைக் கூறும் திறனைக் கீழ்வருஞ் செய்யுளிற் காண்க:

"பஞ்சுசூழ் பரவையல்குல் பசுங்கதிர்க் கலாபம் வீங்கச்
செந்தளிர்க் கோதைசோரக் கிண்கிணி சிலம்பொ டேங்க
மைந்தருள் காமன் அன்னான் மகளிருள் திருவ னாளை
அந்தரத் தமரர்பெற்ற அமிர்தெனப் பருகி னானே."

கவிகளுக்கு அரசராய் விளங்கும் கம்ப நாடர், சீதையின் திருமணத்தைக் கூறிய பின்னர், கலவியைக் கூறுவதில் கருத்தைச் செலுத்தாராய், "பாற்கடலன்னதொர் பாயலணைந்தான்" என்று மிக்க பெருந்தன்மையோடு கூறியிருத்தல் ஆழ்ந்து நோக்கற்பாலது.

கூட்டத்தின் பின்னர், கோவலன் தன் இன்னுயிர் அனைய கண்ணகியின் பேரழகைப் பலவாறு பாராட்டுகின்றான். இஃது அகப்பொருளில், "நலம் பாராட்டல்" என்னுந் துறையின் பாற்படும்.

"என் உயிரனைய பாவாய், சிவன் இமையோர் ஏத்த, இளந் திங்களைத் தன் முடியில் சூடியுள்ளான் எனினும், அத்திங்கள் நின்னோடு உடன்பிறப்புண்மையால் திரு நுதல் ஆக என அவன் அதனை உனக்குத் தருக."

"போரிலே வெற்றி பெறும் வீரர்களுக்குச் சேனைத்தலைவன் படை வழங்குவதோர் பண்பு உண்டு. ஆதலான், காமன் தன் ஒரு பெருங் கரும்பு வில்லை இரு கரும் புருவமாக உனக்குக் கொடுத்தருள்க."

"திருப்பாற்கடல் கடையப்பெற்ற காலை, அமுதின்முன் தோன்றிய திருமகள் நீ யாதலான், இந்திரன் தன் வச்சிரப் படையை நினக்கு இடையாகத் திருத்தித் தந்தருள்க."

"முருகவேள், தனது அஞ்சுடர் நெடுவேல் ஒன்றினை, நின் செங்கடை மழைக்கண் இரண்டாகும்படி உனக்கு அளிப்பதற்கு ஒரு காரணமும் இல்லையேனும், யான் இறந்து படுவதைக் கண்ணுற்று காணுவதற்கே இவ்வாறு செய்துளன்"

எனக் கோவலன், கண்ணகியின் கட்டழகைப் பாராட்டுவதிலிருந்து, அப்பெண்ணரசி, இளந் திங்களனைய திரு நுதலையும், விற்போல் வளைந்தொளிரும் இரு கரும் புருவங்களையும், வச்சிராயுதத்தின் இடையை யொத்த சிற்றிடையையும், சுடர் நெடு வேல் போன்ற கூரிய இரு பெருங் கண்களையுமுடைய அழகிற் சிறந்த அணங்கென்று அறிகின்றோம்.

காமன், மகளிராகிய சேனையைக் கொண்டு வெற்றி பெற்று வீறு கொள்கின்றான் என்பது நூல் வழக்காகையால்,

"அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்கும்
படைவழங் குவதோர் பண்புண் டாகலின்
உருவி லாளன் ஒருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாக இக்க"

என்று கோவலன் கூறுவதாக அடிகள் கூறுகின்றனர்.

பின்னரும், கோவலன், கற்பிற் சிறந்த கண்ணகியை நோக்கி, "பெண்மணி, மணி நிறம் வாய்ந்த மாமயிலும் நின் சாயலைக் கண்டு நாணித் தண் கான் அடைய, அன்னப்புள் நின் மென்னடைக்கு அழிந்து, நன்னீர்ப் பண்ணையில் உள்ள நளி மலரில் புகுந்து மறைந்து கொள்ள, சிறு பசுங்கிளியோ, குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைக் கிளவிக்கு வருந்தினவேனும், நின் தீஞ் சொற்களைக் கற்பான் வேண்டி, நின் மலர்க் கையை விட்டு நீங்காது உன்னுடனே உறைகின்றது. ஆதலான், அக்கிளி நின்னால் காக்கத் தக்கது" என்று அப்பெண்ணமுதின் சாயலையும், மென்மை வாய்ந்த நடையையும், சொற்சுவையையும் சிறப்பித்துக் கூறுதல் கற்போர்க்குக் கழி பேருவகையை விளைக்கின்றது.

பின்னும், கோவலன் கண்ணகியை நோக்கி, "நறுமலர்க் கோதாய், நின்னைப் புனைந்து அழகு செய்யும் மகளிர், நின் குற்றமற்ற இயற்கை அழகுக்கு அழகு செய்ய வேறு அணிகளை அணிவதால், அவர்கள் பெறும் பயன் யாது?" எனப் பலவாறு புகழ்ந்து கொண்டே சென்று,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே"

என ஐம்பொறியானும் ஒரே காலத்தில் துய்க்கும் ஐம்புல இன்பத்தைக் கூறியுள்ள திறன் கற்போர்க்குப் பேரின்பத்தை விளைக்கும். இதனையே தமிழ் மறையும்,

"கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள'

எனக் கூறியுள்ளது.

பின்னரும் கோவலன்,

" அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே,
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே,
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை "

எனக் கண்ணகியைப் பாராட்டுவதிலிருந்து அவன் தன் வாழ்க்கைத் துணைபால் கொண்டிருந்த பேரன்பு நன்கு வெளியாகின்றது.

நற்குணக் குன்ருய் விளங்கிய கண்ணகியுடன் சேர்ந்து கோவலன் இல்லறம் நடத்திய பெற்றியை அடிகள்,

" தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்துசெல் வுழிநாள் "

என அழகு படக் கூறியுள்ளார். திருவள்ளுவர்,

" புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை."

எனக் கூறியிருத்தலால், ஒருவன் இல்லத்தில் தருக்கி மகிழ்ந்து வாழ வேண்டுமானுல், அவனது வாழ்க்கைத் துணைவி கற்பிற் சிறந்த காரிகையாய் விளங்க வேண்டு மென்பது தெரிகிறது.

இவ்வகையில் கோவலன் பெருந்தவம் செய்தவன் என் பதில் எட்டுணையும் ஐயமின்று.

கோவலன் தாய், கண்ணகி நடத்தும் இல்லறத்தைக் கண்டு களிக்க வேண்டும் என்னும் கருத்தினளாய்த்தன் மகனையும் மருகியையும் அவர்களுக்கு வேண்டிய பொருள் களோடு தனியே புணர்த்தினள் என்பது,

" வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோடு அறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க "

என வரும் அடிகளிலிருந்து தெரிகிறது. இதனால் பண்டைத் தமிழர் தம் மக்களுக்கு மண வினையை முடித்த பின்னர், அவர்களுடன் இருந்து ஒரு குடும்பமாய் வாழ்க்கையை நடத்தி வரவில்லை யென்பதை அறிகிறோம்.

மனையறம் படுத்த காதையில், கண்ணகி எவ்வாறு இல்லறத்தை நடத்தினாள் என்பதை இளங்கோ அடிகள் கூறவில்லை.

" யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையில்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென் "

என வரும் இரண்டடிகளிலிருந்து கண்ணகியின் இல்லறம் நடத்தும் திறனை எங்ஙனம் அறிதல் கூடும்? ஆனால், கொலைக்களக் காதையில், கண்ணகி,

" அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை "

எனக் கூறுவதிலிருந்து அவளது இல்லற மனப்பான்மை நன்கு தெரிகின்றது. இத்தகைய பெண்ணரசிகளை மனைவியராகப் பெற்றுள்ள ஆடவர்கள் பெருந்தவம் செய்துள்ள பெருமக்களாவர்.

## வெண்பா

" தூமப் பணிகளொன்றித் தோய்ந்தால் எனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத இன்பமெலாந் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவாபோல் நின்று."

# அரங்கம் ஏறலும் தலைக்கோல் எய்தலும்

மாதவி யென்னும் மாதின் பிறப்பும் சிறப்பும் கூறத் தொடங்கிய இளங்கோ அடிகள், முதற்கண் அவளது மரபைக் கூறுகின்றார் :

ஒருகால், இந்திரன், இமையோர் வணங்க வீற்றிருந்தான். அப்பொழுது, தமிழை வளர்த்த தனி முனிவராம் அகத்தியர் அங்கு வந்தார். முனிவரது வருகையால் மன மகிழ்ந்த இந்திரன், உருப்பசியை நோக்கி, "ஆரணங்கே, பாடலோடு ஆடலும் நிகழ்க" எனப் பணித்தான். அக் கணிகையும், விண்ணவர் கோமான் கட்டளைப்படி, பாடலோடு கூடிய ஆடலை அழகுற நிகழ்த்திக்கொண்டிருந்தாள். அவளது ஆடல், பாடல், அழகு என்னும் மூன்றிலும் மூழ்கியிருந்த இந்திரன் சிறுவன் சயந்தன் என்பான் அவளைக் காதல் நோக்கொடு நோக்கினான். அக்கட்டழகியும் சயந்தன்பால் காதல் கூர்ந்து, எதிர் நோக்கி இன்புற்றிருந்த நிலையில், ஆடல், பாடல் முதலிய பலவகைக் கருவிகள் நெகிழ்ந்தன. அவற்றை யெல்லாம் கண்ணுற்ற அகத்திய முனிவர் வெகுண்டு, "உருப்பசி மண்ணிற் போய்ப் பிறக்க; சயந்தன் மூங்கிலாய்த் தோன்றுக" எனச் சபித்தனர். சாபம் பெற்ற சயந்தன், அகத்திய முனிவரது அடி வணங்கிச் சாப விடை கேட்டனன். அக்காலை, முனிவர் சயந்தனை நோக்கி, "உருப்பசி தலையரங்கு ஏறும் பொழுது, நீ அவளது தலைக்கோலாகிச் சாபம் தீர்தி" என்று சாப விடை தந்தனர். அங்ஙனம் உருப்பசி, சயந்தன் ஆகிய இருவரும் மண் மிசைத் தோன்றித் தலையரங்கேறி விண்மிசைச் சென்றனர். அவ் வுருப்பசி மண்ணிடைப் பிறந்த பொழுது அவளது பெயர் மாதவி யென்பது. அம்மாதவியின் வழி வந்தாள் சித்திரா பதியின் மகளாகிய மாதவி. இதனைக் கீழ் வரும் அடிகள் விளக்குதலைக் காண்க:

"தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி............"

மாதவி, அறிவிலும் அழகிலும் அருங் குணத்திலும் சிறந்து விளங்கினாள். மகளது மாண்பைக் கண்ணுற்ற சித்திராபதி, மகளுக்கு ஐயாண்டு நிரம்பிய பின், ஆடல் பாடல்களாகிய அருங்கலைகளில் அவளுக்குப் பயிற்சி யளிக்கத் தொடங்கி, எழாண்டு அப்பயிற்சி யளித்துப் பன்னீராண்டு நிரம்பிய பின், அவளைச் சோழன் கரிகால் பெருவளத்தான் அவை அரங்கேற்ற எண்ணினாள்.

மாதவியின் ஆடல், பாடல்களைக் கூறுமுன், இளங்கோ அடிகள், பல ஆசிரியரின் அமைதிகளைக் கூறத் தொடங்கி, அவற்றுள் ஆடலாசிரியனது அமைதியைக் கூறும் அழகைக் காண்போம்:

"தேசியும் மார்க்கமும் என்று சொல்லப்படா நின்ற இரண்டு வகைப்பட்ட அகக்கூத்தினது இலக்கணங்களை யறிந்து, பலவகைப்பட்ட புற நடங்களையும் விலக்குறுப்புக்களைச் சேரப் புணர்க்கவும் வல்லனாகி, அல்லியம் முதலாகக் கொடுகொட்டி யீறாகக் கிடந்த பதினொரு கூத்துக்களும், அக்கூத்துக்களுக் குரிய பாட்டுக்களும், அவற்றுக்கு அடைத்த வாச்சியங்களின் கூறுகளும், நூல்களில் விதித்த வழியே தெரிந்து, கூத்தும் பாட்டும் தாளங்களும், தாளங்களின் வழி வந்த தூக்குக்களும் தம்மிற் கூடின நெறியையுடைய அகக்கூத்தும், புறக்கூத்து முதலியன நிகழ்த்தும் இடத்துப் பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை யென்று சொல்லப்பட்ட நான்கினையும் நூலி னகத்துக் கொண்ட கூறுபாட்டை அறிந்து, அகக்கூத்து நிகழும் இடத்துக் கூடைக்கதியாகச் செய்த கை, வாரக்கதியுட் புகா மலும், வாரக் கதியாகச் செய்த கை, கூடைக் கதியுட்

புகாமலும், புறக் கூத்தினிடத்து ஆடல் நிகழும் இடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழும் இடத்து ஆடல் நிகழாமலும், குரவைக் கூத்தும் வரிக்கூததும் தம்மில் விரவாத படியுஞ் செலுத்தி அமைந்த ஆடலாசிரியன்."

இனி, இசையாசிரியன் அமைதியைக் காண்போம் :

"யாழ்ப் பாடலும் வங்கியப் பாடலும், இரு வகைத் தாளக் கூறுபாடுகளும், மிடற்றுப் பாடலும், மந்தமாகிய சுரத்தினையுடைய தண்ணுமையும், அகக்கூத்துப் புறக் கூத்துப் பதினோராடல் என்னுங் கூத்துக்களும் வல்லனாய், இவற்றுடனே சேரச் செய்த உருக்களை இசை கொள்ளும்படியும், இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய், இருவகைப்பட்ட பாடல்களுக்கும் பொருளான இயக்கம் நான்கினையும் அமைத்துத் தேசாந்திரங்களின் பாடைகளையும் அறிந்து, அந்தப் பாடைகள் இசை பூணும் படியையும் அறிந்து, இயற் புலவன் நினைவும், நாடகப் புலவன் ஈடும் வரவுகளும், இவற்றுக்கு அடைத்த பாடல்களும் தம்மிற் சந்திக்கும் இடத்துக் குற்றந் தீர்ந்த நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லனயுள்ள இசைப் புலவன்."

இளங்கோ அடிகள், "யாழும் குழலும்" என்றே கூறினர். ஆனல், அவற்றிற்கு விரிவுரை காணப் புகுந்த பெரும் புலவராகிய அடியார்க்கு நல்லார், யாழைப்பற்றியும் குழலைப்பற்றியும் பலபல செய்திகளை நமக்கு அறிவித்துள்ளார். அவற்றுள் சிலவற்றை யுணர்ந்து மகிழ்வாம்:

"யாழ் நால் வகைப்படும். அவை, பேரியாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என்பன. இவை நாலும் பெரும்பான்மைய; சிறு பான்மையான் வருவன பிறவும் உள. இந் நால் வகை யாழிற்கும் நரம்பு கொள்ளு மிடத்துப் பேரி யாழிற்கு இருபத் தொன்றும், மகர யாழிற்குப் பத்தொன்பதும், சகோட யாழிற்குப் பதினலும், செங் கோட்டி யாழிற்கு ஏழும் கொள்ளப்படும்."

"குழல்-வங்கியம்; அதற்கு மூங்கில், சந்தனம், வெண் கலம், செங்காலி, கருங்காலி யென ஐந்தும் ஆம். இவற்றுள்,

மூங்கிலிற் செய்வது உத்தமம்; வெண்கலம் மத்திமம்; ஏனைய அதமமாம்."

இனிக் கவிஞன் அமைதியைக் காண்போம் :

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் வல்லனாய், நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து, மாற்றோர் செய்த வசை மொழி யறிந்து, நாத்தொலை வில்லா நன்னூற் புலவன் கவிஞனாவான்.

இனித் தண்ணுமை ஆசிரியன் அமைதியை உணர்வாம்:

"எல்லாக் கூத்துக்களும், எல்லாப் பாட்டுக்களும், எல்லா இசைகளும் வட எழுத்து ஒரீஇ வந்த எழுத்தாலே கட்டப் பட்ட ஓசைக் கட்டளைக் கூறுபாடுகளும், எல்லாப் பண்களும், இருவகைத் தாளங்களும், எழுவகைத் தூக்குக்களும், இவை யிற்றின் முடங்கலும், இயற் சொல், திரி சொல், திசைச் சொல், வட சொல் என்னுஞ் சொற்களும் என்று சொல்லப் பட்டனவற்றை யுணர்ந்து, ஓர் உருவை இரட்டிக்கிரட்டி சேர்த்த விடத்து நெகிழாதபடி நிரம்ப நிறுத்தவும், அவ் விடத்துப் பெறும் இரட்டியை ஒப்பாக உருவானவழி, நிற்கு மானம் நிறுத்திக் கழியுமானம் கழிக்கவும் வல்லனாய், இப்படி நிகழ்ந்த உருக்களில் யாழ்ப் பாடலும், குழலின் பாடலும், கண்டப் பாடலும் இயைந்து நடக்கிறபடி, கேட்போர் செவிக் கொள அமைந்த கரணத்தால் குறியறிந்து சேர வாசித்தலும், மற்றைக் கருவிகளின் குறை நிரப்புதலும், அக் கருவிகளின் மிகுதி யடக்குதலும், ஆக்குமிடத்தும், அடக்கு மிடத்தும், இசை யின் இரந்திரம் தோன்றாதபடி செய்தலும், செய்யுமி டத்துக் கைத் தொழில் அழகு பெறச் செய்து காட்டலும் வல்லனாய், அழகு தக்க தண்ணுமைக் கருவியினையும் அரிய தொழிலினை யுமுடைய ஆசிரியனே தண்ணுமை ஆசிரியன்."

இனிக் குழலோன் அமைதியை அறிவாம்:

"நூல்களிற் சொன்ன முறைமையாலே சித்திரப் புணர்ப்பும் வஞ்சனைப் புணர்ப்பும் என்று சொல்லப்பட்ட இரண்டு கூற்றினையும் அறிந்து, பாடலாசிரியனை யொத்த

அறிவினை யுடையவனாகி, வங்கியத்து விரல் உளர்ந்து ஊதும் துளைகள் சுட்டு விரல் முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணம் ஆதலானும், சிறு விரல் முதலாக விட்டுப் பிடிப்பது அவரோகணம் ஆதலானும், இரண்டு கூறும் இப்படிச் செய்தல் வர்த்தனையாகலான், இப்படியால் நூற்று மூன்று பண்ணீர்மைகளையும் தம் நிலை குலையாமல் காட்ட வல்லனாய், பதினாற் கோவையினிடத்துக் குரல் நரம்பு இரட்டிக்க வரும் மேற் செம்பாலையையும், இவை போல அல்லாத பாலைகளையும் இசை நூல் வழக்காலே இணை நரம்பு தொடுத்துப் பாடும் அறிவினையும் உடையனாய், பண்ணுதல் அமைந்த முழவின் கண் எறியினை யறிந்து, தண்ணுமை முதல்வனுடன் பொருந்தி, வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்து, அதன் வழியே இசைக்காரன் பாடிய பாட்டின் இயல்பை, பாடுகின்ற பண் வரவுகளுக்குச் சுரம் குறைவு படாமை நிறுத்தி, அந்தப்பண்ணுக்கு அயல் விரவாமல் நோக்கி, வண்ணம் முதலாகக் காட்டப்பட்ட பாடலில் இயன்ற அழகெல்லாம் நிரம்பக் காட்டி, முற்கூறிய முதலும் முறையும் முதலாய பண்ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்ப வைத்து, முதல் நடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்படும் இயக்கம் நான்கினும், முதல் நடை மிகவும் தாழ்ந்த செலவினை உடைத்தாகலானும், திரள் மிக முடுகிய நடையினை உடைத்தாகலானும், இவை தவிர்ந்து, இடைப்பட்ட வாரப் பாடல் சொல்லொழுக்கமும் இசை யொழுக்கமும் உடைத்தாகலானும், கூடைப்பாடல் சொற்செறிவும், இசைச்செறிவும் உடைத்தாகலானும், சிறப்பு நோக்கி அவ்விரண்டினுள்ளும் வாரப்பாடலை அளவு நிரம்ப நிறுத்த வல்லனாய், பாடலினிடத்துச் சொல் நீர்மைகளின் எழுத்துக்கள் சிதையாமலே எழுத்தெழுத்தாக இசைக்கும் குழலோன்."

யாழாசிரியன் அமைதியை அறிவோம் :—"ஆயப்பாலையாய் நின்ற பதினாற் கோவை, கோலினது செப்பமுடைத்தாய்ப் பெண்டிர்க்குரிய தானமுடைய பாடல் இயல்பு ஒத்து அமைந்த சிறப்புடைத்தாகலான், இதிலே செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை எனப்பட்ட எழு பாலையினையும் இணை நரம்பு

தொடுத்து, நிரம்ப நிறுத்திக் காட்டல் காரணமாக, வட்டப் பாலையின் முடிவு தானமாய் வலிந்த நிலைமையினையுடைய தாரம் பெற்று இரண்டலகில் ஓரலகையும், இப்பாலையின் முதல் தானமாய் மெலிவின் நிற்கும் குரல் நரம்பு பெற்ற நால் அலகில் இரண்டலகையும், தார நரம்பில் அந்தரக் கோலிலே கைக்கிளையாக நிறுத்தத் தாரந்தான் கைக்கிளையாயிற்று. அந்த நரம்பில் ஒழிந்த ஓரலகையும் பண்டை விளரியிலே கூட்ட, அவ்விளரி துத்த நரம்பாயிற்று. இப்படிப் பன்னிருகால் திரிக்கப் பன்னிரு பாலையும் பிறக்கும்.

இதனைப் பெண்டிர்க்குரிய தானமாகிய பதினாற் கோவையிலே பொருந்தக் கூட்டவேண்டும். உழை முதற் கைக்கிளை இறுதியாக, மெலிவு நான்கும் சமம் ஏழும் வலிவு மூன்றுமாய் உழை முதலாகச் செம்பாலை ஆயது. தாரம் முதலாகப் பெறுமுறையாய் வந்தபடியே நீங்காமல், கைக்கிளை குரலாகப் படுமலைப்பாலையும், துத்தம் குரலாகச் செவ்வழிப்பாலையும், குரல் குரலாக அரும்பாலையும், தற்கிழமை திரிந்தபின் முன்பிற் படியே தாரம் குரலாகக் கோடிப்பாலையும், விளரி குரலாக விளரிப்பாலையும், இளி குரலாக மேற்செம்பாலையுமாய், மேற் செம்பாலை இளி நரம்பு இரட்டித்த நிலைமையினை யுடைத்தாய் இப்படிச் சமைந்த பதினாற் கோவைப்பாலை நிலையில், இப் பதினாற் கோவைப்பாலை நிலையிலும் பண்ணின்ற நிலையினும் இரட்டித்த குரல் குரலாகிய அரும்பாலையும், இளி குரலாகிய மேற்செம்பாலையும் போல் அல்லாதன ஐந்து பாலையும், உழை குரலாகச் செம்பாலைக்கு உழை பெய்தும், கைக்கிளை குரலாகப் படுமலைக்குக் கைக்கிளை பெய்தும், துத்தம் குரலாகச் செவ்வழிக்குத் துத்தம் பெய்தும், தாரம் குரலாகக் கோடிப்பாலைக்குத் தாரம் பெய்தும், விளரி குரலாக விளரிப்பாலைக்கு விளரி பெய்தும் பாடப்படும்.

யாழினிடத்து அரும்பாலை முதலாயின இடமுறை மெலியவும், குழலினிடத்துக் கோடிப்பாலை முதலாயின வலமுறை மெலியவும் பாடப்படும்.

இப்படியால் வலிவும் மெலிவும் சமனும் எனப்படா நின்ற தான நிலையினையுடைய இசைக் கூறுபாடுகளுக்கெல்லாம் நரப் படைவு கெடாமலும், பண்ணீர்மை முதலாயின குன்றாமலும் புணர்க்க வல்லனாய், அப்புணர்ப்பிற்கு அமைந்த எழுத்துக்களால் இசை செய்ய வல்ல யாழாசிரியன்."

அரங்கின் அமைதியை யறிவாம் :— சிற்ப நூலாசிரியர் வகுத்த இயல்பின் வழாது, நாடக அரங்கு செய்தற்கு நிலக் குற்றங்கள் நீங்கின இடத்திலே நிலம் வகுத்துக் கோடல் வேண்டும் என்கிறார் அடிகள். அதன் பின்னர், அந்நிலத்தை அளத்தற்குக் கோல் கொள்ளும் வகையையும் அவர் குறிக் கின்றார்: பொதியின் மலை முதலாய புண்ணிய மலைச்சார்பில் நீண்டு வளர்ந்த மூங்கிலில் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணாக வளர்ந்தது கொண்டு, உத்தமன் கைப் பெரு விரலில் இருபத்து நாலு கொண்டது ஒரு கோலாக நாடக அரங்கஞ் செய்ய அளக்குங் கோல் நறுக்கி, அக்கோலால் எழு கோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒரு கோல் குறட்டுயரமும் உடைய தாய் அரங்கம் அமைய வேண்டும். தூண்மீது வைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கு இட்ட பலகைக்கும் இடை நிலம் நான்குகோல் உயரம் இருத்தல் வேண்டும்.

இத்தகைய அரங்கிற்கு உட்புகவும் வெளிப்படவும் இரண்டு வாயில்கள் அமைந்திருத்தல் வேண்டும். இவ்வண்ணம் அமைக்கப்பெற்ற நாடக அரங்கில், நால்வகை வருணப் பூதரை யும் எழுதி, யாவரும் புகழ்ந்து வணங்கும்படி மேல் நிலத்தே வைக்க வேண்டும். பின்னர், தூண்களின் நிழல் நாயகப் பத்தியின் கண்ணும் அவையின் கண்ணும் படாதபடி, மாட்சிமைப் பட்ட நிலை விளக்குகள் நிறுத்த வேண்டும். நாடக அரங்கில் மூவகைப்பட்ட திரைகள் விடவேண்டும். அத்திரைகள் ஒரு முக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி எனப் பெயர் பெறும். இத்தகைய அரங்கு, சித்திரத் தொழில் அமைந்த விதானத்தையுடையதாய், முத்து மாலைகளால் அலங் கரிக்கப் பெற்று, காண்போர் கண்ணைக் கவர்ந்து விளங்கும்.

இனித் தலைக்கோல் அமைதியை அறிவோம் :— பெரும் புகழ் பெற்று விளங்கிய பகையரசர், போரில் புறங்காட்டியவழி, அவரது வெண்கொற்றக் குடைக்காம்பைத் தலைக்கோலுக்காக எடுத்துக் கொள்ளலும் உண்டு. அஃதில்லையேல், புண்ணிய மலையில் பொருந்தி வளர்ந்த சிறந்த மூங்கிலைத் தலைக்கோலுக்காக எடுத்துக்கொள்ளலாம். அல்லது, பகையரசர் மதிற்புறத்து வெட்டின மூங்கிலும் தலைக்கோலுக்காம். இவற்றுள் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுத்துக் கண்கள் தோறும் நவமணிகள் இழைத்து, இடை நிலத்தைச் சாம்பூநதம் என்னும் சீரிய பொற்றகட்டால் வேய்ந்து, பின், அத்தலைக்கோலைத் தேவேந்திரன் மகன் சயந்தனாக நினைத்து, வழிபட்டு அரண்மனையில் வைத்தல் மரபு. நாடகக் கணிகை தலைக்கோல் கொள்ளுங்கால், நன்னாளில் நாடக அரங்கில் தலைக்கோலை வைத்து, புண்ணிய நதிகளிலிருந்து பொற்குடத்திலே நீரை முகந்து வந்து, தலைக்கோலை அந்நீரால் ஆட்டி, மாலை சூட்டி, அரச யானையின் கையில் வாழ்த்திக் கொடுப்பர்.

பின்னர், வீர முரசு முதலிய பல முரசுகளும், பல வாத்தியங்களும் ஒலிக்க, அரசொடு ஐம்பெருங் குழுவும் தேரை வலஞ்செய்து, அத்தேரில் நின்ற கவியின் கையிலே அத்தலைக் கோலைக் கொடுப்ப, அவன் தேரினைக்கொண்டு ஊரை வலமாக வந்து, நாடக அரங்கில் புகுந்து, தலைக்கோலை எதிர்முகமாக வைப்பன்.

இனி, மாதவி அரங்கிற் புகுந்து ஆடும் இயல்பைக் கண்டு மகிழ்வாம் :—அழகிலும் அமைப்பிலும் சிறந்து, காண்போர் கட் புலனுக்குப் பெரு விருந்தாய் விளங்கிய நாடக அரங்கில், வரிசைக்கேற்ற இருக்கை முறைகளில் அரசன் முதலியோர் வந்து அமர்ந்தனர். இசைக் கருவியாளர் நிற்றற்குரிய முறைப் படி நின்றனர். பின்னர், ஆடல், பாடல், அழகுகளிற் சிறந்து விளங்கிய நாடகக் கணிகையாகிய மாதவி, வலக்கால் வைத்து அரங்கில் ஏறிப் பொருமுக எழினிக்கு நிலையிடமான வலப் பக்கத்துத் தூணிடத்தே சேர்ந்தனள். மாதவி அரங்கில் ஏறின வண்ணமே, ஆடி முதிர்ந்த தோரிய மடந்தையரும் ஒரு

முக எழினிக்கு நிலையிடமான இடப்பக்கத்துத் தூணைச் சார்ந்து, நன்மை பொலியவும் தீமை நீங்கவும் தெய்வப் பாடல் இரண்டு பாடினர். அத்தெய்வப் பாடலின் இறுதியில் இசைக்கருவிகள் எல்லாம் கூடி இசைத்த விதத்தைக் காண்க :—

குழலிசை தழுவி யாழிசை நின்றது. யாழிசை தழுவி மத்தளத்தின் இசை நின்றது. மத்தளத்தின் இசையைத் தழுவி முழவிசை நின்றது. முழவிசையோடு கூடி இடக்கை இசைத்தது. இடக்கையோடு இசைக் கருவிகள் அனைத்தும் பருந்தும் நிழலும் போலத் தழுவி யிசைத்தன.

மாதவி, தேசி, மார்க்கம் என்னும் இருவகைக் கூத்துக் களையும், நாடக நூல் கூறும் முறைமை வழுவாது ஆடி முடித்த பின்னர், தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்னும் மூன்று கூறுபாட்டினுள், நாட்டியம் என்னும் புற நடத்தை, நூல் களிற் சொன்ன முறைப்படி அவிநயித்துப் பாவகம் தோன்றப் பொன்னாலான பூங்கொடியொன்று நடித்தாற்போல் நடித்து, அரங்கில் அமர்ந்திருந்த அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டாள்.

இங்குச் சிந்தாமணியில் வரும் அனங்கமாலையின் அபிநயத்தோடு கூடிய அரிய நடனம் ஒப்பிட்டுப் பார்த்தற்குரியது.

"தோற்பொலி முழவும் யாழும் துளைபயில் குழலும் ஏங்கக்
காற்கொசி கொம்பு போலப் போந்து கைத்தலங்கள் காட்டி
மேற்பட வெருவி நோக்கித் தானையை விட்டிட்டு ஒல்கித்
தோற்றினள் முகஞ்செய் கோலம் துளக்கினள் மனத்தை
யெல்லாம்.'

அரசன், மாதவியின் அழகையும் ஆடலையும் கண்ணாற்கண்டு களித்து, பாடலைக் காதாற் கேட்டுக் களித்து, அந் நங்கையின் தகுதிக் கேற்ப, தன் மாலையுடனே ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் தலைக்கோலும் ஈந்தான்.

'விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள்'

என்பதிலிருந்து, நாடகக் கணிகையர்க்குத் தலைவரிசை ஆயிரத் தெண் கழஞ்சு பொன் பரிசம் பெறுகை நூல் வழக்கென்றும், இப் பொன்னை ஒரு நாளைக்குப் பரிசமாக என்று அரசன் ஈந்தான் என்றும் அறிகின்றோம்.

மான் அமர் நோக்கி மாதவி, அரசன் தந்த மாலையை ஒரு கூனி கைக்கொடுத்து, அவளை நகர நம்பியர் திரியும் வீதியில் நிறுத்தினள். அக்கூனி, "இம்மாலையின் விலை ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன் ஆகும். அவ்விலைகொடுத்து இதனைப் பெறுவோர் மாதவிக்கேற்ற மணாளராவர்" என மாலைக்கு விலை கூறி நின்றாள். மாதவியின் பேரழகால் மதியிழந் திருந்த கோவலன், அம்மாலையை வாங்கி, மாதவியின் மணமனை புகுந்து, கற்பிற் சிறந்த காதலியாகிய கண்ணகியையும் தன் வீட்டையும் மறந்து, மாமலர் நெடுங்கண் மாதவியோடு கூடி மயங்கி, அவளை விட்டுப் பிரியா விருப்புடன் இருந்தான்.

### வெண்பா

"எண்ணும் எழுத்தும் இயலைந்தும் பண்ணான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும்—மண்ணின்மேற்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடரங்கின் வந்து."

# மாதவியின் இன்பமும் கண்ணகியின் துன்பமும்

உலகெல்லாம் ஆண்ட ஒரு தனித் திகிரியோனாகிய பகலவன் மறைய, அந்திப்பொழுது வந்துற்ற அழகை இளங்கோ அடிகள் அழகுறத் தீந்தமிழ்ச் சொற்களால் தீட்டுகின்றார்.

பகலவனை அரசனாகவும், நில மகளைக் கோப்பெருந்தேவி யாகவும் உருவகஞ் செய்த அடிகள், நில மகள் தன் கொழுந னாகிய கதிரவனை இழந்து புலம்புவதாகச் சிலேடை அணியில் கூறியுள்ளது கற்போர்க்குக் கழிபெருங் களிப்பை விளைக்கும்.

"உலகம் முழுதாண்ட என் உயிர்க் காதலனைக் காணேன். அணி நிலா விரிக்கும் திங்கள் அஞ்செல்வன் யாண்டுளனோ!" என்று நில மகள் தன் நான்கு திசைகளாகிய முகங்களும் ஒளி மழுங்கி, மலர்களாகிய கண்களில் நீர் வார, உடல் முழு வதும் பனித்து, மனம் வருந்தி யிருந்தனள். அப்பொழுது காவலனைக் கடவுளெனக் கொண்டு அன்பு செய்த குடிமக்கள் கண்ணீர் விட்டுக் கலங்கவும், மன்னவனுக்கு மாறாய் ஒழுகும் மாக்கள் மன மகிழவும், குறுநில மன்னன் வந்து தோன்றிய தோற்றம்போல அந்திப் பொழுது வந்து தோன்றிற்று.

அந்திப் பொழுதின் வருகையை, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் கூறுவதைக் காண்க :

" அமரக மருங்கில் கணவனை யிழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிர்ஆற்றுப் படுத்த முதிராத் துன்பமோடு
அந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத்தனள்............"

போர்க்களத்தில் கணவனை யிழந்து தம்மவர்களிடம் புகும் ஒரு பெண்போல், கதிரவனைப் போக்கிய நீங்காத் துன்பமொடு அந்தி யென்னும் அணங்கு வந்து தங்கினள்.

தெய்வப்புலமை வாய்ந்த கம்பர், "தென்றலாகிய பாசத் தையும், செவ்வானமாகிய செம்மயிரையும், இருளாகிய கரு

நிறத்தையும் உடைய அந்தி மாலையாம் கருநிறச் செம்மயிர்க் காலன்" என அந்திப் பொழுதை அந்தகனாக உருவகஞ் செய்த அருமை பெரிதும் பாராட்டற்பாலது.

இத்தகைய அந்திப் பொழுதில் நிகழும் நிகழ்ச்சிகளை அடியிற்கண்டு அக மகிழ்வாம்:

எப்பொழுதும் தம் மனக் கோயிலில் இருத்திக் கண்கண்ட கடவுளாக ஏத்தி வரும் தம் கொழுநரைப் பிரிந்த கற்பின் செல்விகள் அந்தி மாலையில் கடுந்துயர் உற்றனர். காதலரைப் புணர்ந்தோர் கழி மகிழ்வு எய்தினர். கோவலருள் ஆடவர் புல்லாங் குழலில் முல்லைப் பண்ணை முழக்கினர்; மகளிர் தம் கூந்தலில் முல்லை மலரை முடித்தனர். சிறு காற் றெனுஞ் செல்வன், அரும்புகளில் அடங்கியுள்ள நறுமணத் தைக் கவர வரும் அறு கால் சிறு பறவையாகிய வண்டினை எறிந்து, அம்மணத்தை அள்ளியள்ளி அகன்ற வீதியில் தூற்றி னன். ஒளியார்ந்த வளையணிந்த மகளிர் மணி விளக்கெடுத்து மனையை விளக்கினர். அப்பொழுது வானத்தில் மதியம் தோன்றி, மாலைக் குறும்பெறிந் தோட்டிப் பால்போன்ற தன் வெண்கதி பரப்பி அரசு புரிந்தது. இதனை இளங்கோ அடிகள்,

"செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்திவானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்
பான்மையில் திரியாது பாற்கதிர் பரப்பி
மீனர சாண்ட"

என மிக்க அழகுறக் கூறியுள்ளார். ஈண்டு மதி குலத்துத் தோன்றிய தென்னர் எனக் கூறாது, தென்னர் குலம் தோன் றிய அந்தி வானத்து வெண்பிறை எனக் கூறியதற்குரிய காரணத்தை அடியார்க்கு நல்லார் தம் நுண்ணறிவான் ஆழ நினைந்து அழகு பெறக் கூறியுள்ளமையைக் கீழே காண்க :—

"சோம குலத் தென்னர் என்னாது, தென்னர் குலச் சோமன் என்றார்; அவன், அளியின் ஒத்து, வலியினும் தெறலினும் ஒவ்வாமையானும், குறைவும் நிறைவும் மறுவும்

உடைமையானும், இவர்க்கு அவை இன்மையானும் உயர்ச்சி நோக்கி."

கதிர் நிலாச் செல்வன், கருணையால் பாண்டியரை ஒக்கின்றான். எனினும், பாண்டியரது வன்மையும் பகைவரை யழிக்கும் திண்மையும் அவனுக்கில்லை. பிறை வளர்வதும் குறைவதும் போன்ற செயல் பாண்டியரிடம் இல்லை. தண் கதிரோன் களங்கமொடு காண்கின்றான். பாண்டியரோ களங்க மற்றுக் கவினுற விளங்குகின்றனர். இவற்றான், பாண்டியர்க்குள்ள உயர்வு நோக்கிச் சோம குலத்தென்னர் என்னாது, தென்னர் குலச் சோமன் என்றார் என்பது அடியார்க்கு நல்லார் உரைக்கு விளக்கமாகும்.

இனி, மனத்திற்கு மகிழ்ச்சியை விளைக்கும் இத்தகைய மதியின் விளக்கத்தில், மாதவி, கோவலற்குக் கலவியும் புலவி யும் அளித்துக் களிப்பினை யூட்டும் திறனைக் காண்பாம் :

கூட்டத்திற்கு முன்னர், முல்லை, மல்லிகை முதலிய மண மார்ந்த நறு மலரானய பள்ளியில் கோவலனும் மாதவியும் பொலிந்து காட்சி யளிக்கின்றனர். அக்காதலர் இருவரும் களிப்புடன் இருக்கும் நிலா முற்றத்தைக் கூற வந்த முனிவர்,

"அந்துகில் மேகலை யசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்து"

எனக் கூட்டத்திற்குக் காரணமாயுள்ளது அந் நெடுநிலா முற்றம் என இடக்கரடக்கலான் கூறியது மனத்திற்கு மகிழ்ச் சியை யளிக்கின்றது.

"கலவியும் புலவியும் காதலற் களித்தாங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரிக்
கோலங் கொண்ட மாதவி"

என்ற அடிகள் ஆழ்ந்து நினைத்தற்குரியன.

புலவியின் சிறப்பைத் தெய்வப் புலமைத் திருவள்ளுவர், கற்பியலின் இறுதியில் மூன்றதிகாரங்களான் நுண்ணறிஞர்க் குப் பெரு விருந்தெனை அருளிச் செய்துள்ளார்.

புலவியில்லாக் கலவி உப்பில்லா உணவு என்பதை "உப்பமைந்தற்றால் புலவி" என்றும், "புலத்தல் போல இன்ப மளிக்க வல்ல சுவர்க்கம் உண்டோ?" என்றும், காம நுகர்ச்சிக்கு இன்பமளிப்பது ஊடலே, அவ் வூடலுக்கு இன்பமளிப்பது கூடலே யென்னும் கருத்தமைய,

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்றும் செந்நாப் புலவர் கூறியுள்ளது பேரறிவாளர்க்குப் பேருவகை அளிக்க வல்லது.

திருவள்ளுவர் கூறிய வண்ணம், மாதவி யென்னும் மாண் புடை மங்கை, தன் காதலனாகிய கோவலற்குக் கலவியும் புலவி யும் கலந்தளித்துக் களியாட்டயர்ந்து அவனைக் களிப்பித்தாள்.

மாதவிபோல் கொழுநரோடு இருந்த மகளிர் எல்லாம் கோடைக்காலமாகையால் அகிற்புகை துறந்து, தண்மை யளிக்கும் சந்தனம் விரும்பிச் செழும் பூஞ்சேக்கையில் ஆவி போன்ற கொழுநரது அகலத்தில் ஒடுங்கி இன்புற்றுக் களித் துயில் எய்தினர்.

இனி, கற்புக்கரசியாம் கண்ணகியின் நிலையைக் காண் பாம் :

குல மகளிர் கொழுநரைப் பிரிந்துறையும் காலத்தில் தம்மை அணிகளான் அழகு செய்வதில்லை. கற்பென்னும் கவினுறு ஆடை உடுத்து, அன்பென்னும் அருமலர் சூடி, நாணம் என்னும் நறுஞ்சாந்தினை மேற்கொண்டு, நற்குண நற்செய்கை யென்னும் நல்லணி பூண்ட நங்கையாம் கண்ணகி பிற அணிகளைப் பேணுவளோ?

அரிவையர்க்கு அழகளிக்கும் அணிகள் கண்ணகியை அடைந்து கவின் பெற்று ஒளிர்ந்தன. அவ்வணிகளான் அவட்குச் சீரும் சிறப்பும் உண்டாகவில்லை யென்று இளங்கோ அடிகள் கூறியுள்ள பகுதி, படித்துப் படித்து இன்புறற் பாலது. பெருங்குணங்களே கண்ணகியை விரும்பி யடைந்து

வீறு பெற்றன எனின், அணிகள் அவளை யடைந்து ஏன் சிறப்புறு?

கண்ணகியின் சிறிய அடிகள், தம்மை அணிந்து கொள்வதால் உண்டாகும் சிறப்பைச் சிலம்புகள் பெறு தொழிந்தன. அவளது இடை, தன்னை அணிவதால் விளையும் சிறப்பை மேகலை பெறு தொழிந்தது. அவளது முகம், தன்னை யணிவதால் வரும் சிறப்பைச் சிறு வியர்வை பெறு தொழிந்தது. அவுளது கயல்போலும் கண்கள், தன்னை அணிவதால் வரும் சிறப்பை அஞ்சனம் பெறுது ஒழிந்தது. அவளது நெற்றி, தன்னை யணிவதால் வரும் சிறப்பைத் திலகம் பெறுமல் இழந்தது. அவளைக் கூடுவதால் பெறும் ஒளியார்ந்த புன்னகையைக் கோவலன் பெறுது இழந்தான். அவளது கூந்தலை அடைவதால் பெறும் மணத்தைப் புழுகு நெய் பெறுது ஒழிந்தது. இவைகளின் நிலை இவ்வண்ணமாக; கண்ணகி, நிறையெனும் அணியினும் வேறணி வேண்டாளாய்ச் செயலற்ற மனமொடு மறுகி யிருந்தாள்.

ஈண்டு, இராமனைப்பிரிந்து அசோக வனத்தில் இருந்த சீதையின் வடிவமாம் சொல்லோவியத்தை மனக்கண்ணுற் கண்டு மகிழ்வாம் :

> “ஆவி யங்குகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
> தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
> தேவு தெண்கடல் அமிழ்துகொண் டனங்கவேள் செய்த
> ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்.”

சீதை, புகைபோல் மெல்லிய அழகிய ஆடை ஒன்றையே யன்றி வேறோர் ஆடையைப் புனைந்தறியாள். அவளது மெய், சிறகுகளையுடைய அன்னப் பறவைகள் தங்குதற்குரிய மென்மையாகிய தண்ணீரில் தோயவில்லை. அவளது உருவம், கடலிலிருந்து தோன்றிய அமிழ்து கொண்டு மன்மதன் செய்த ஓவியம் புகையுண்ட தன்மையை ஒத்திருந்தது.

கோவலனைப் பிரிந்து வருந்துகின்ற கண்ணகி போன்றே, காதலரைப் பிரிந்த கற்பிற்சிறந்த மாதரெல்லாம் ஊதுகின்ற

துருத்தியின் உலே மூக்குப்போல, அழலெழப் பெருமூச்செறிந்து, இளவேனிற் காலத்துக்கு அமைந்த பள்ளியில் பொருந்தாது, குளிர் காலத்திற்குரிய பள்ளியை அணுகினர். பின்னர், தென்றலும் நிலாவும் புகாவண்ணம், பலகணிகள் எல்லாவற்றையும் அடைத்து அணி துறந்து, துணை புணர் அன்னத்தின் வயிற்று மயிரால் ஆன பல்வகை யணைமிசை யிருந்து நெடுங் கண்ணீர் துளித்தனர்.

இரவில் பொய்கையிலுள்ள குவளை மலர்கள் மலர்ந்து விளங்கிய காட்சியை இளங்கோ அடிகள் உருவக அணியான் உரைத்துள்ள திறன் மிக அழகிது.

அன்னமாகிய மெல்லிய நடையையும், ஆம்பல் மலரின் நறுமணம் நாறும் தாமரையாகிய செவ்வாயினையும், அறலாகிய கூந்தலையும் உடைய நன்னீர்ப் பொய்கை யென்னும் நங்கை, குவளைக் கண்மலர் விழிக்கும் வண்ணம் வண்டாகிய பள்ளி யுணர்த்துவான், நோதிறம் என்னும் பண்ணைப் பாடினன். பறவைகளின் ஒலியாகிய முரசுடனே, கோழியும் சங்கமும் முறையே ஒலிப்ப, ஊர் துயிலெழுந்தது. அவ்வாறு ஊர் துயிலெழும் வைகறை வரை, காமன், மலரம்பொடு கரும்பு வில்லேந்தி, ஒரு கணப்பொழுதும் உறங்காளுய்த் திரிந்துகொண் டிருந்தமையான் நகரம் அவனது காவலால் நனி சிறந்தது.

## வெண்பா

“ கூடினர் பால்நிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோல் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்கும் கங்குற் பொழுது.”

# இந்திர விழா

உலக விளக்கத்திற்குக் காரணனாய் ஒளிரும் பரிதியஞ் செல்வன், உதய மால்வரை யுச்சித் தோன்றி, மலர் கதிர் பரப்பி, நில மடந்தையின் இருட்படாம் போக்கி, உயிர்களை ஊக்குகின்றான். "மண் மடந்தை, கடலாடை யுடுத்து, பொதியம், இமயம் என்னும் இரு பெருமலையாம் கொங்கை யகத்து, யாறாகிய முத்து மாலை யணிந்து, மழை யெனும் கூந்தல் அடர்ந்து விளங்க, இருளாடை போர்த்து, இன்பம் துறந்து துன்புற்றிருந்தாள்" என இளங்கோ அடிகள் கூறுகின்றார். இச்செயல் கொழுநனைப் பிரிந்துள்ள பத்தினிப் பெண்டிரின் பான்மையை நினைவூட்டுகின்றது. அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையிலும், சூரியனது மறைவிற்குப்பின் இரு நிலமடந்தை, செம்மலர்க் கண்கள் நீர்வார, அல்லலுற்றாள் என வந்துள்ளமை காண்க.

காவிரிப்பூம்பட்டினம், மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் என இரு பகுதியாய்ப் பிரிந்துளது. முதற்கண் மருவூர்ப்பாக்கத்தின் மாண்பினைக் காண்போம் :

மருவூர்ப்பாக்கத்தில் யவனர் இருக்கையும், செல்வம் காரணமாகத் தம் பிறப்பிடம் விட்டு வந்துள்ள பரதேசிகளின் இருக்கையும் குறிக்கப்பெற்றுள. யவனர் என்பாரை அரும்பத வுரையாசிரியர் சோனகர் என்கின்றார். அடியார்க்கு நல்லார் அன்னாரை மிலேச்சர் என்கின்றார்.

> **" கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்**
> **பயனறவு அறியா யவனர் இருக்கையும் "**

என்னும் ஈரடிகளான் யவனரது செல்வச் சிறப்பு நன்கு விளக்க முறுகின்றது.

வண்ணம், சுண்ணம், சாந்து, பூ முதலியன விற்போர் திரியும் நகர வீதியை மருவூர்ப்பாக்கத்தில் காண்கின்றோம். ஆடை நெய்வோரைப்பற்றிக் கூறுமிடத்து, இளங்கோ அடிகள், "நுண்வினைக் காருகர்" என்கின்றார். பண்டைக்காலத்தே,

பட்டு நூலானும், எலி மயிரானும், பருத்தி நூலானும் நுண்ணிய வினையார்ந்த ஆடைகள் நெய்யப்பெற்றன என்பது இதனால் புலனாகின்றது.

மருவூர்ப்பாக்கத்திலுள்ள மற்றொரு வீதியில், மாசறு முத்தும் மணியும் பொன்னும் அளந்து இவ்வளவென முடிவறியாத வண்ணம் தலைமயங்கியுள்ள தன்மையால், காவிரிப் பூம்பட்டினம், மக்கள் நாடாமல் வளந்தரு நாட்டிற்கு எடுத்துக் காட்டு என இயம்பலாம்.

கவிரிப்பூம்பட்டினத்தில் பண்டை நாளில் தொழில் வளம் மிகச் சிறந்தோங்கி விளங்கிற்று என்பதைக் கீழ்வரும் அடிகளால் கண்டு தெளிக :

"கஞ்ச காரருஞ் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலம் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கிப்
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்."

மருவூர்ப்பாக்கத்தில் பெரும் பாணர் இருக்கை காணப் படுகின்றது. இவர்கள், குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளைக் குற்றமின்றி இசைத்து, மக்களை இன்பக்கடலுள் ஆழ்த்துவர். "அரும் பெறல் மரபின் பெரும் பாண்" என இவர்கள் இளங்கோ அடிகளால் சிறப்பிக்கப்பட்டுளர்.

இனி, பட்டினப்பாக்கத்தின் பண்பைக் காண்பாம்:

"பீடுகெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பின் பட்டினப் பாக்கமும்"

என இளங்கோ அடிகள் பட்டினப்பாக்கத்தைப் புகழ்வதிலிருந்து, அப்பாக்கத்தைப்பற்றி அடிகள் கொண்ட விழுமிய எண்ணம் நன்கு புலனாகின்றது.

பட்டினப்பாக்கத்தில் உள்ள பீடு கெழு சிறப்பின் பெரி யோராவார், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், மருத்து வர், காலக்கணிதர் முதலியோரும், நால்வகைப் படைஞரும் என அறிகின்றோம்.

மருவூர்ப்பாக்கம்; பட்டினப்பாக்கம் என்னும் இருபாற் பட்ட ஊருக்கு நடுவே நாளங்காடி யுளது. நாளங்காடி யென்பது காலைக்கடை; மாலைக்கடை அல்லங்காடி யெனப்படும். அந் நாளங்காடியின் காட்சி, காண்போர் கண்களைக் கவரும் தன்மையது. அந் நாளங்காடித் தெருவில் தேவர் கோமானால் அனுப்பப்பெற்றுக் காவல் புரியும் பூதத்தின் பலி பீடிகை யொன்றுண்டு. ஒரு கால், தேவர் கோனை அசுரர் வளைத்துக் கொண்டனர். அக்காலை, முசுகுந்தன் என்னும் சோழன் விண்ணுலகு சென்று, அசுரர்களை எதிர்த்துப் போர் புரிந்து வெற்றியுற்று விளங்கினான். பின்னர், தோல்வியுற்ற அசுரர் அனைவரும் ஒன்று கூடி, முசுகுந்தனது நெஞ்சமும் கண்ணும் இருளும் வண்ணம் ஓர் அம்பினை விட்டனர். அவ்வம்பால் முசுகுந்தன் திகைத்து நின்றான். அப்பொழுது விண்ணுலகி லிருந்த ஒரு பூதத்தின் அருளால் அம் மன்னவன் அவுண ரைக் கொன்று குவித்து நின்றான். பின்பு, தேவர் கோன், அப் பூதத்தின் உதவியை முசுகுந்தனால் உணர்ந்து, அம் மன்னவன் பொருட்டுக் காவல் புரிய அப்பூதத்தைப் புகார்க்கு அனுப்பினான். அம் மாபெரும் பூதமே புகாரில் இருந்து காவல் புரிந்து பலி யுண்ணுநின்றது.

சித்திரை மாதத்து, நிறைமதி சேர்ந்த சித்திரை நாளில், மறக்குடி பெண்டிர், நாளங்காடியில் உள்ள பூத பீடிகையில் அவரை, துவரை முதலியவற்றைச் சொரிந்து, "பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும் பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க" என வாழ்த்தி, துணங்கை, [2]குரவை

---

1. முடக்கிய இருகை பழுப்புடை யொற்றித் துடக்கிய நடையது துணங்கையாகும்.

2. குரவை : கை கோத்தாடும் கூத்து.

என்னும் கூத்துக்கள் ஆடிப் பெயருங் காட்சி, மாட்சி சான்றது.

இனி, மருவூரிலுள்ள மறங்கொள் வீரரும், பட்டினப் பாக்கத்துப் படைகெழு வீரரும், நாளங்காடியில் காவல் புரியும் பூதத்திற்குப் பலி கொடுக்கும் செயல், அவ்வீரரின் திண்ணிய உள்ளத்தை நன்கு எடுத்துக்காட்டும்.

கலிங்கத்துப் பரணியில், வீரர்கள் தேவிபால் சென்று வரம் வேண்டும்பொழுது அவர்கள் கூறும் வீர மொழிகளைக் கீழே படித்து இன்புறுவாம் :

"சலியாத தனியாண்மைத் தறுகண் வீரர்
தருகவரம் வரத்தினுக்குத் தக்க தாகப்
பலியாக வுறுப்பரிந்து தருதும் என்று
பரவுமொலி கடலொலிபோல் பரக்கு மாலோ."

வரம் வேண்டிப் பின்னர், போரில் வெற்றி மாலை யணிந்து வீடு திரும்பிய வீரர்கள், தாம் சொன்ன சொல் தவறாது, காளி கோயில் சென்று, சிரத்தை யரிந்து, தேவினைக் கொடுப்பதும், அச்சிரங்கள் தேவியைத் துதிப்பதும், குறையுடல்கள் தேவியைக் கும்பிட்டு நிற்றலும், பேராண்மையை விளக்கிக் காட்டும் வீரச் செயல்களாம்.

மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இருவகைப் பாக்கத்து வீரரும், பூதத்தின் பலி பீடிகையை நெருங்கி, "வெந்திறல் மன்னற்கு உற்ற துன்பத்தை ஒழித் தருள்க" என்று பூதத்தை வேண்டித் தத்தம் தலைகளைத் தாமே அரிந்து பலி பீடத்தில் வைத்தனர். அப்பொழுது அவ்வீரர் களின் குறையுடல்கள் தம் தோளிற் பூண்ட மயிர்க்கண் முரசால், "உயிர்க்கடன் தந்தோம்" என்று பூதத்திற்குப் பலியூட்டியது. இவ் வீரச்செயலை வியந்த இளங்கோ அடிகள், "மயிர்க்கண் முரசொடு வான்பலி யூட்டி" என்றார்.

ஒருகால் கரிகாற் சோழன் பெற்ற வெற்றியையும், அவ் வெற்றிக்கு அறிகுறியாக அவன் பெற்ற பொருள்களையும்

எடுத்துக் கூறி, அங்கெல்லாம் பலி நிகழ்வதைக் கூறுகின்றார் இளங்கோ அடிகள்:

திருமாவளவன் என்னும் கரிகாற் சோழன் தமிழ் நாட்டில் தன்னை எதிர்ப்பார் இன்மையான், போரிலே பேராசை கொண்டு, புண்ணிய திசை யெனப் புகழ் பெறும் வட திசை நோக்கிச் சென்றான். அப்பொழுது அவனை மேற்செல்ல விடாது இமயம் என்னும் பயங்கெழு பனிமலை தடை செய்தது. அதனால் வெகுண்ட கரிகாலன், அம்மலையின் பிடரில் தனது புலியைப் பொறித்து மீண்டான். அங்ஙனம் அம்மன்னன் மீண்ட பொழுது வச்சிர நன்னாட்டுக்கோன் திறைப்பொருளாக முத்துப் பந்தர் ஒன்று அவற்குக் கொடுத்தான். மகத நாட்டு வேந்தன் பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன் தோரண வாயிலும் கொடுத்தனர். அவற்றில் எல்லாம் பலி நிகழ்ந்தது. இன்னும் வேறு சில மன்றங்களிலும் பலி நிகழ்ந்த விதத்தைக் காண்போம்:

காவிரிப்பூம் பட்டினத்தில், ஒருவிதக் காவலும் இல்லாத வெள்ளிடை மன்றத்தில், பெயர் பொறித்த பொதிகள் கிடந்தன. அந்நகர்க்குப் புதியவராய் வந்தவர் எவரேனும் அப் பொதிகளைத் திருட எண்ணினால், அவர்கள் கழுத்துக் கடுக்கப் பொதியை யேற்றி, அக்கள்வர் ஊர்வலம் வந்து நடுங்கும்படி செய்யும் வெள்ளிடை மன்றத்திலும் பலி நிகழும்.

கூனர், குறளர், ஊமர், செவிடர், அழுகு மெய்யாளர் என்னும் இவர்கள் முழுகி வலஞ் செய்ய, அவர்களுக்குக் குற்றமற்ற தோற்றத்தையும், நன்னிறத்தையும் தரும் இலஞ்சி மன்றம் ஒன்று அங்கு இலகியது. வஞ்சனையால் மருந் துண்டு பித்தேறினவரும், நஞ்சுண்டு நடுங்கு துயருற்றோரும், அரவால் கடியுண்டு அருந்துயர் உழப்போரும், பேயால் பீடிக்கப் பட்டுப் பெருந்துயரால் வருந்துவோரும் ஒருகால் வலம் வந்து தொழ, அன்னாரது அருந்துயர் அகற்றும் நெடுங்கல் மன்றம் ஒன்றுண்டு. ஆண்டும் பலி நிகழும்.

நாற் சந்தியில் பூதம் ஒன்று திரிந்த வண்ணமாயிருக்கும். அது, தவத்தில் மறைந்து, அவ நெறியில் ஒழுகும் தன்மை

யிலாளரும், தம் கணவர் நம்பும் வண்ணம் நடித்து, அவ நெறியில் ஒழுகும் அலவைப் பெண்டிரும், நம்பிய மன்னரைக் கெடுக்க எண்ணும் நலமிலா அமைச்சரும், பிறர் மனை விரும்பும் பேதை மாக்களும், பொய்க்கரியாளரும், புறங்கூற்றாளரும் என் கைக் கண்ணுள்ள பாசத்தில் கடிது அகப்படுக” என்று நான்கு காதம் கேட்கும்படித் தன் கடுங்குரலால் உணர்த்தி, ஒழுக்க மிலா மக்களின் உயிரை உண்ணும்.

அரசனது செங்கோல் சிறிது கோடினும், அற நூல் முறைப் படி அறம் கூறுவோர், நடு நிலை நீங்கி ஒரு மருங்கு சாரினும், நாவால் நவிலாது நவை நீர் சொரிந்து அழும் பாவை மன்றத் திலும் பலி நிகழும்.

இனி, மணங்கெழு முரசால் இந்திரனது விழாவின் முத லும் முடிவும் அறிவிக்கப்படும். விழவினை அறிவிக்கும் முரசம் வச்சிரக்கோட்டத்தில் இருக்கும். வச்சிரக்கோட்டம் என்பது இந் திரனது வச்சிராயுதம் இருக்கும் கோயில். அங்குள்ள முரசினை, ஐராவதம் நிற்கும் கோட்டத்தில் கொண்டுவந்து, யானை மீது ஏற்றி விழவினை அறிவித்த பின்னர், கற்பகம் நிற்கும் கோயிலில் இருந்த ஐராவதம் எழுதிய கொடி வானிலே தூக்கப்பெறும்.

இனி, வீதியின் சிறப்பை மாளிகைகளின் சிறப்பால் கூறு கின்றார். நெடு நிலை மாளிகைகளால் வீதி வீறு கொண்டு விளங்கின. அம்மாளிகைகள் மரகத மணியொடு வயிரம் சேர்த்து இழைக்கப்பெற்ற பைம்பொன் திண்ணையால் பாங்குற்று விளங் கின. அத்திண்ணைகளில் பவளத் தூண்கள் பற்பல நின்றன. மாளிகைகளின் சிறப்பிலிருந்து மா நகர் சிறப்பை நன்கு அறியலாம். மாளிகை வாயில்தோறும் மகர தோரணங்கள் தூங்கின. வீதியில் [1]ஐம்பெரும் குழுவும் [2]எண் பேராயமும் அரச குமாரரும் பரத குமாரரும் ஒருங்கு சேர்ந்து, “எம் மன்னன்

---

**1. ஐம்பெருங் குழு:** *அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர்.*

**2. எண்பேராயம்:** *கணக்கர், கருமகாரர், பொக்கிஷ அதிகாரிகள், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர்.*

கொற்றம் கொள்க" எனச் சொல்லி, காவிரி நீரால் விண்ணவர் தலைவனை நீராட்டினர்.

பின்னர், வேத நெறிப்படி, பல்வகைக் கோயில்களில் நடைபெறும் ஓமங்களையும் விழாக்களையும் முறையே கூறுவதிலிருந்து அக்காலத்து விளங்கின பற்பல கோயில்களையும், ஆண்டு, விழாக்கள் நடைபெறும் முறைகளையும் அறிகின்றோம். சிவனது கோயிலை இளங்கோ அடிகள், "பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்" என்கிறார். அத்தகைய மகா தேவனது கோயிற்கண்ணும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிற் கண்ணும், பலதேவனாகிய வால் வளை மேனி வாலியோன் கோயிற் கண்ணும், திருமாலாகிய நீல மேனி நெடியோன் கோயிற் கண்ணும், இந்திரனாகிய மாலை வெண்குடை மன்னவன் கோயிற் கண்ணும், நான்மறை கூறிய முறைப்படி ஒருபால் ஓமங்கள் நடந்தன.

ஒருபால் நால்வகைத் தேவர்க்கும் பதினெண் கணங்களுக்கும் விழா சிறப்புடன் நடந்தது. அருகர் பள்ளியிலும், புத்தர் பள்ளியிலும், ஒருபால் புராணம் படித்தலும், தருமம் போதித்தலும் நிகழ்ந்தன. கொடித்தேர் வேந்தனொடு கூடா மன்னர் சிறையில் விடுவிக்கப்பட்டனர். பலவகைக் கருவிகளைக் கொண்டு இசை யெழுப்ப வல்ல இன்னிசைப் புலவர் பெரு மக்களால் அளப்பரிய சிறப்பை உடைய இசைகள் ஒருபால் சிறந்தன.

இங்ஙனம் இரவும் பகலும் இந்திர விழாவால் சிறந்து விளங்கிய குறுந் தெருக்களிலும், நெடுந்தேர் வீதிகளிலும் கோவலன் மாதவியோடு திரிந்த செய்தியைச் சிலேடை, உவமை என்னும் அணிகள் அமைய இளங்கோ அடிகள் கூறியுள்ளது கற்றோர்க்குக் களி பேருவகையை அளிக்கின்றது. அதனை உணர்ந்து இன்புறுவாம் :

**"காதற் கொழுநனைப் பிரிந்தலர் எய்தா**
**மாதர்க் கொடுங்குழை மாதவி......."**

என்பது மாதவிக்கும் குறுக்கத்திக் கொடிக்கும் சிலேடையாக அமைந்து உள்ளது. மாதவிக்குச் சொல்லுமிடத்து, தன்

காதற்குரிய கொழுநனாகிய கோவலனைப் பிரிந்து [1]அலர் எய்தாத அழகிய வளைந்த குழலையுடைய மாதவி என்பது பொருள். குருக்கத்திக்குச் சொல்லுமிடத்து எல்லோரும் விரும்பும் வளம் பொருந்திய அரும்பாம் தன்மையை விட்டு, முதிர்ந்து அலரா. காத, வளைந்த அழகிய தளிரை உடைய குருக்கத்திக்கொடி என்பது பொருள்.

இத்தகைய அழகிற் சிறந்த மாதவியோடு நறுமணம் வீசும் பூம்பொழிலில் விளையாடுதலை விரும்பிய கோவலன், நகைத்து விளையாடும் மாக்களோடு கூடி, காமக் குறிப்பாகிய மகிழ்ச்சி மொழியிலே இடைவிடாது பயின்று, பாணரொடும் பரத்தரொடும் திரிகின்றான் என்று அடிகள் கூறுகின்றனர்.

இதிலிருந்து கோவலனது இழிந்த ஒழுக்கம் உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்குகின்றது. கோவலனைப்போல் திரியும் வேறொரு பொருளும் உண்டு என்கின்றார் அடிகள். அப்பொருள், பொதிய மலையிலிருந்து வரும் இளங்காற்று. கோவலன் பாணரொடும் பரத்தரொடும் திரிகின்றான். மலய மாருதம், வண்டொடும் இள வேனிலொடும் இயங்குகின்றது. பாடுதல், கள்ளுண்ணுதல் என்னும் இரண்டு செயல்களையும் பாணரிடமும் வண்டுகளிடமும் காணலாம். கோவலன் பரத்தையரைப் பற்றுக்கோடாகக் கொண்டு பாணரொடு திரிகின்றான். மலய மாருதம் இளவேனிற் காலத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு வண்டொடு திரிகின்றது.

இனி, வீதியில் நிகழும் நிகழ்ச்சிகளைக் காண்பாம்:

அழகிற் சிறந்து, ஆடவரது மனத்தை மயக்கும் பொது மகளிர், வீதியில் மின்னற்கொடிபோல் திரிகின்றனர். அவர்களது கட்டழகில் ஈடுபட்டு, அவர்களின் உறுப்புக்களை வியந்து நோக்கும் ஆடவர், ஐயுற்று, "அங்கண் வானத்து அணி நிலா, கருமுகிலாம் கூந்தலைச் சுமந்து, தன்னை விட்டகலாது இருந்த மாசை மாற்றி, இரு கருங் கயல் மீன்களைக் கண்ணெனக் கொண்டு, குமிழ மலராகிய மூக்கொடு, அகல் வானத்து

1. அலர்—பலர் அறிந்து தூற்றல்.

அரவுப் பகைய்ஞ்சி, மாறு வேடங் கொண்டு, இம் மாநகர்க்கண் திரிகின்றது கொல்!" என மயங்கினர்.

"மீனக் கொடியோனாகிய மன்மதன், சிவனது நெற்றிக் கண்ணால் இழந்த தன் உடலைப் பெறுவதற்காகத் திங்களாகிய நிலத்திலுள்ள அமுதமாகிய நீர் மாந்தி வளர வளர்த்த வான வல்லி, வானிலிருந்து இறங்கி வந்து, இவண் திரிகின்றது கொல்!" என்று ஆடவர் ஐயுற மகளிர் இயங்கினர்.

"கரிகாற் சோழனுக்குத் தன் வளத்தைக் காட்டத் திருமகள் இந்நகரில் வந்து புகுந்தனள் எனக் கருதிய அவள் இருக்கை யாகிய கமல மலர், இலவ மலரை இதழாகப் பெற்று, முல்லை முகையை முறுவல் எனக் கொண்டு, கருங்குவளையைக் கண் ணாகவும், குமிழ மலரை நாசியாகவும் பெற்று, மாறுபட்ட கோலத்தோடு, தனது அன்பார்ந்த துணையாகிய திருமகளைத் தேடித் திரிகின்றது கொல்!" என்று கண்டோர் கழறும் வண் ணம் கணிகையர் நடந்தனர்.

"செங்கோல் மன்னன் வாழும் நாட்டில் கூற்றுவன் வரு தற்கும் கூசுவன். ஆகையால், கூற்றுவன் என்னும் கொடுந் தொழிலாளன், ஆண்மை வடிவின் நீங்கி, நகை முகமும், யாழிசை போன்ற இன்சொல்லுமுடைய பெண் வடிவு கொண்டு, கண்டோர் பேதுறத் திரிந்தனன் கொல்!" என அரிவையரைக் கண்ட ஆடவர் அணங்குற்று அயர்ந்தனர்.

இவ்வண்ணம் மன்மதனது மாபெரும் சேனையாகிய பொது மகளிர், வீதியில் நெருங்குதலால், அம்மகளிரை, மார்பால் தள்ளிக்கொண்டு தம் வீட்டை நோக்கி வருகின்ற மாந்தர், தம் மார்பகத்தே மகளிரது வரிக்கோலம் படிந்திருத்தலைக் கண்டு துணுக்குற்றனர். பின்னர், அவர்கள், "நாம் தனித்து வீடு சேரின் நம் இல்லக்கிழத்தி பெரிதும் புலப்பள். அவளது புலவியைப் போக்குதற்குரிய மருந்து நல் விருந்தே" எனத் தெளிந்து, விருந்துடன் வீட்டை அடைந்தனர். விருந்தொடு புகுந்த கொழுநரைக் கண்ட கற்புடை மகளிர், அகமும் முகமும் மலர்ந்து விருந்தோம்பி வீறு பெற்றனர்.

“ விருந்தொடு புக்க பெருந்தோட் கணவரொடு
உடனுறைவு மரீஇ யொழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின் மனையுறை மகளிர்
மாதர்வாள் முகத்து மணித்தோட்டுக் குவளை
போது புறங்கொடுத்துப் போகிய செங்கடை
விருந்தின் தீர்ந்தில தாயின் யாவதும்
மருந்தும் தருங்கொல்இம் மாநில வரைப்பு ”

என்ற அடிகளிலிருந்து கற்புடைய மகளிர் மனம் விருந்தோம்பலில் எவ்வண்ணம் உயர்ந்தோங்கி யிருந்தது என்பது வெள்ளிடை மலையென விளக்கமுறுகின்றது.

இல்லறமாகிய நல்லறத்தில் அன்பார்ந்த ஒருவனும் ஒருத்தியும் தங்கி வாழ்வது விருந்தோம்பற் பொருட்டே என்னும் கருத்தமைய,

“ இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு ”

என்றார் பொய்யிலாச் செந்நாப்புலவர். மேலே காட்டிய அடிகளிலிருந்து அந் நாடு விருந்தோம்பல் ஓம்பா மடமையற்ற மடந்தையரால் மாண்புற்று விளங்கியது என அறிகிறோம்.

இந்திர விழாவின் நடு நாளில் கூட்டம் இல்லாமையினால் உள்ளத்தே தோன்றிய துன்பத்தைக் கண்ணகி தன் கற்பால் மறைத்து அகத்தே ஒளிக்கவும், அவள் கருங்கண்கள் புறத்தே நீரைச் சொரிந்தன. கூட்டத்தான் சிவந்த மாதவியின் கண்கள் உவகைக் கண்ணீர் உகுத்தன. இந்திர விழா முடிந்து நீராடுதற்கு முன்னாள் கண்ணகியின் இடக்கண்ணும், மாதவியின் வலக்கண்ணும் துடித்தன. பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்மையையும், வலக்கண் துடித்தல் தீமையையும் குறிக்கும் என்பர். விரைவில் கண்ணகி கோவலனை அடையப் போகிறாள் ஆதலின் அவளது இடக்கண் துடித்தது. மாதவி தன் போகூழால் விரைவில் கோவலனைப் பிரியப் போகின்றாள் ஆதலின் அன்னாளின் வலக்கண் துடித்தது என்பது ஈண்டு அறிதற்குரியது.

# மாதவியின் ஆடலும் அழகும்

விஞ்சையர் என்பார் பதினெண் கணத்துள் ஒரு சாரார். இவர்கள் இசைக் கலையிலும், அழகிலும் மிகச் சிறந்து விளங்கும் தேவர். ஒருகால், வெள்ளி மலைக்கண்ணுள்ள வட சேடியில், கள்ளவிழ் பூஞ்சோலையில், விஞ்சை வீரன் ஒருவன் கருங்கயல் நெடுங்கண் வாய்ந்த தன் காதலியொடு காமக் கடவுளுக்கு விழாவினை விரும்பிச் செய்து திரும்பினன்.

அங்ஙனம் திரும்புங்காலை, அவ்விஞ்சை வீரன், தன் இன்னுயிர்க் காதலியை நோக்கி, "அழகிற் சிறந்த அணங்கே, தென் திசைக்கண்ணுள்ள ஒரு செழும்பதியில் இந்தச் சித்திரை நாள், இந்திர விழாவிற்குக் கால்கொண்டு கொடியெடுக்கும் நாள். முன்னொருகால் முசுகுந்தன் என்னும் சோழன் இந்திரனது பொன்னகரைக் காவல் புரிந்து நின்ற பொழுது, கூட்டமாக வந்து அவனைத் தாக்கிய அசுரர், அச் சோழ மன்னற்குத் தோற்றுப் பின்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து, அம்மன்னன் நெஞ்சம் இருண்டு மயங்கும் வண்ணம் ஒரு படையை ஏவினர். அப்பொழுது கையற்று நின்ற சோழற்கு, ஆங்கிருந்த ஒரு பூதம் அவனது மனமயக்கம் போக்குதற்குரிய மந்திரம் ஒன்றை அருளிற்று. அம்மந்திரத்தின் வன்மையால் அச்சோழன் அவுணர் அனைவரையும் கொன்று, ஏறுபோல் நின்றான். சோழனது வெற்றிக்குக் காரணம் பூதத்தின் செயலே யென்பதை உணர்ந்த இந்திரன், அப்பூதத்தை, முசுகுந்தன் பொருட்டு மெய்க் காவலாக ஏவினன். உற்ற சமயத்து உதவி புரிந்த அப்பூதம், விண்ணிலிருந்து மண்ணிற்கு வந்து, பூம்புகார்க்கண் இருந்து பலியுண்ணும் நாளங்காடி யிடத்தையும் கண்டு களிப்போம்" என்றனன். இப்பூதத்தின் செய்தியை, மணிமேகலை விழா அறை காதைக்கண்,

"கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்லெயிறு இலங்க
இடிக்குரல் முழக்கத்து இடும்பை செய்திடும்"

என வந்துள்ள அடிகளும், விடுத்த பூதம் என்னும் சொற்றொடர்க்கு, "முசுகுந்தனுக்கு ஒரு மந்திரம் உபதேசித்து அவ்விருளைப் போக்கிய, பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் இரண்டிற்கும் இடையேயுள்ள நாளங்காடியிடத்துப் பூதம்" என்னும் உரையும் விளக்குகின்றன.

விஞ்சை வீரன், தன் காதலியை மீண்டும் நோக்கி, "சோழ குல முன்னோர் முன்னொருகால் அசுரரால் வந்த இடர் நீங்க அமராவதியைக் காத்தனர். அப்பொழுது மிக மகிழ்ந்த இந்திரன் ஐவகை மன்றங்களைக் கொடுத்தருளினன். அழகிற் சிறந்து விளங்கும் அம்மன்றங்களையும் ஆண்டுக் கண்டு அக மகிழ்வோம்" என்றனன்.

மேற்கூறிய ஐவகை மன்றங்களின் பெருமைகளை யெல்லாம் இதற்கு முன்னருள்ள இந்திர விழா என்னும் பகுதியில் காணலாம்.

விஞ்சை வீரன், தன் காதலியைப் பார்த்து, "துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை நங்காய், காவிரிப்பூம்பட்டினத்தில் மாதவியின் மாண்புறு ஆடலைக் கண்டு மகிழ்ந்து, அமரர் தலைவனையும் வணங்குவோம்" என்று கூறி, சிமையத்து இமையத்தினையும், செழுநீர்க் கங்கையையும், அவந்திப் பதியையும், விந்த மலை சூழ்ந்த காட்டையும், வேங்கட மலையையும், நிலம் தாங்காத விளையுளை உடைய காவிரி நாட்டினையும் தன் காதலிக்குக் காட்டிக் கொண்டே சென்று, இறுதியில், பூவிரி சோலையான் சூழப்பெற்றுள்ள புகார் மருங்கெய்தி, வளஞ்சால் மூதூர்க்கண் தேவரும் மகிழ்ந்து காணும் விழாவைத் தன் காதலியோடிருந்து கண்டான்.

இனி, மாதவி ஆடிய பதினோராடலையும் காண்பாம் :

மாதவி, ஆடல் தொடங்குவதற்கு முன்னர், சில தேவர்க்கு வணக்கம் கூறினள். மாயோன் காவற் கடவுளாய் விளங்குதலின் திருமாலைப்பரவும் தேவபாணி முதற்கண் கூறப்பட்டது. பின்னர், வருணப்பூதர் நால்வகைப் பாணி கூறப்பட்டது. நால்வகை வருணங்களையும் காக்கும் நான்கு பூதங்கள் வருணப்

பூதர் எனப்படும். பிறகு, உலகம் நன்மை பெறுதற்குக் காரணமாம் தன்மையையுடைய மதியைப் பாடும் தேவபாணி கூறப்பட்டது. பின்னர்,

"சீரியல் பொலிய நீரல நீங்கப்
பாரதி பாடிய பாரதி யரங்கத்துத்
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒருதிறன் ஆக வோங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி யாடலும்"

என, உமையவள் ஒரு பக்கம் நின்று, பாணி, தூக்கு, சீர் என்னும் தாளங்களைத் தவறுது போட, சிவபிரானுர் திரிபுரம் எரித்து ஆடிய கொடுகொட்டி யாடலை மாதவி, முதற்கண் ஆடி, மக்களை மகிழ்வித்தாள். இவ்வாடலை,

"படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்கால் கோடுயர் அகலல்குல்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ"

எனக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்தில் காணலாம்.

பின்பு, பாண்டரங்கம் என்னும் ஆடல் ஆடப்பெற்றது. இஃதும் சிவபிரானுர் ஆடிய ஆடலே. வானோராகிய தேரில் நான்மறைகளாகிய நற்பரிகளைப் பூட்டித் தேர்முன் நின்ற திசைமுகன் காணப் பாரதி வடிவாய் இறைவன் முப்புரங்களை எரித்த காலை ஆடிய ஆடல் இது. இதனை,

"மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணையெழில் அணைமென்றோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ"

என வரும் கலித்தொகைத் தாழிசையும் உணர்த்துகின்றது. அவுணர்கள் வெந்து அவிந்த நீற்றை அணிந்து ஆடிய காரணத்தால் அவ்வாடலுக்குப் பாண்டரங்கம் எனப் பெயர் வந்தது.

கஞ்சனது வஞ்சத்தைக் கடக்க அஞ்சன வண்ணனும் கண்ணன் ஆடிய ஆடல் பத்துள் அல்லியத்தொகுதி யென்னும் கூத்தினையும், வாணனுகிய அவுணனை வெல்ல மாயவன்

ஆடிய மற்கூத்தினையும் மாதவி ஆடி, மக்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்வித்தாள். பின்னர்,

"...............மாக்கடல் நடுவண்
நீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் நின்ற
சூர்த்திறம் கடந்தோன் ஆடிய துடியும்
படைவீழ்த்து அவுணர் பையுள் எய்தக்
குடைவீழ்த்து அவர்முன் ஆடிய குடையும்"

என வந்துள்ள முருகன் ஆடிய இரண்டு ஆடலினையும் மாதவி ஆடினாள். அவற்றுள் ஒன்று, சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தை யறிந்து, அவனை வென்ற முருகன், மாக்கடல் நடுவண் அலையையே அரங்கெனக்கொண்டு துடிகொட்டி ஆடிய துடிக்கூத்து; மற்றொன்று, அவுணர்கள் முருகனோடு போர் செய்தற்கு ஆற்றாது, எடுத்த படைகளைக் கீழே வீழ்த்துத் துன்புற்ற காலை, முருகன் தன் குடையைச் சாய்த்து நின்று ஆடிய குடைக்கூத்து.

பின்னர், வாணன், தன் மகள் உழை காரணமாகக் கண்ணன் பேரனாகிய அநிருத்தனைச் சிறைச்சாலையில் வைத்த பொழுது, நிலமளந்த நெடுமால், அவனது சோ என்னும் மறுகிடை நடந்து, குடங்கொண்டு ஆடிய குடக்கூத்தினை மாதவி ஆட, மக்கள் கண்டு மகிழ்ந்தனர்.

பின்பு, காமன், தன் மகன் அநிருத்தனை வாணனது சிறையினின்று மீட்டுச் சோ நகரத்து, ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துடன் ஆடிய பேடியாடலை மாதவி மிக்க திறனுடன் ஆடினாள். இப்பேடியின் படத்தை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் தாம் இயற்றியுள்ள மணிமேகலை யென்னும் மாண்புறு நூலில் வரைந்து காட்டியுள்ளதைக் கண்டு களிப்பாம் :

"சுரியல் தாடி மருள்படு பூங்குழல்
பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை
ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்
காந்தளஞ் செங்கை * *
* * * * *

இகந்த வட்டுடை யெழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீள்நிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு * *

பின்பு, மாதவி, துர்க்கை யாடிய மரக்கால் ஆடலும், திருமகள் ஆடிய பாவை யாடலும், வாணனுடைய நகரின் வடக்கு வாயிற்கண் விளங்கிய வயலிடத்தே நின்று இந்திராணி ஆடிய கடையம் என்னும் ஆடலும், அவரவர்க்குரிய அணிகளுடன், அவ்வரவர்க்குரிய கொள்கையொடு பொருந்தி, நின்றும், படிந்தும் ஆடி அனைவரையும் ஆனந்தக்கடலுள் ஆழ்த்தினள்.

மாதவியின் நடனத்தைக் காதலியுடன் கண்டு களித்த விஞ்சையன், தன் காதலியை நோக்கி, "ஆரணங்கே, பூம் பொழிற்கண் நான் கூறிய மாதவி மரபில் வந்த மாதவி யிவளே" என்றான். மாதவியின் ஆடல், பாடல், அழகு முதலியவற்றை விண்ணவர் எல்லாம் விழைந்து கண்டு உள்ளம் மகிழ்ந்தனர்.

மாதவி பதினோராடலை அவற்றிற்குரிய பாடலோடு நிகழ்த்திய பொழுது, கோவலன், ஊடற் கோலமோடு இருந்தான். அவ்வண்ணம் அவன் இருந்தமைக்குக் காரணம், மாதவியின் ஆடலும் பாடலும் அழகும் தன் மனத்தைக் கொள்ளை கொண்டது போன்றே, ஏனைய ஆடவர் மனத்தையும் கொள்ளை கொண்டிருக்குமே யென்று அவன் எண்ணிய எண்ணமே. மா நடம் புரிந்து, மக்கள் மனத்தைக் கவர்ந்த மாதவி, கோவலன் உவப்பத் தன்னை ஒப்பனை செய்துகொள்ளும் திறனைக் கண்டு மகிழ்வாம்.

மாதவி, பத்துவகைப்பட்ட துவரினாலும், ஐந்துவகைப்பட்ட விரையினாலும், முப்பத்திரண்டு வகைப்பட்ட ஓமாலிகையாலும் ஊறிக் காய்ந்த நன்னீரால், மணம் கமழும் தன் கருங்கூந்தலை நிறம் பெற ஆட்டினாள். பின்னர், அவள், அங்ஙனம் நீராட்டப்பெற்றுப் பொலிந்த கூந்தலைப் புகையிற் புலர்த்தி, ஐந்து வகை பெற வகுத்த ஐம்பாலிற்கு மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டினாள். பின்னர், அம்மடவரல், செம்பஞ்சிக் குழம்பு

ஊட்டிய தன் அழகிய சிவந்த சீறடியிற் சிறந்து விளங்கிய மெல் விரலிடத்தே, மகரவாய் மோதிரம், பீலி, காலாழி முதலிய நல்லணிகளை நலம்பெறச் செறித்தாள்; பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் என்னும் அணிகளை கால்களுக்கு அமைவுற அணிந்தாள்; திரண்டு திகழ் தொடைக் குக் குறங்கு செறி யென்னும் அணியைச் செறித்தாள்; முப்பத் திரண்டு வடத்தினுற் செய்த விரிசிகை யென்னும் மேகலையை நிறங் கிளர் பூந்துகில் மேல் அழகுற அணிந்தாள்.

> "பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
> நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ"

என்றுள்ள அடிகளில், "பூந்துகில் உடீஇ" என்ற சொற் றெடர்க்கு, அரும்பத வுரையாசிரியர், "பூந்துகிலுள்ளுடுத்து" என உரை கண்டுள்ளனர். இவ்வுரையிலிருந்து அவர் கால வழக்கொன்றை உணர்ந்து உவக்கின்றோம். அஃதாவது, அவ் வுரையாசிரியர் காலத்தே, கற்புடைய மகளிர், தம் கொழுநரை மகிழ்விக்கவே அணிகளை அணிந்து வந்தனர் என்பது.

மாதவி தன் கழுத்தில் காமர் கண்டிகையும், தோவில் தூமணி வளையும் அணிந்தாள்; முகப்பிற் கட்டிய மாணிக்கத் தோடே, பத்திகளில் வயிரங்கள் அழுத்தப்பட்ட சித்திரத் தொழில் வாய்ந்த சூடகம், செம்பொன் வளை, நவரத்தின வளை, சங்க வளை, பவழ வளை யென்னும் பல்வேறு வளைகளை முன்னங்கையில் முறையுற அணிந்தாள்; வாளை மீனின் அங் காந்த வாயையுடைய முடக்கு மோதிரமும், நிறங்கிளர் மணி மோதிரமும், ஒளிவிடும் வைரம் சூழ்ந்த மரகத மோதிரமும், காந்தள் மலர் போன்ற தன் கவினுர் மெல் விரல்கள் கரப்ப அணிந்தாள்; வீரச்சங்கிலி, நேர்ச்சங்கிலி, பூண் ஞாண், சவடி, சரப்பளி முதலிய கழுத்தணிகளை முத்தாரத்தோடு அணிந் தாள்; கழுத்தணிகளில், கொக்கிவாய் முத்தாரமாகச் செய்த தில், நவமணிகளைக் கோத்த பின் தாலியால் பிடரினை மறைத் தாள்; இடையிடை திரண்ட சந்திரபாணி யென்னும் அழகிய நீலக்காதணிகளை இரண்டு காதுகளினும் அழகுற அணிந்தாள்; சீதேவி என்னும் அணியோடு, வலம்புரி, தொய்யகம், தென் பல்லி, வடபல்லி யென்பவை தம்மில் தொடர்ந்து ஒன்றுன

நீலக்கணியைக் கரிய பெரிய கூந்தலில் மாண்புற அணிந்தாள். இவ்வண்ணம் மாதவி தன்னை அணிகளான் அழகு செய்து கொண்டு,

> "கூடலும் ஊடலும் கோவலற் களித்துப்
> பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்"

என அடிகள் கூறுகின்றனர்.

இன்பத்தை ஆரத்துய்க்க விழையும் மக்கட்கு ஊடல் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் வாய்மொழி வலியுறுத்துகின்றது :

> "புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
> நீரியைந் தன்னார் அகத்து"

என்று கூறியுள்ள திருவள்ளுவரது திருமொழியின் பொருள் உணர்ந்தவள்போல் மாதவி, தன் இன்னுயிர்க் காதலனாகிய கோவலற்குஊடலும் கூடலும் அளித்து, உவகைப் பெருங் கடலுள் அவனை மூழ்குவித்தாள்.

இருபத்தெட்டு நாட்கள் இந்திர விழா நடைபெற்ற பின்னர், ஊரிலுள்ள மக்கள் கடலாடச் செல்வது வழக்கம். அவ்வாறு ஊரினர் செல்வதைக் கண்ணுற்ற மாதவி, தானும் சென்று கடல் விளையாட்டைக் கண்டு களிக்க விரும்பிக் கோவலனை வேண்டினள். கோவலனும், மாதவியின் வேண்டுகோளுக்கு இணங்கினன்.

பிறகு, வைகறையில் கோவலன் கடற்கரைக்குச் செல்லக் குதிரை யொன்றின் மேல் ஏற, மாதவி தேர் ஒன்றில் ஏறினள். அப்பொழுது தாமரைப் பூஞ்சேக்கையில் துயின்று கொண்டிருந்த புட்கள், அச்சேக்கையை விட்டு, ஒலி செய்த வண்ணம் வெளியே சென்றன. வாரணங்கள் ஒலி செய்து வைகறைப் பொழுதை மக்கட்குத் தெரிவித்தன. அப்பொழுது செறிந்திருந்த இருளை வெள்ளி விளக்கம் கடிந்து விளங்கிற்று.

வைகறையில், வளமார்ந்த மாடங்கள் மலிந்த மறுகினை யுடைய பீடிகைத் தெருவில், மை விளக்கோடு மணி விளக்குகளையும் எடுக்கும் பணிப்பெண்கள், மலரையும், அறுகையும்,

நெல்லையும் மங்கலமாகச் சிந்தித் தம் கலன் ஒலிப்பத் திரிந்தனர். அக்காட்சியைப் பார்த்த வண்ணமாய்க் கோவலனும் மாதவியும் திருமகளுக்கு இருப்பிடமாய் விளங்கிய அவ்விடத்தைக் கடந்து சென்றனர்.

கோவலனும் மாதவியும் பட்டினப்பாக்கத்தைக் கடந்து, கடல் வளமாகிய முத்தும் பவழமும் சங்கும் கொண்டு விளங்கிய நகரத் தெருவினூடே போய், மரக்கலங்கள் தந்த திருவினை யுடைய புலம்பெயர் மக்கள் பலவகைக் கூலம் குவித்த மறுகில், இன்ன பண்டம் ஈங்குளது எனத் தெரிவித்தற்பொருட்டுக் கொடிகள் எடுக்கப்பெற்றுள்ள ஒழுங்கு பட்ட நெய்தற் கானலை அடைந்தனர். அங்கு, வண்ணம், சுண்ணம், சாந்து, மலர் முதலிய பற்பல பொருள்கள் பகர்வோர் வைத்த விளக்குகள் எண்ணுக்கடங்காமல் ஒளிர்ந்து விளங்கின. அங்ஙனம் அழகு பெற்று விளங்கிய கானலிடத்தே, பூங்கொடி போன்ற மாதவி, தன் விளையாட்டு மகளிருடன் சென்று பொருந்தினள்.

அப்பொழுது அரச குமரரும், அவருடைய உரிமைச் சுற்றமும், பரத குமரரும் அவருடைய ஆய மகளிரும் ஆகிய தொகுதியினைக் கொண்ட கடற்பக்கம் பெரும் புகழுடன் விளங்கிய கரிகாற் சோழன் புதுப்புனல் விழாக் கொண்டாடிய தலைநாள் போல் வீறுபெற்று விளங்கியது. ஆங்குக் குழுமியிருந்த நால்வகை வருணத்தினரின் அடங்காத ஆரவாரம் ஒருங்கு சேர்ந்து ஒரு பேரொலியாய் ஒலித்தது. அவண் வந்து பொருந்தின மாதவி, வயந்த மாலையிடம் இருந்த இன்ப நல் யாழை வாங்கி, கடலின் புலால் நாற்றத்தைக் கடந்த மடற்பூந் தாழையால் சூழப்பட்டு, நடுவண் இருந்த புன்னை நிழலில், புது மணற் பரப்பில், சித்திரத் திரையை வளைத்து, மேற்கட்டுங் கட்டி இடப்பட்ட வெண்கால் அமளியில் கோவலனுடன் அமர்ந்தாள்.

## வெண்பா

"வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண்தோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
களிநறவம் தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் தேர்."

## கானல் வரி

வயந்தமாலையிடம் இருந்த குற்றமற்ற யாழினை மாதவி தன் கையால் தொழுது வாங்கி, இசையை யெழுப்பிக் கோவலன் கையில் கொடுத்து, அவனது கட்டளையை நோக்கிய எண்ணமாய் இருந்தாள். ஈண்டு, இளங்கோ அடிகள்,

"சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்தி"

என்று தொடங்கும் பொழுதே மங்கலமாகத் தொடங்குதல் மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்விரண்டு வரிகளில், அடிகள் சிறந்த யாழிற்கு மைத்தடங்கண் மண மகளிரை உவமை யாக்குகின்றார். உருவத்தான் மாத்திர மன்றிச் செயலானும் இவ்வுவமை மிக்க பொருத்தமுடன் பொலிகின்றது. குல மகளிர் தம் அரும்பெரும் குணங்களானும் செயலானும் உலகினை மகிழ்வித்தல் போல், சிறந்த யாழும் தன்கண் எழும் இன்னிசையால் இரு மா நிலத்தினை இன் புறுத்தல் காண்க.

இத்தகைய யாழினை மாதவி கோவலனிடம் கொடுப்பதற்கு முன்னர், எண்வகையான் இசையை எழுப்பி, அவ் இசையின் கூறுபாட்டினைத் தன் செவியாற் சீர்தூக்கி யறிதற்கு, யாழது நரம்பின்மேல் தன் விரல்கள் செல்லும் அழகினை, அடிகள்,

"மரகதமணித் தாள்செறிந்த மணிக்காந்தள் மெல்விரல்கள்
பயிர்வண்டின் கிளைபோலப் பன்னரம்பின் மிசைப்படர"

என்றார். இவ்வடிகளில் மரகதத்தால் ஆன மோதிரங்கள் செறிந்த, மாதவியின் அழகிய காந்தள் மலர் போன்ற மெல் விரல்கள் யாழ் நரம்பின்மேல் சென்று வருவது, வண்டின் கிளைகள் அங்ஙனம் சென்று வருவதுபோல் இருப்பதாகக் கூறியிருப்பது அழகிது.

மாதவி, யாழினின்று எழுந்த இன்னிசையினை செவியான் ஓர்ந்து, கோவலன்பால் அச்சிரிய யாழினைக் கொடுத்தலும்,

இசைக் கடலில் எஞ்ஞான்றும் திளைக்கும் இயல்பு வாய்ந்த கோவலன், காவிரியை நோக்கினவும், கடற்கானலை நோக்கினவும் ஆகிய வரிப்பாடல்களை, மாதவி மனம் மகிழ வேண்டும் என்னும் எண்ணத்துடன், வீணையின் இன்னோசையுடன் பொருத்தி வாசிக்கத் தொடங்கினான். அப்பாடல்களைப் பன்முறை படித்து மகிழ்வோம் :

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அதுவோச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னு மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

உழவர் ஓதை மதகோதை
உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்த எல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்றன்
வளனே வாழி காவேரி."

மேலே குறித்துள்ள முதல் இரண்டு பாடல்களில் கோவலன் காவிரியைப் பெண்ணாகக் கொண்டு விளித்து,

"உன்னுடைய நாயகனாகிய சோழன், செங்கோல் ஓச்சி, வடபால் சென்று, கங்கையைப் புணர்ந்தாலும், தென்பால் சென்று, கன்னியைப் புணர்ந்தாலும், நீ அவன் செயலைக் கண்டு ஊடாமல் இருக்கின்றாய். அங்ஙனம் நீ ஊடாமைக்குரிய காரணம், உன்னுடைய பெருங் கற்பே என்பதை உணர்ந்தேன். ஆகையால் நீ நீடு வாழி" என்றான்.

இக்கூற்று உலகம் கொள்ளும் உண்மையாகுமா என்று ஆராயின், இது கற்புடைய மகளிரின் செய்கையாகா தென்பது அறிஞர்க்குத் தெளிவாம். கோவலன் கூறிய இம்மொழிகள் விளையாட்டு மொழிகள் எனக் கோடல் வேண்டும். ஏனெனின், கற்புடைய மகளிர், தம் நாயகரது திருமேனியைப் பிற மகளிர் தீண்டச் சிறிதும் ஒருப்படார். இவ்வுண்மையை,

45291

" தரைமகள்தன் கொழுநன்றன் உடலந் தன்னைத்
தாங்காமல் தன்னுடலால் தாங்கி விண்ணாட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின் "

என் வரும் கலிங்கத்துப்பரணிச் செய்யுள் வற்புறுத்துகின்றது.

வேறு பெண்ணை யணைந்து வந்த திருநீலகண்டரது செயலை, அவரது வாழ்க்கைத் துணைவியார் உணர்ந்து, மிக வெகுண்டு, தம் மெய்யினைத் தீண்ட நெருங்கிய கொழுநரைத் தீயெழ நோக்கி, "தீண்டுவீராயின் எம்மைத் திரு நீலகண்டம்" என்று ஆணையிட்டமைக்குக் காரணம், தம் நாயகரது உடலை வேறொரு மடந்தை தீண்டியுள்ளாள் என்பதே.

இராமபிரானிடம் சொல்லும்படி அனுமன்பால் சீதை கூறிய பல செய்திகளுள் ஒன்றினைக் கீழே காண்க :

"வந்தெ ஊக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்."

இத் திருப்பாடலிலிருந்து கற்பின் செல்வியாகிய சீதை, தன் உயிரென விளங்கிய இராமன், வேறொரு பெண்ணை, சிந்தையாலும் தொடாமையாகிய செவ்வரத்தை மறவாதிருக்கும்படி நினைவூட்டுவதை அறிகிறோம். இதிலிருந்து கற்புடை மகளிரது கருத்து நன்கு புலனாகின்றது.

"உழவர் ஓதை" எனத் தொடங்கும் மூன்றும் பாடலால், காவேரி யாறு சிறந்து நடப்பதற்குக் காரணம் "வளவன் தன் வளனே" என்றார். வளவன் தன் வளன், ஈண்டுக் குண வளனே. இவ் வளன் அரசன்பால் அமைந்திலேயேல், அவ்வரசன் செங்கோலனாய் இருக்க முடியாது. செங்கோல் நிலை திரியின், அந்நாடு வளங் குன்றும் என்பதை,

"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறம் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்"

என வரும் மணிமேகலை அடிகளானும்,

"கோள்நிலை திரிந்துநாழி குறைபடப் பகல்கள்மிஞ்சி
நீள்நில மாரியின்றி விளைவஃகிப் பசியுநீடிப்
பூண்முலை மகளிர் பொற்பின் கற்பழிந்து அறங்கள்மாறி
ஆணையிவ் வுலகுகேடாம் அரசுகோல் கோடினென்றான்"

என வரும் சிந்தாமணி, நாமகள் இலம்பகச் செய்யுளானும் அறிக.

"கரியமலர் நெடுங்கண் காரிகைமுன்
கடல்தெய்வம் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென்று
ஏழையம்யாங்கு அறிகோம் ஐய

விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும்
ஆமென்றே விளக்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்தம்கண்டு ஆம்பல்
பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர்;

காதல ராகிக் கழிக்கானல் கையுறைகொண்டு
எம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாம்இரப்ப நிற்பதையாங்கு
அறிகோம் ஐய
மாதரார் கண்ணும் மதிநிழல்நீர் இணைகொண்டு
மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டூசல் ஆடும்
புகாரே எம்மூர்;

மோது முதுதிரையான் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி ஐய
கோதை பரிந்தசைய மெல்விரலால்
கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
போகாப் புகாரே எம்மூர்."

மேலே வந்துள்ள, "கரிய மலர்" முதலிய மூன்று பாடல்களும் தோழி தலைமகன் முன்னின்று வரைவு கடாயவை.

வரைவு கடாவுதல் என்பது அகப்பொருள் துறைகளுள் ஒன்று. அலரானும், காவல் மிகுதியானும், தலைவி தலைவனைக் காண முடியாது வருந்தும் நிலையைக் கண்டு ஆற்றாத தோழி, தலைவன் தலைவியை விரைந்து வரைந்து கோடல் வேண்டும் என்பதை அவன் குறிப்பான் உணர்ந்துகொள்ளும்படி அவனைப் பல பல கூறி வினவுதல்.

மேற்கூறிய மூன்று பாடல்களில், தோழி, தன் ஊரின் சிறப்பையும், அதில் வாழும் மக்களின் உள்ளச் சிறப்பையு

கூறத் தொடங்கி, "எம்மூரில் உள்ள அஃறிணைப் பொருள்களாகிய ஆம்பலும், வண்டும், உயர்திணைப் பொருள்களாகிய மக்களும், கள்ளம் இல்லாத் தன்மையால் போலிப் பொருள்களைக் கண்டு, அவற்றை மெய்ப்பொருள் எனக்கொண்டு மயங்கும் இயல்பினர் என்று கூறுகின்றாள் :

"ஆம்பல் போது, விளங்குகின்ற வெண்ணிறமுடைய சுரிந்த சங்கினையும் முத்தினையும் கண்டு, விரிந்த கதிர்களையுடைய வெண்மதியும் விண்மீன் கூட்டமும் ஆம் என மயங்கி மலரும் காவிரிப்பூம்பட்டினமே எம்முடைய ஊர்";

"மகளிர் முகத்திலுள்ள கண்களென்றும், நீரிலே தோன்றும் மதியினது சாயலில் இணையாக மலர்ந்த நில மலரென்றும் வேறுபாட்டினை யறியாது, வண்டுகள் ஊசலாடும் காவிரிப்பூம் பட்டினமே எம்முடைய ஊராகும்";

"இத்தகைய ஊரில் உள்ள ஏழையேமாகிய யாங்கள், கடலின் தெய்வமாகிய வருணனைப் பல முறை சுட்டிக் கூறிய சூளைத் தலைவர் பொய்த்து, அறத்தின் வழுவிவிடுவார் என்பதை எவ்வண்ணம் அறிவோம்";

"காதலராய்க் கடற்கரைச் சோலை இடத்தே, அன்று கையுறை கொண்டு எமது பின்னே வந்தவர், இன்று யாம் இரக்கும் வண்ணம் நிற்கின்றார். இங்ஙனம் நிற்பார் என்பதை ஏழையேமாகிய யாங்கள் எவ்வாறு அறிவோம்."

முதல் இரண்டு பாக்களால் அஃறிணைப் பொருள்களின் மயக்கமும், மூன்றும் பாடலால் உயர்திணைப் பொருள்களாகிய மக்களின் மயக்கமும் கூறப்பட்டுள்ளன.

" துறைமேய் வலம்புரி தோய்ந்து
மணல்உழுத தோற்றம் மாய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து
நுண்தாது போர்க்கும் கானல்

கிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி உய்யாநோய் ஊர்சுணங்கு
மென்முலையே தீர்க்கும் போலும்."

இது, குறியிடத்துச் சென்ற பாங்கன், தலைமகளது காதல் மிகுதி குறிப்பினால் அறிந்து கூறியது.

இப்பாடலில் கானலின் பெருவளத்தை அழகுபடக் கூறி, அங்கு நின்று காட்சியளித்த ஒரு காரிகையின் கண் செய்த நோய்க்கு மருந்து, அவளது மென்மைத்தன்மை வாய்ந்த மார்பே என்பது கூறப்பட்டது. கண் செய்த நோய்க்குக் கண்ணே மருந்தென்பதைத் திருவள்ளுவர்,

"இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து"

எனக் கூறியுள்ள குறளால் அறிகின்றோம்.

அன்பின் வடிவாய் இலங்கிய மணிவாசகரும்,

"அணியும் அமிழ்துமென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணியும்ப ராரறி யாமறை யோனடி வாழ்த்தலரின்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின் னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே"

எனப் பிணியும் அதற்கு மருந்தும் பெருந்தோளி படைக் கண்களே எனக் கூறியுள்ளார். அங்ஙனமிருக்க, கோவலன் கூறிய பாட்டில், கயல்மீன் போன்ற கருங்கண் செய்த நோய்க்கு அக்கண் பார்வையே மருந்தாக அமையாமையான், அம்மாதின் மென் மார்பே அப்பிணிக்கு மருந்தாக அமைந்தது எனக் கூறியுள்ள அழகு அறிதோறும் அகத்தை மகிழ்விக்கின்றது.

இங்ஙனம் வேறென்றும் நீங்காத பிணியை நீக்கிய மாமருந்தைப் பிணியாளன் மறவாதிருத்தல் இயல்பென்பதை,

"நீங்கரும் பொற்கழல் சிற்றம் பலவர் நெடுவிசும்பும்
வாங்கிரும் தெண்கடல் வையமும் எய்தினும் யான்மற வேன்
தீங்கரும் பும்அமிழ் துஞ்செழுந் தேனும் பொதிந்து செப்பும்
கோங்கரும் பும்தொலைத் தென்னையும் ஆட்கொண்டு கொங்கைகளே"

என வரும் திருக்கோவையார் பாடலாலும் அறிகிறோம்.

"நிணங்கொள் புலால் உணங்கல் நின்றுபுள்
ளோப்புதல் தலைக்கீ டாகக்
கணங்கொள் வண்டார்த்து உலாங்கன்னி
நறுஞாழல் கையில் ஏந்தி
மணங்கமழ் பூங்கானல் மன்னிமற் றாண்டோர்
அணங்குறையும் என்ப தறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ

வலைவாழ்நர் சேரி வலையுணங்கு முன்றில்
மலர்கை யேந்தி
விலைமீன் உணங்கல் பொருட்டாக
வேண்டுருவம் கொண்டு வேறோர்
கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம் வாழ்வது
அலைநீர்த்தண் கானல் அறியேன் அறிவேனேல்
அடையேன் மன்னோ."

புலால் வற்றல் கவர வரும் புட்களை ஓட்டுதல் காரணமாகக் கடற்கரைச் சோலையில் உள்ளத்தைக் கவரும் பெண்வடிவில், கொலை வேல் நெடுங்கண் கொடுங் கூற்றம் திரிவதை அறியாதவனாய், ஆண்டுச் சென்று, அக்கூற்றத்தால் தாக்குண்டேன். இதனை முன்னரே அறிவேனேல், அங்குச் சென்றிருக்க மாட்டேன் என்பது இவ்விரண்டு பாடல்களின் கருத்து.

தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், "கூற்று என்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன். இப்பொழுது கண்டறிந்தேன். அது பெண் தகையுடனே பெரிய

வாய் அமர்த்த கண்களை யுடைத்து" என்ற கருத்துப் பொருந்த,

> " பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
> பெண்தகையால் பேரமர்க் கட்டு "

எனக் கூறினர். இத்திருப்பாடலுக்கு உரை கண்ட பரிமே லழகர், "பெண் தகையால் இன்பம் பயத்தலும் உண்டேனும், துன்பம் பயத்தல் மிகுதிபற்றிக் கூற்றாக்கிக் கூறினான்" என வரைந்துள்ள உரை நயம் பாராட்டற்குரியது.

> "கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
> செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்
> திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
> அங்கண்ஏர் வானத்து அரவஞ்சி வாழ்வதுவே;
>
> எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
> கறைகெழுவேல் கண்ணோ கடுங்கூற்றம் காணீர்
> கடுங்கூற்றம் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
> மடங்கெழு மென்சாயல் மகளா யதுவே;
>
> புலவுமீன் வெள்ளுணக்கல் புள்ளோப்பிக் கண்டார்க்கு
> அலவநோய் செய்யும் அணங்கிதுவோ காணீர்
> அணங்கிதுவோ காணீர் அடும்பமர்தண் கானல்
> பிணங்குநேர் ஐம்பாலோர் பெண்கொண் டதுவே."

இம்மூன்று பாடல்களும், தமியளாக இடந்து எதிர்ப் பட்ட தலைவியை நோக்கித் தலைமகன் கூறியவை. இம்மூன்று பாடல்களுள், முதற் பாடலில் தலைவியின் பேரழகைக் கண்டு வியந்த தலைமகன், "வானில் விளங்கும் திங்கள், இராகு கேதுக்கள் தன்னைக் கவரும் என்று அஞ்சி, இங்கு இவ்வழகிய பெண்வடிவு கொண்டு திரிகின்றதோ" என ஐயுறுகின்றனன். உலகில் எத்தனையோ அழகிய பெண்களின் முகங்களைக் கண்டு ளேன். ஆனால், அம்முகங்களில் ஏதேனும் ஒரு குறை காணப்படும். இம்முகமோ யாதொரு குறையுமின்றி விளங்கு கிறது என்பதை, "தீர்ந்த முகம்" என்னும் சொற்றொடர் நன்கு

விளக்கிக் காட்டுகின்றது. இப் பாடலில், "கயல் எழுதி வில் எழுதிக் கார் எழுதிக் காமன் செயல் எழுதித் தீர்ந்த முகம்" என்னும் தொடரைப் படிக்குந்தோறும் உள்ளத்தில் உவகை சுரக்கின்றது. காமன் செயலாவது பிறரது கலங்காத உள்ளத்தையும் கலக்கும் தொழில்.

இரண்டாவது பாடலில், "கடுங்கூற்றம், கடல் வளத்தால் வாழ்பவரது சிறிய ஊரிலே வந்து, மடம்கெழு மென் சாயல் மகள் போலத் திரிகின்றதோ!" எனத் தலைவன் ஐயுறுகின்றான்.

மூன்றாவது பாடலில், "ஆடவரைத் தாக்கி, அவர்களுடைய உயிரைக் கவரும் அணங்கு, புலால் நாறும் மீனின் வெளிய வற்றலைக் கவரும் பறவைகளை ஓட்டும் போலிக் காரணத்தை மேற்கொண்டு, குளிர்ந்த கானலிலே ஒரு பெண் வடிவு கொண்டு திரிகின்றதோ!" எனத் தலைவன் வியந்து என்னுகின்றான்.

"பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணைஇள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரும் மின்னிடையே எனையிடர் செய்தவையே;

திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே எனையிடர் செய்தவையே;

வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே தனியவள் திரியிடமே
முளைவளர் இளநகையே முழுமதி புரைமுகமே
இளையவள் இணைமுலையே எனையிடர் செய்தவையே."

இம்மூன்று பாடல்களும், பாங்கன் கேட்பத் தலைமகன் உற்றது உரைத்தவை.

தலைமகனது இன்னுயிர்ப் பாங்கன், தலைவனது உடல் மெலிவையும் உள்ளச் சோர்வையும் கண்டு, அம்மெலிவுக்கும்,

சோர்வுக்கும் உரிய காரணத்தை வினவினர். அப்பொழுது தலைவன் பாங்கனை நோக்கி, "நண்ப, நான் ஒரு பெண்ணரசியைக் கண்டேன். அவளுடைய பழுதறு திருமொழியும், பணையிள வனமுலையும், முழுமதி புரைமுகமும், வளைந்த புருவமாகிய இரண்டு வில்லும், எழுதற்கரிய மின்போன்ற இடையும், மணம் பரந்த சுருண்ட கூந்தலும், கயல் மீன் போலும் இரண்டு விழிகளும், முளைபோல் வளரும் இள நகையும், என்னைத் துன்புறுத்தின. அவளுடைய உறுப்புக்களை யன்றி, அவள் திரிந்த இடமும், அங்கு விளங்கிய நறுமலரும் அம்மலர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிய சோலையும் எனக்குத் துன்பத்தைச் செய்தன" என்றான்.

உற்ற துரைத்தல் என்னும் துறைக்கு, திருக்கோவையாரில்,

"கோம்பிக் கொதுங்கிமே யாமஞ்ஞை குஞ்சரம் கோளிழைக்கும்
பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கப் பணைமுலைக்கே
தேம்பல் துடியிடை மான்மட நோக்கிதில் லைச்சிவன்தாள்
ஆம்பொன் தடமலர் சூடுமென் ஆற்றல் அகற்றியதே"

என வந்துள்ள செய்யுள் ஈண்டு நினைந்தற்குரியது.

"கடல்புக்கு உயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்
உடல்புக்கு உயிர்கொன்று வாழ்வைமன் நீயும்
மிடல்புக்கு அடங்காத வெம்முலையோ பாரம்
இடர்புக்கு இடுகும் இடைஇழவல் கண்டாய்;

கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை
நெடுங்கண் வலையால் உயிர்கொல்வை மன்நீயும்
வடங்கொள் முலையால் மழைமின்னுப் போல
நுடங்கி உகுமென் நுசுப்பிழவல் கண்டாய்;

ஓடும் திமில்கொண்டு உயிர்கொல்வர் நின்ஐயர்
கோடும் புருவத்து உயிர்கொல்வை மன்நீயும்
பீடும் பிறரெவ்வம் பாராய் முலைசுமந்து
வாடும் சிறுமென் மருங்கிழவல் கண்டாய்."

இம்மூன்று பாடல்களும், கூட்டம் நீட, இடந் தலைப் பாட்டில் கூடலுறுவான் ஆற்றாமை கூறியவை.

"குலத்தளவே யாகும் குணம்" என்றபடி, தலைவியின் கொடுந் தொழிலுக்குக் காரணம் அவளது குலப் பெரியோரின் செயலே என்று தலைவன் கூறுவதாக மூன்று பாடல்களும் அமைந்துள்ளன:

"உன் தந்தை முதலியோர் கடலிற் புகுந்து உயிர்களைக் கொன்று வாழ்வர்; நீயும் என் உடலிற் புகுந்து உயிரைக் கொன்று வாழ்கின்றனை. நின் தந்தை கொடுங்கண் வலையால் உயிர்களைக் கொல்வான். நீயும் நெடுங்கண் வலையால் என் உயிரைக் கொல்லுகின்றனை. உன் மூத்தோர், கடலில் ஓடும் படகினைக்கொண்டு உயிர்களைக் கொல்வர்; நீயும் நினது வளைந்த புருவத்தால் என் உயிரைக் கொல்லுகின்றனை. இவை உன் குல தருமம் போலும். நின் கொடுந்தொழிலின் பயனாக நின் இடை முரியும். ஆதலின், அத்தகைய கொடுந்தொழிலைக் கைவிட்டு, என் கூட்டந்தாய், நின் இடையைப் பாதுகாத்துக் கொள்க" என்ற கருத்தினை மேலே யுள்ள மூன்று செய்யுள் களிலும் காண்க.

"பவள உலக்கை கையால் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய;

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண்
கொன்னே வெய்ய கூற்றம் கூற்றம்;

கள்வாய் நீலம் கையின் ஏந்திப்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வேல் அல்ல வெய்ய வெய்ய."

இம்மூன்று பாடல்களும் குறியிடத்துக் கண்ட பாங்கன் சொல்லியவை.

முதற் பாடலில், "பவள உலக்கை கையால் பற்றித் தவள முத்தம் குறுவாள்" என்ற சொற்றொடர் தலைவியின் செல்வச் சிறப்பை விளக்குகின்றது. இவளது கண், நிறத்தால் குவளைபோன் றிருப்பினும், வடிவால் வேல் போன் றிருப்பினும், உண்மையில் கொடிய கூற்றமே என்பது மூன்று பாடலின் திரண்ட கருத்து.

**"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்**
**நோக்கம்இம் மூன்றும் உடைத்து"**

என்னும் திருக்குறளும், "என்னை வருத்துதல் உடைமையில் கூற்றமோ! என்மேல் ஓடுதல் உடைமையால் கண்ணோ! இயல்பாக வெருவுதல் உடைமையால் பிணையோ!" எனப் பரிமேலழகர் கூறிய உரையும் ஈண்டுச் சிந்தித்தற்குரியன.

கோவலன், யாழில் வாசித்த கானல் வரிப்பாட்டுக்களைக் கேட்ட மாதவி, கோவலனது உள்ளம் வேறு மகள்பால் சென்றுள்ளது போலும் என்றெண்ணி, அதனால் ஊடல் கொண்ட மனத்தளாகி, அவ்வூடலைப் புலப்படுத்தாமல், கலவியால் மகிழ்ந்தவள் போல, கோவலன் கையிலிருந்தும் யாழை வாங்கி, தனக்கு வேறு குறிப்பு இல்லாதிருந்தும், கோவலன் வேறு குறிப்பினனாய்ப் பாடினமையின், தானும் வேறு குறிப்புடையாள் போல அவனுக்குத் தோன்ற, கானல் வரிப்பாடலாகிய உருக்களை, நெய்தல் நிலத்திற்குரிய தெய்வமாகிய வருணன் வியப்புறவும், மக்கள் மனம் மகிழவும், யாழின் இசையோடு கலந்து பாடத்தொடங்கினாள் :

**"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்**
**கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி**
**கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த எல்லாம் நின்கணவன்**
**திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி;**

பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை அருகசைய நடந்த எல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி;

வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி ஆள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி."

இம்மூன்று பாடல்களையும் ஆற்றுவரி என்பர். அவற்றுள், முதற் பாடலில், காவேரியை ஒரு பெண்ணாக உருவகம் செய்து, அதற்கேற்பச் சிலேடை வகையால் கூறியுள்ளது மனத்திற்கு மிக்க மகிழ்ச்சியை யளிக்கின்றது.

புகழை விரும்பாமல், நற்குண நற்செயல்களை மேற் கொள்ளாமல் உள்ள மனைவியைப் பெற்றுள்ளவனுக்கு ஏறுபோல் பீடு நடை இன்மைபோல், ஆடவர்க்குரிய அருங்குணங்கள் அமை யப்பெருதவனை வாழ்க்கைத் துணைவனாகப் பெற்ற மகளுக்கும் பிடிபோன்ற பீடு நடை யில்லை என்பது உண்மை. மேலே வந்துள்ள மூன்று பாடலில், முதற் பாடற்கண், காவேரி யென்னும் காரிகை, மணிப்பூ ஆடை போர்த்து, கயல் மீன் போன்ற கருங்கண்களைப் பரப்பிப் பீடு நடை நடப்பதற்குக் காரணம், அவளுடைய கொழுநனாகிய சோழனது திருந்து செங் கோல் வளையாமையே என்பது குறிக்கப்பெற்றுள்ளது.

இரண்டாவது பாடலில், மயில்கள் ஆட, குயில்கள் பாட, காவேரி யென்னும் கற்பரசி பெருமிதத்துடன் நடந்து செல் வதற்குக் காரணம், தன் நாயகனாகிய சோழனது நாம வேலின் திறமே என்பதை அறிகிறோம். நாம வேல், பகைவர்க்கு அச்சத்தை விளைவிக்கும் வேல். நாம் என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நாம என ஆயது. நாம் என்பது அச்சப்பொருளை யுடையது. நாமம் வேல் என்று கொண்டு, புகழுடைய வேல் என்றும் கொள்ளலாம். ஆடவன், அருங் குணங்களோடு, வீரமும் உடையவனாய் விளங்குதல் வேண்டும்.

மூன்றாவது பாடலிற் சோழனது நாட்டைக் குழந்தையாக்கி, காவேரியைத் தாயாக்கிய நயம் மிகவும் பாராட்டற்குரியது. கல்வியில் பெரியராய் விளங்கிய கம்ப நாடர்,

" இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்னதிங்
குரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம் "

என்று சரயு நதியின் நன்மையைக் கூற வந்த இடத்து, "சரயு என்பது தாய் முலை யன்னது" எனக் கூறியுள்ளது நினைந்து நினைந்து இன்புறுதற்குரியது.

இங்ஙனம், காவேரி தாயாகிப் பேருதவி புரிந்து ஒழியாது ஒழுகுதற்குக் காரணம், உயிர்களை நடுவு நிலை வழாது பாது காக்கும் சோழ மன்னனது அருளே என்பதும் மூன்றும் பாட்டின் கருத்து.

" தீக்கதிர் வாள்முகத்தாள் செவ்வாய்
மணிமுறுவல் ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலும்
மால்மகன்போல் வருதிர் ஐய
வீங்கோதம் தந்து விளங்கொளிய
வெண்முத்தம் விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல்
மீளும் புகாரே எம்மூர்;

மறையில் மணந்தாரை வன்பரதர்
பாக்கத்து மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை ஏழையம்
எங்ஙனம்யாங்கு அறிகோம் ஐய
நிறைமதியும் மீனும் எனஅன்னம்
நீள்புன்னை அரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்பல்
ஊதும் புகாரே எம்மூர்;

உண்டாரை வெல்நறு.வூணொளியாப்
பாக்கத்துள் உறையொன் றின்றித்
தண்டாநோய் மாதர் தலைத்தருதி
என்பதியாங்கு அறிகோம் ஐய
வண்டால் திரையழிப்பக் கையால்
மணல்முகந்து மதிமேல் நீண்ட
புண்தோய்வேல் நீர்மல்க மாதர்
கடல்தூர்க்கும் புகாரே எம்மூர்."

இம்மூன்று பாடலில், முதற் பாடல் கையுறை மறை. தலைமகன் கையுறையாக முத்துக்களை நல்க, "எம் ஊரில், கடல் தரும் முத்துக்கள் மிகுதியாக வுள்ளன. ஆதலின், இவை வேண்டா" எனத் தலைவி மறுக்கின்றாள். ஒலி மிக்க கடல், வெள்ளிய முத்துக்களைத் தந்து, அவற்றிற்குப் பதிலாக, மணம் பொருந்திய கானலிடத்துப் பூமாலைகளைப் பெற்று, பண்டமாற்றுச் செய்வோர் போல் மிளிரும் புகார் எனக் கூறப்பட்டிருப்பதிலிருந்து புகாரின் பெரு வளத்தினை அறிகின்றோம்.

இரண்டாம் பாடலில், களவில் கூடிப் பிரிந்து சென்ற தலைவன் வரவு நீடித்தலின், தலைமகள் கை வளைகள் கழன்று, களவினை வெளிப்படுத்தின என்பதை அறிகின்றோம்.

மூன்றும் பாடலான் சிறுமியரது பேதைத்தன்மை புலப் படுகிறது. உண்டவர்களைத் தன் கடுமையால் வெல்லும் கள் மறையாது வெளிப்படும் பாக்கம் என்று தலைவி கூறுவதிலிருந்து தன் காம நோயும் மறையாது வெளிப்படும் என்பது குறிப்பி னால் வெளிப்படுகின்றது.

'புணர்துணையோ டாடும் பொறியலவன் நோக்கி"
இணர்ததையும் பூங்கானல் என்னையும் நோக்கி
உணர்வொழியப் போன ஒலிதிரை நீர்ச் சேர்ப்பன்
வணர்சுரி ஐம்பாலோய் வண்ணம் உணரேனால்.'

இப்பாடல் தோழி கூற்று. "புணர் துணையோடாடும் பொறி அலவன் நோக்கி, இணர் ததையும் பூங்கானல் என்னையும்

நோக்கி" என்ற சொற்ருடரால், நண்டு துணையோடு ஆடுதல் போல, யானும் தலைவியோடாடி இன்புறுமாறு நீயே கூட்டுவித்தல் வேண்டும்" என்ற தலைவன் குறிப்பினைத் தலைவி உணரும் வண்ணம் செய்கின்ருள் தோழி. "உணர்வொழியப் போன ஒலி திரை நீர்ச்சேர்ப்பன்" என்றமையால், அத்தகை யோன்பால் நீ அருள்செய்யாதிருத்தல் நன்றன்று என்பதைத் தோழி குறிப்பினுல் புலப்படுத்தினுள்.

'தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தரை நாமறக்க மாட்டேமால் ;

புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்நீ யெய்தும் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ ?

புள்ளியல்மான் தேர்ஆழி போன வழியெல்லாம்
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீர் ஓதம் சிதைத்தாய்மற் றெம்மோடீங்கு
உள்ளாரோ டுள்ளாய் உணராய்மற் றென்செய்கோ !

நேர்ந்த நம்காதலர் நேமி நெடுந்திண்தேர்
ஊர்ந்த வழிசிதைய ஊர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே இதுதகாது என்னீரே ;

நேர்ந்தநம் காதலர் நேமி நெடுந்திண்டேர்
ஊர்ந்தவழி சிதைய ஊர்ந்தாய்வாழி கடலோதம்
ஊர்ந்தவழி சிதைய ஊர்ந்தாய்மற் றெம்மொடு
தீர்ந்தாய்போல் தீர்ந்திலையால் வாழி கடலோதம்.'

இவ்வைந்து பாடல்களும் காமம் மிக்க கழிபடர் கிளவி. அவற்றுள், முதற் பாடலில், "தண்ணளியும் தாமும் தேரும்

எனப் பின்பு சில சொல்லப் புக்கு, அதனைக் காதல் மிகுதியால் கலங்கி, விட்டார் என்றாள்" என அரும்பத வுரை ஆசிரியர் கூறினர். "நம்மை மறந்தாரை" எனத் தன்மைப் பன்மையில் கூறியிருப்பதால், தன்னையே யன்றித் தன்னுடன் இன்பம் துய்த்த இடத்தையும், அப்பொழுது ஆண்டிருந்த அடும்பு, அன்னம் முதலியவற்றையும் மறந்தனரே எனத் தலைவி தலைவனது செயலை வியந்து கூறியது புலனாகின்றது. "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்" என்ற சொற்றொடரிலிருந்து தலைவியின் உயர்ந்த உள்ளப் பண்பை அறிகிறோம்.

இரண்டாம் பாடலில், தலைவி, நெய்தல் மலரை விளித்து, "துன்பம் உழவாய் துயிலப் பெறுதி" என்கின்றாள். நெய்தல் மலர் கண்போன் றிருப்பதால் இரண்டும் ஓர் இனப்பொருளாம். அங்ஙனம் இருப்ப, தலைவியின் கண் மாலைப்போதில் கண்ணீர் விட்டுக் கலங்கிக்கொண்டிருக்க, நெய்தல் மலர் கண்வளர்தல், அதாவது குவிந்திருத்தல், முறையன்று எனத் தலைவி கருதி, அவ்வாறு கலையின்றிக் கண்வளர்வதற்கு ஒரு காரணத்தையும் கற்பிக்கின்றாள். "இன்கள்வாய் நெய்தால்" என விளிக்கும் விளியால், கட்குடியர், இனத்தினர் துன்பத்திற்கு வருந்தாது மயங்கித் துயிலல் இயல்பு போலும் என்பதைக் குறிப்பினால் தெரிவிக்கின்றாள் தலைவி. உன்போல் நானும் உறங்குவேனாகில், ஒருகால் தலைவனைக் காணலும் கூடும். நீ உறங்குவதால், "வன்கணார் கானல் வரக்கண்டு அறிதியோ?" எனத் தலைவி கேட்கும் கேள்வி மிக்க நயமுடைத்து.

**'நனவினால் நல்கா தவரைக் கனவினால்**
**காண்டலின் உண்டென் னுயிர்'**

என்னும் திருக்குறள் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

மூன்றாம் பாடலில், தலைவி, கடலை விளித்து, "தெளிந்த நீரையுடைய கடலே, பறவையின் இயல்பையுடைய குதிரை பூட்டிய தேரின் உருளை சென்ற வழியெல்லாம் அழித்துவிட்டாய்"

என்று கூறி, அதற்குக் காரணம், அக்கடல் தன் காம நோயை அறியாமை என்று கழறுகின்றாள்.

நான்காம் பாடலில், தலைவி, "பூந்தண் பொழிலே, புணர்ந்தாடும் அன்னமே, ஈர்ந்தண் துறையே" எனக் கேளாதவற்றைக் கேட்குநபோல விளித்து, "என் தலைவன் செயலைக் கண்ட நீங்கள், இங்ஙனம் தலைவியைப் பிரிந்து செல்லல் தகாது என்று அவற்குச் சொல்லாமைக்குக் காரணம் என்னோ!" எனச் சொல்லாதவற்றைச் சொல்லுநபோல எண்ணி வினாவினாள்.

ஐந்தாம் பாடலில், தலைவன் தேர் சென்றவழி மறையும்படி செய்தமையால், அக்கடல் தலைவிக்கு உறவுபோல் அருகிருந்தும், உண்மையில் உறவாயிற்றில்லை எனத் தலைவி கூறுகின்றாள்.

'நன்னித் திலத்தின் பூண் அணிந்து
கலஞ்சார் பவளக் கலையுடுத்துச்
செந்நெற் பழனக் கழனிதொறும்
திரையு லாவு கடற்சேர்ப்ப
புன்னைப் பொதும்பர் மகரத்தின்
கொடியோன் எய்த புதுப்புண்கள்
என்னைக் காணா வகை மறைத்தால்
அன்னை காணின் என்செய்கோ !

வாரித் தரள நகைசெய்து
வண்செம் பவள வாய்மலர்ந்து
சேரிப் பரதர் வலைமுன்றில்
திரையு லாவு கடற்சேர்ப்ப
மாரிப் பீரத் தலர்வண்ணம்
மடவாள் கொள்ளக் கடவுள்வரைந்து
ஆர்இக் கொடுமை செய்தாரென்று
அன்னை அறியின் என்செய்கோ !

புலவுற் றிரங்கி அதுநீங்கப்
பொழிற்றண் டலையில் புகுந்துதிர்ந்த
கலவைச் செம்மல் மணங்கமழத்
திரையு லாவு கடற்சேர்ப்ப

பலவுற் றொருநோய் துணியாத
படர்நோய் மடவாள் தனியுழப்ப
அலவுற் றிரங்கி அறியாநோய்
அன்னை அறியின் என்செய்கோ!'

இப்பாடல்கள் மூன்றும், தோழி, அலர் அறிவுறீஇ, வரைவு கடாவியவை.

முதற் பாடலில், "புன்னைப் பொதும்பர் மகரத்திண் கொடியோன் எய்த புதுப்புண்கள்" எனத் தலைவியின் துன்பத்திற்குக் காரணமாயுள்ளவற்றைப் புதுப்புண்கள் எனத் தோழி கூறுவதை நோக்கின், அப்புதுமை, தலைவியின் துன்பத்திற்குக் காரணமாயுள்ளவை கண்ணுக்குப் புலனாகாமையே என்பதை உய்த்துணரலாம். சாதாரண புண்கள், அங்ஙனமின்றிக் கட் புலனாதல் தெளிவாம். "அன்னை காணின் என்செய்கோ" என்ற தொடரால், தலைவியின்பால் வந்துற்ற இந்நோயை, அன்னை உணர்வதற்கு முன்னரே, நீ அவளை வரைந்து கோடல் வேண்டும் எனத் தோழி தலைவற்குக் குறிப்பால் உணர்த்துவதை அறிகிறோம்.

இரண்டாம் பாடலில், தோழி, தலைவனை நோக்கி, "தலைவியானவள் மாரிக்காலத்து மலரும் பீர்க்கின் மலர் போலும் நிறத்தைக் கொள்வாளாயின், இக்கொடுமை செய்தவர் யார் என்று அன்னை ஆராய்ந்து அறியின், நான் என்ன செய்வேன்" என்கிறாள். இப்பாட்டில், "பீரத்து அலர் வண்ணம்" என்பது பசலை. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நற்றிணையில்,

'நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந்தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சி'

என வந்துள்ள கபிலர் பாடலில், பசத்தல் என்ற சொல்லின் பொருளை நன்கு விளக்கக் கருதிய நல்லிசைப் பெரும் புலவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர், "பசத்தல்-பசலை பாய்தல். இது, கண்ணாடிமேல் வாயினால் ஊதிய ஆவி பட்டு, அக்கண்ணாடி மழுக்கம் அடைவதுபோலத் தலைவியின்

நெற்றியிலுள்ள ஒளி, தலைவனைப் பிரிதலால் மழுங்கித் தோன்று தல்; இதனைப் பீர் எனவும் பொன் எனவும் உரைப்பர்" எனக் கூறியிருத்தலையும் அறிக.

மூன்றும் பாடலில், காம நோய், "பலவுற்று ஒரு நோய் துணியாத படர்நோய்" எனவும், "அலவுற்று இரங்கி அறியா நோய்" எனவும் கூறப்பெற்றுள்ளது. அத்தொடர்களுக்கு, "பல துன்பங்களும் உறுதலால், இன்னதொரு நோயெனத் துணிய லாகாத படர் நோயை" எனவும், "மெலிதலும் இரங்கலும் புலப்படாமையின், ஒருவராலும் அறியப்படாத அந்நோயை" எனவும் நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் உரை வரைந்துள்ளார். தெய்வப் புலமைத் திருவள்ளுவர், இந் நோயை, எல்லாப் பொருளினும் மிக மெல்லிய பூவாக உருவ வகஞ்செய்து,

'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்'

எனக் கூறியது கற்றோர்க்கு கழிபேருவகையை அளியாமல் இராது. அதனோடு அமையாமல். பின்னரும், "மலரினும் மெல்லிது காமம்" எனக் கூறினர் அப்பொய்யில் புலவர்.

'இளையிருள் பரந்ததுவே எற்செய்வான் மறைந்தனனே
களைவரும் புலம்புநீர் கண்பொழீஇ உகுத்தனவே
தளையவிழ் மலர்க்குழலாய் தணந்தார்நாட் டுளதாங்கொல்
வளைநெகிழ எரிசிந்தி வந்தஇம் மருள்மாலை;

கதிரவன் மறைந்தனனே காரிருள் பரந்ததுவே
எதிர்மலர் புரையுண்கண் எவ்வநீர் உகுத்தனவே
புதுமதி புரைமுகத்தாய் போனார்நாட் டுளதாங்கொல்
மதியுமிழ்ந்து கதிர்விழுங்கி வந்தஇம் மருள்மாலை;

பறவைபாட்டு அடங்கினவே பகல்செய்வான் மறைந்தனனே
கிறைநில்லா நோய்கூர நெடுங்கணீர் உகுத்தனவே
துறுமலர் அவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையாய் என்னுயிர்மேல் வந்தஇம் மருள்மாலை.'

இம்மூன்று பாடல்களும், பொழுது கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குரைத்தன.

மாலைப் பொழுது, காதலரோடு கூடியுள்ளோர்க்கு இன்பமும், காதலரைப் பிரிந்துள்ளார்க்குத் துன்பமும் விளைத்தல் இயல்பு. "எரி சிந்தி வந்த இம்மருள் மாலை" என்பது முதற் பாடலிலும், "மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த இம்மருள் மாலை" என்பது இரண்டாம் பாடலிலும், "மறவையாய் என்னுயிர்மேல் வந்த இம்மருள் மாலை" என்பது மூன்றாம் பாடலிலும் வந்துள்ள தொடர்கள். எரி எழ விழித்து வருதலும், ஒன்றை விழுங்கிக்கொண்டு வருதலும், உயிர்மேல் பாய்ந்து வருதலும் புலியின் இயற்கை ஆகையால், ஈண்டு மாலைப்பொழுது புலியாக உருவகஞ்செய்திருத்தலை உய்த்துணர்க. "எனக்கு இவ்வண்ணம் துன்பத்தைத் தரும் மாலைப்பொழுது என்னைத் துறந்தார் நாட்டுளதாங்கொல்" எனத் தலைவி ஐயுறாநின்றாள். தலைவர் நாட்டிலும், இம்மாலைப்பொழுது இருக்குமாயின், அவர் இங்ஙனம் என்னைப் பிரிந்திரார் என்பது குறிப்பு.

கவிச் சக்கரவர்த்தியாய் விளங்கிய கம்பரும், அந்திமாலைப் பொழுதைக் காலனாக உருவகம் செய்துள்ளார். தென்றலைக் காலனது பாசமாகவும், செவ்வானத்தை அவனது செம்மயிராகவும், இருளை அவனது கரு நிறமாகவும் கூறும் அழகிய செய்யுளைக் கீழே காண்க :

**'விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்**
**எரிகிறச் செக்கரும் இருளும் காட்டலால்**
**அரியவட்கு அனல்தரும் அந்தி மாலையாம்**
**கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினன்'**

**'கைதை வேலிக் கழிவாய் வந்தெம்**
**பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்**
**பொய்தல் அழித்துப் போனார் அவர்நம்**
**மையல் மனம்விட் டகல்வார் அல்லர் ;**

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீகல் கென்றே நின்றார் ஒருவர்
நீகல்கென்றே நின்றார் அவர்கம்
மீனேர் கோக்கம் மறப்பார் அல்லர் ;

அன்னம் துணையோ டாடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் கோக்கி நின்றார் அவர்கம்
பொன்னேர் சுணங்கின் போவார் அல்லர்.'

இம்மூன்று பாடல்களும் மெலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தல்; ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி இயற்பழிக்கத் தலைமகள் இயற்பட மொழிந்ததூஉமாம்.

முதற்பாடலில், "பொய்தல் அழித்துப் போனார் அவர் நம் மையல் மனம் விட்டகல்வார் அல்லர்" என்ற அடிகளால், மகளிர் மையல் வயப்பட்ட வுடனே, அதற்கு முன்னர் தாம் மேற்கொண்டிருந்த விளையாட்டுக்கள் எல்லாம் மறக்கப்படு கின்றன என்பதும், மெய்யடியார்கள், ஆண்டவன் திருவடிகளை இடையறாது சிந்தித்துக் கொண்டிருப்பதுபோல், மகளிரும் தலைவரது திருவுருவத்தையே மனக்கோயிலில் வைத்து வழிபடு கின்றனர் என்பதும் தெளிவாம்.

இரண்டாம் பாடலில், "ஒருகால் நம் அருளை வேண்டி நம்பின்னே குறையிரந்து நின்றவர், நமது மானையொத்த களங்கமற்ற பார்வையை மறப்பார் அல்லர்" எனத் தலைவரது உயர் குணத்தை எடுத்துக் காட்டும் வாயிலாகத் தலைவி தலைவன்பால் உள்ள தன் உள்ளன்பை வெளிப்படுத்துகின்றாள்.

இவ்வண்ணம், கோவலன் பாடினாற்போல் பாடிய மாதவி, பின்னர், காந்தள் மலர்போலும் தன் மெல்லிய விரலால், கைக் கிளை குரலாகிய இன்னிசையுடைய செவ்வழிப்பாலை யென்னும் இசையை எழுப்பி, அதனை முறைமையிற் பாடிப் பின் வேறொரு பண்ணினைப் பாடத் தொடங்கினாள்.

நுளையர் விளரி நொடிதருந்தீம் பாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாயால் மாலை
இளிகிளையிற் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்
கொளைவல்லாய் என்னாவி கொள்வாழி மாலை ;

பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளின் நீழல்
இருந்தேங்கி வாழ்வார் உயிர்ப்புறத்தாய் மாலை
உயிர்ப்புறத்தாய் நீயாகில் உள்ளாற்ரு வேந்தன்
எயிற்புறத்து வேந்தனோடு என்னாதி மாலை ;

பையுள்நோய் கூரப் பகல்செய்வான் போய்வீழ
வையமோ கண்புதைப்ப வந்தாய் மருள்மாலை
மாலைநீ யாயின் மணந்தார் அவராயின்
ஞாலமோ நல்கூர்ந் ததுவாழி மாலை.

இம்மூன்று பாடல்களில், முதற்பாடற்கண், மாலைப்பொழுதில் தனித்திருந்து மிக வருந்தும் தலைவி, அம்மாலைக் காலத்தை விளித்து, "கொளைவல்லாய் என்னாவி கொள்வாழி மாலை" எனக் கூறுகின்றாள். ஈண்டு,

'மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது'

என்ற திருக்குறளும், இக்குறளுக்குப் பரிமேலழகர் "பொழுதே, நீ முன்னாள்களில் வந்த மாலையோவெனின், அல்லை; இருந்தவாற்ருன் அந்நாள் காதலரை மணந்த மகளிர் உயிரையுண்ணும் இறுதிக்காலமாய் இருந்தாய்" என்றெழுதிய உரையும் சிந்தித்தற்குரியன.

இரண்டாம் பாடலில், "பிரிந்தார் பரிந்துரைத்த பேரருளின் நீழல் இருந்தேங்கி வாழ்வர்" என்ற தொடரில், தலைவரைப் பிரிந்தும் தலைவிமார் உயிருடன் இருப்பதற்குக் காரணம், தலைவரது பேரருளே என்றும், அவ்வருள் என்னும் மரத்தின் நிழலிலே தலைவியர் வாழ்கின்றனர் என்றும் கூறும் கூற்று மிக்க நயமுடையது. பிரிந்தார் பரிந்துரைத்தது—பிரியேம்

என்று கூறியது. இக்கருத்தோடு ஒத்த திருக்கோவையாரின் திருப்பாடலைக் கீழே காண்க:

'சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தால் இகழப் படுமே மடமான் விழிமயிலே
அந்தா மரையன்ன மேனியன்னை யானகன் றாற்றுவனோ
சிந்தா குலமுற்றென் னைவென்னை வாட்டம் திருத்துவதே.'

'நீத்துழைஇ வந்தஇச் செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்தஇத் துயரெஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடல் தெய்வம்நின் மலரடி வணங்குதும்.'

இப்பாடல், வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகன் சிறைப் புறத்தானாகக் கூறியது.

இறுதியாகத் தலைவி தலைவனுக்காகக் கடலுக்குரிய தெய்வத்தின் கழலினை வணங்குன்றாள்.

இம் மயங்கிய மாலைப்பொழுது வருத்தும் என்று கருதாது கூறிய பொய்யாகிய சூளுரையைப் பொறுத்துக் கொள்ளும்படி, தலைவி கடல் தெய்வத்தை வணங்குவதிலிருந்து அவளுக்குத் தலைவன்பால் உள்ள பேரன்பு புலனாகின்றது.

இவ்வண்ணம் மாதவி பாடிய பாடல்களைக் கேட்ட கோவலன், "நான் கானல் வரி பாட, மாதவி அவ்வண்ணமே பாடாமல் வேறொன்றின்மேல் மனம் வைத்து, வஞ்சனையுடன் கூடிய பொய்கள் பலவற்றைக் கூட்டும் மாயத்தாளாகிப் பாடினாள்" என எண்ணினான். யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ் வினை வந்து தோன்றியதாகலின், அவன், உவா நாளில் பொருந்திய திங்கள் போலும் முகத்தினையுடைய மாதவியை அகத்திட்ட கை நெகிழ்ந்தனனாய், மாதவி உடன் எழாதிருக்க, ஏவலாளர் தன்னைச் சூழ்ந்து உடன்வரப் போயினான். அவ்வாறு கோவலன் சென்ற பின்னர், மாதவியும், செயலற்ற மனத்தளாய், வண்டியினுள்ளே அமர்ந்து தனியே தன் மனை புகுந்தாள்.

# வேனிற் காதை

மூவேந்தர் ஆண்ட தமிழ் நாட்டைக் கூற வந்த இளங்கோ அடிகள், அந் நன்னாட்டிற்கு எல்லையும் கூற எண்ணி,

**'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு'**

என்றார்.

வடக்கின்கண் திரு வேங்கட மலையும், தெற்கின்கண் குமரிக் கடலும் எல்லையாக வரையறுக்கப்பட்ட குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய நல்ல தமிழ் நாட்டிடத்தே யெனத் தமிழ் நாட்டிற்கு எல்லை கூறியிருத்தலைக் காண்க.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்திலும்,

**'வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து'**

என, வேங்கடமும், தென் குமரியும் தமிழ் நாட்டிற்கு எல்லை யாகக் குறிக்கப்பெற்றுள்ளமை காண்க. ஆனால், ஈண்டு, பனம்பாரனார், குமரிக் கோடென்றேனும் குமரி யாறென்றேனும் வெளிப்படக் கூறிற்றிலர்.

இந்நூல் காடுகாண் காதையில்,

**'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'**

என வந்துள்ள அடிகளிலிருந்து, கடல் கோளுக்கு முன்னர், குமரி மலை யிருந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது.

குமரி யாறு என்னாது குமரிக்கடல் என இளங்கோ அடிகள் கூறியதற்கு, அடியார்க்கு நல்லார் கூறும் காரணத்தைக் கண்டு தெளிக :

"நெடியோன் குன்றமும் தொடியோள் நதியும்" என்னுது, பௌவமும் என்றது என்னை யெனின், முதலூழி யிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும், இறையனாரும், குமர வேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்று இவர் உள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர், எண்ணிறந்த பரிபாடலும், முது நாரையும், முது குருகும், களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து, நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயனார், காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறா யுள்ளார் எண்பத்தொன்பதின்மர். அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வட எல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவத ஆறும், இவற்றின் நீர்மலி வானென மலிந்த ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின் பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும், தடநீர்க் குமரி வட பெருங்கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவமென்றார் என்றுணர்க. இஃது என்னைப் பெறுமாறெனின், "வடிவேல் எறிந்த வான்பகை பொறாது, பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து, குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பதனானும், கணக்காயனார் மகனார், நக்கீரனார் உரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் முகவுரை யானும், பிறவாற்றானும் பெறுதும்."

மக்களுக்கு இன்பத்தை அளிக்கும் இளவேனிற் காலத்தே, தென்றல் என்னும் இளங் காற்று வீசலும், மாமரக் குயில் மகிழ் குரல் காட்டலும் இயல்பு. அக்காலை, மாரன் என்பான், மகளிராம் சேனைத் துணைகொண்டு உலகெலாம் வென்று உவகை

பூப்பதை உலகம் அறியும். இந்நிகழ்ச்சியை இளங்கோ அடிகள் தீந்தமிழ்ச் சொற்களான் அணியமையத் தீட்டியுள்ள திறனைக் கண்டு களிப்பாம்:

‘மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்
அரைசு வீற்றிருந்த வுரைசால் சிறப்பின்
மன்னன் மாரன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில் வந்தனன் இவணென
வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த
இளங்கால் தூதன் இசைத்தனன் ஆதலின்
மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகர று கோலம் கொள்ளுமென் பதுபோல்
கொடிமிடைச் சோலைக் குயிலோன் என்னும்
படையுள் படுவோன் பணிமொழி கூற.’

மதுரை, உறந்தை, வஞ்சி, புகார் என்னும் திருவளர் நன்னாட்டில் அரைசு வீற்றிருந்த மாரனும் மன்னற்குப் போரில் வெற்றி பெறுவதற்குத் துணை செய்தலான் இளவேனிற் பருவத்தை, “மன்னன் மாரன் மகிழ்துணையாகிய இன்னிள வேனில்” என்றார். இளவேனிற் காலத்தில் பொதிய மலையிலிருந்து வந்து இன்பமளிக்கும் தென்றலை, இளவேனில் என்னும் இளவரசனது வருகையைத் தெரிவிக்க வந்த “இளங்கால் தூதன்” என்றும், “வளங்கெழு பொதியின் மாமுனி பயந்த மைந்தன்” என்றும் கூறியது கற்றோர் உள்ளத்தைக் கனிவிக்கும் தன்மையது. இளங்கால் தூதன் இசைத்ததைக் கேட்ட குயிலாகிய காளமூதி, மன்மதன் சேனையாம் மகளிரை நோக்கிப் போர்க்கோலம் கொள்ளுமாறு கூறினன். மகளிர் கொள்ளும் போர்க்கோலமாவது, அக்காலத்திற்கேற்பன வுடுத்து, முடித்துப் பூசிப் பூணுதல்.

கோவலனுடனே கடல் விளையாடச் சென்ற மாதவியின் இசைப்பாட்டால் கோவலன் ஊடிச் செல்ல, பின்னர், மாதவி தமியளாய்த் தன் மனை புகுந்து, வானுற வோங்கிய மேல்

நிலையில் ஒரு பக்கத்து நிலா முற்றம் ஏறி, பதுமாசனம் என்னும் இருக்கையில் இருந்து, யாழினைக் கையத்தே வாங்கி, மேற் செம்பாலையென்னும் பண்ணைக் கண்டத்தால் பாடி மயங்கி, அப் பண்ணையே யாழினும் பாடினள்.

மாதவி, புறநிலை மருதப் பண்ணை வாசித்துக்கொண்டிருந்த பொழுது மயங்கிப் பின்னர் தெளிந்து, கோவலனுக்குத் திரு முகம் போக்கும் செவ்வியளாகி எழுதத் துணிந்தாள்.

கோவலனுக்குத் திருமுகம் விடுக்கும்படி மாதவிக்கு கட்டளையிட்ட மாரனது பெருமையை,

**‘விரைமலர் வாளியின் வியனிலம் ஆண்ட**
**ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்’**

என்றார். அரசனது ஆணையால் எழுதப்பட்ட கடிதம் ஆகை யால் அதனைத் *திருமுகம் என்றார். மாதவி வரைந்த திரு முகத்தின் சிறப்பை விளக்க நினைந்த இளங்கோ அடிகள்

**‘ஒருமுக மன்றி உலகுதொழு திறைஞ்சும்**
**திருமுகம் * ***

என்றார். மன்மதன் மாநிலம் ஆண்ட ஒரு தனிச் செங்கோல் ஒரு மகன் ஆகையால், அவன் ஆணையால் வரையப்பட்ட திரு முகம் உலகு தொழுது இறைஞ்சுதற்கு உரியது என முற்றத் துறந்த முனிவர் கருதினர் போலும்.

மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி 7-9-40-ல் திரிச்சிராப்பள்ளி வானொலியில் மகாமகோபாத்தி யாய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், காதற் கடிதங்கள் என்னும் தலைப்பில், தம் நுண் மாண் நுழை புலத்தான் ஆராய்ந்து எழுதிப் படித்ததை ஊன்றிப் படித்து மகிழ்க :

---

*** திருமுகம்.—அரசர்கள் விடுக்கும் செய்தி வரைந்த ஏடு; மங்கலவழக்கு. சிலப்பதிகாரம், நாட்டார் உரை.**

"மாதவி கோவலனுக்கு எழுதிய கடிதம் வருமாறு

'மன்னுயி ரெல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூ தன்றிஃ தறிந்தீமின்'

என்பதாம். 'உலகத்திலுள்ள உயிர்களை யெல்லாம் தாம் மகிழும் துணையோடு புணர்விக்கும் இனிய இளவேனிலாகிய வசந்தன் என்பான் இளவரசன் ஆவன். ஆதலால் ஒழுங்குபடச் செய்யான். அன்றி, அந்திப் பொழுதின்கண்ணே அரும்புகின்ற விரக விதனத்தின் மேலே வந்து தோன்றிய திங்களாகிய செல்வனும், பிறப்பினும் கோட்டமுடையான். ஆதலால், கூடினோர் இடையே சிறிது தாழ்ப்பினும் , பிரிந்தோர் மறப்பினும், மண மிக்க பூ வாளிகளால், இன்பம் நுகரும் அவ்வுயிரைக் கொண்டொழி தல் அவனுக்கு புதியதொரு காரியமன்று. இதனை அறியுங் கள்' என்பது இப்பாசுரப் பகுதியின் கருத்தாம்.

மாதவி கடிதமாகக் கொண்டது, முதிர்ந்த அழகிய தாழை யினது வெள்ளிய இதழாகும். மாதவி, காவிரிப்பூம்பட்டினத்து உள்ளாள் ஆதலானும், அப்பட்டினம் கடற்கரைக் கண்ணது ஆதலானும், நெய்தல் நிலத்துக் கருப்பொருளாகிய தாழை மடலைக் கடிதமாகக் கொண்டாள். அம்மடல் நல்ல நிறமும், பளபளப்பும், நறுமணமும், காய்ந்துலர்ந்தாலும் கெடாத வண்மையும் உடையது. எழுது கோல், பித்திகைக் கொழு முகை ஆணி என்றதனால், நறுமணமுள்ள பூவரும்பின் முனையாகும். மை செம்பஞ்சின் குழம்பாகும். ஆகவே, வெண்ணிறமான தாழை யிதழிற் செந்நிறமான குழம்பில், பூவரும்பின் முனை கொண்டு எழுதப்பட்டதென்பதும், இக்கருவிகள் காதற் குறிப்பிற் கேற்றபடி இன்பம் விளைக்கும் பொருள்களாக அமைந்தன என்பதும் புலனாகும்.

மாதவி, கணிகையர் குலத்தவள்; கோவலன்பாலே சிறந்த காதற் கிழமை பூண்டொழுகியவள். அவள் கடிதம் எழுதியது முன் அவனோடு கூடி அனுபவித்த பின்னரேயாம். அந்நிலையில் அவன் உள்ளத்தைப், பன்னாட் பழகி அறிந்தவளாதலின், தன் கருத்தைக் குறிப்பாகப் புலப்படுத்தினாலும், அவன் அறிந்து கொள்வானென்று அவள் கருதுவது இயல்பே. இந்நிலையில் மன்மதன் கொடுமை கூறுபவளாய், 'அக் காம வேள்' என்னும் அரசற்கு மகிழ் துணை புணர்க்கும் வேனிலாளன் இளவரசன் ஆவன் என்றும், அவன் கொற்றக் குடை திங்களாதலால், . அத் திங்கட்செல்வன் பிறப்பிலே கோட்டமுடையன் என்றுங் கூறி, இப் பரிவாரங்களையுடைய காமன், புணர்ந்துளோர் ஊடல் முதலியவற்றால் காலம் நீட்டிப்பினும், ஓதல் முதலியன குறித்துப் பிரிந்துள்ளோர், குறித்துக் கூறிய பருவம் பொய்த்துத் தம் துணையை மறப்பினும், இன்பம் நுகரும் அவ்வுயிரைப் பூ வாளிகளாற் கொள்ளும் இயல்பினன் என்பது புதியதொான்றன்று. இதனை அறிவீர்களாக' என்று அவள் எழுதியது பொருத்தமே. உண்மைக் காதலுடையார் இயல்பை உலகியல்பில் வைத்துக் கூறு முகமாகத் தன்னிலையைப் புலப்படுத்தினாள். இங்கே, இளவரசனாகிய வேனிலாளன் துணை புணர்ப்பவன் ஆதலாலும், திங்கட்செல்வன் பிறப்பிலே கோட்டமுடையவன் ஆதலாலும், பிரிந்திருக்கும் தனக்கு நலம் செய்யார் என்னும் கருத்துத் தோன்றக் கூறியது இன்புறத்தக்கதொான்று.

மாதவி, கணிகையர் குலத்தளாயினும், மிக்க நாகரிகமும், ஒருவழிப்பட்ட காதலும், அறிவும் உடையவள் ஆதலின் இங்ஙனம் எழுதினாள். இவளுடைய உயர்ந்த நிலையைக் காதலனாகிய கோவலன் பிரிவில், உலக வாழ்க்கையைத் துறந்து, துறவு நிலை பூண்டதினாலே அறியலாம். இவள் எழுதிய கடிதம், கட்டப்பட்ட மலர் மாலையினோடு இயைத்து, வசந்தமாலை யென்னும் மற்றொருத்தி வாயிலாக விடுக்கப்பட்டதாகும். அது, சேய்மைக்கண் பிரிந்திருந்த கோவலற்குச் சில நாழிகை கழிந்துச் சேரத்தக்கதாதலின், நெடிது நிற்பதாகிய தாழை மடலாக அமைந்தது பொருத்தமே.

மாதவி, மடலவிழ் கானற் கடல் விளையாட்டினுள், கோவலன் ஊடக் கூடாதேகியபின், மன வேதனை தீரத் தன்னில்லத்துத் தனித்திருந்து, சிறிது நேரம் யாழை இசைத்துப் புற நீர்மை என்னும் பண்ணை வாசிக்குங்கால், அவ்விசை இன்பத்தில் காதலன் கூடலின்பம் தோன்ற, மயங்கித் தெளிவுற்றுப் பின்னர்த் தன் காதலற்கு இன்னவிதமாகத் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பதைத் தானே துணிந்து, திருமுகம் போக்கும் செவ்வியளாய் எழுதத் துணிந்தாள்.

இங்ஙனம் மாதவியின் இயல்பை மனத்துட்கொண்டு, அவள் தகுதிக்கேற்ப ஆசிரியர் அவ்ள் காதற் கடிதத்தை அழகுற முடித்தது பெரிதும் பாராட்டத்தக்கதே. இவ்வாறு, காதல் வயப்பட்டாருள், எழுதுவோர், எழுதப்படுவோர் இயல்புகள், எழுதும் வாசகங்கள், அவ்வாசகக் கருத்துக்கள், கடிதம், எழுதுகோல், மை முதலிய கருவிகள் என இவ்வெல்லாவற்றையும் புலவர் பெருமக்கள் செவ்விய முறையிற் சிந்தித்துக் காதல் நறுமணங் கமழப் புலப்படுத்தியது போற்றத்தக்கதொன்றும்."

பசந்த மேனியளாகிய மாதவி, பண்ணையும் திறனையும் பழிக்கும் நாவால், முற்றுத மழலைச் சொற்களான் பேசிப் பேசிக் கோவலற்குக் காதல் கடிதம் எழுதிக் காதலரது நினைவு மிகும் மாலைப்பொழுதில் வசந்தமாலையை வருக என அழைத்து, "நங்காய், இத் தூய மலர்மாலையின் இடையே உள்ள கடிதத்தின் பொருளையெல்லாம் என் காதலராகிய கோவலர்க்கு ஏற்பச் சொல்லி, இப்பொழுதே அவரை ஈண்டுக் கொணர்க" எனக் கூறி விடுத்தாள். அம்மாலையை வாங்கிச் சென்ற வசந்தமாலை, கூல மருகில் கோவலனைக் கண்டு, மாதவி தன்னிடம் கொடுத்த மாலையை அவனிடம் தந்தாள். அம்மாலையைப் பெற்ற கோவலன், மாதவி, முன்னர், ஊடியும் கூடியும் நிகழ்த்திய செய்கைகளை யெல்லாம், நாடக வுறுப்புக்களாகிய எண்வகை வரிக்கூத்தாகக் கொண்டு, வெறுத்துக் கூறிப் பின்னர் வசந்தமாலையை நோக்கி, "அழகிய அணிகளை அணிந்து விளங்கும் மடந்தாய், மாதவி, நாடக மகளே யாதலால், நடிப்புக்கள் அவளுக்கு இயல்

பானவையே" என்று அவள் அனுப்பிய திருமுகத்தை மறுத்தனன்.

கோவலன், திருமுகத்தை மறுத்தமைக்கு வசந்தமாலை வாடிய வுளத்தளாய், விரைந்து சென்று, தன் தோழி மாதவிக்குக் கோவலன் கூறிய கூற்றுக்களையும், திருமுகத்தை மறுத்த செய்தியையும் கூறினள். அப்பொழுது, கோவலனது மாறுபட்ட வுள்ள நிலையை யறியாத மாமலர் நெடுங்கண் மாதவி, வசந்தமாலையை நோக்கி, "மாட்சிமைப்பட்ட அணிகளை அணிந்து விளங்கும் மாதே, மாலை வாரார் ஆயினும் காலை காண்குவம்" என்று கூறிவிட்டு, பூ மலர் அமளிமிசை இமை பொருந்தாமற் கிடந்தனள்.

## வெண்பா

'செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தார் அசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனல் வந்ததால் என்னாங்கொல் இன்று
வளவேனற் கண்ணி மனம்.'

'ஊடினீர் எல்லாம் உருவிலான் தன்ஆணை
கூடுமின் என்று குயில்சாற்ற—நீடிய
வேனற்பா ணிக்கலந்தாள் மென்பூந் திருமுகத்தைக்
கானற்பா ணிக்கலந்தாய் காண்.'

## கனுத்திறம் உரைத்த காதை

வீடுகள்தோறும் கொடிபோன்ற இடையையுடைய மகளிர் மாலைக்காலத்தே மாணிக்க விளக்கை மை விளக்கோடே எடுத்து, முல்லை மலரை நெல்லுடன் தூர்வி, இல்லுறை தெய்வத்தை வணங்குவதைக் கீழ்வரும் அடிகளில் காண்க :

*'அகனகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை*
*நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த*
*மாலை மணிவிளக்கங் காட்டி.'*

இவ்வண்ணம் மாலைப்பொழுதில் மகளிர் தொழுவதை,

*'வெள்ளி வெள்ளி வீங்கிறைப் பணைத்தோள்*
*மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்*
*பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்*
*மடவரல் மகளிர் பிடகைப் பெய்த*
*செவ்வி யரும்பின் பைங்கால் பித்திகத்*
*தவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்து*
*இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ*
*நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது*
*மல்லல் ஆவண மாலை அயர.'*

என நக்கீரரும் நெடுநல்வாடையில் கூறியுள்ளார்.

கற்பின் செல்வியாகிய கண்ணகிக்குத் தேவந்தி என்னும் பெயருடைய பார்ப்பனத் தோழி ஒருத்தி உண்டு. அவள் வரலாற்றினையும், அவளுக்குக் கண்ணகிபால் இருந்த பேரன்பின் திறனையும் அறிக :

முன்னொரு நாள், மாலதி என்னும் பார்ப்பனி, தன் மாற்றாள் இல்லாத பொழுது பசியால் அழுத அவள் மகனுக்குப் பால் அளிக்க, அப்பால் விக்கி, அப்பாலகன் மாண்டான். அந் நிகழ்ச்சியைக்கண்டு உளம் மிக வருந்திய அப்பார்ப்பனி, மாண்ட மகவைக் கையில் ஏந்திக்கொண்டு, அமரர் தருக்

கோட்டம், வெள்ளையானைக் கோட்டம் முதலிய கோயில்களுக்குச் சென்று, தன் குறைகூறி வேண்ட, ஆண்டிருந்த தெய்வங்கள் மாலதியின் மனக்குறையைப் போக்காமையால், அம்மங்கை இறுதியாகப் பாசண்டச் சாத்தன் என்னும் ஐயன் கோவிலுக்கு வந்து வரம் வேண்டிக் கிடந்தாள்.

இவ்வண்ணம் ஐயனார் கோயிலில் இருந்த மாலதியைச் சுடுகாட்டில் இடு பிணம் தின்னும் இடாகினிப்பேய் ஒன்று கண்டு, ஓர் இளங்கொடி போன்ற பெண் வடிவு கொண்டு, அப்பார்ப்பனி முன் வந்து தோன்றி, "குற்றமற்ற நங்காய், செய் தவம் இல் லோர்க்குத் தேவர் வரம் கொடார். இது பொய்யுரை யன்று; மெய்யுரையே" என்று கூறி, மாலதி கையிலிருந்த மகவை வாங்கி வயிற்றிலிட்டாள். மாலதி, பேயின் செயலைக் கண்டு, இடியுண்ட மயில்போல் ஏங்கி யழுதாள். அவ்வாறு அழுது நின்ற பார்ப்பனியின் நிலையைக் கண்டு இரங்கிய சாத்தன் என்னும் தெய்வம், அம்மகளை நோக்கி, "அன்னாய், அழாதே. நீ செல்லும் வழியில் குயில்களையுடைய சோலையின் நிழலில் உயிருடன் கிடக்கும் உன் குழவியைக் காண்பாய்" என்று கூறி, அவளைத் தேற்றித் தானே அக்குழவியின் வடிவு கொண்டிருந்தது. தெய்வத்தின் நல்லுரை கேட்ட மாலதி நனி மகிழ்ந்து, தான் செல்லும் வழியிலிருந்த சோலையில் மாயக் குழவியைக் கண்டு, தன் குழவி எனவே எண்ணி எடுத்து, வயிற்றில் அணைத்துக்கொண்டு போய்த் தாய் கைக்கொடுத்தாள்.

மாயக் குழவியாகிய சாத்தன், கல்வி, கேள்விகளில் சிறந்து வளர்ந்து, தாய், தந்தையரை இழந்த பின், அவர்களுக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து, தேவந்தி எனற ஒரு மாதை மணந்து, அவளோடு சில ஆண்டுகள் வாழ்ந்து வந்தான். பின்னர், ஒரு நாள் சாத்தன் தன் மூத்தலில்லாத இளைய அழகினைத் தன் மனைவிக்குக் காட்டித் தன் கோட்டத்திற்கு வரும்படி அவளிடம் உண்மையைக் கூறி, ஏனையோர்க்குத் தான் தீர்த்தம் ஆடச் செல்வதாகக் கூறிச் சென்றான். தேவந்தி, தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உயிர்த்தலைவன் பிரிவை நினைந்து வருந்தி, நாயகன் தனக்குக்

கட்டளையிட்ட வண்ணம் அவனது கோட்டத்திற்குச் சென்று, "தீர்த்தத் துறை படிய என்னை விட்டு நீங்கிய என் ஆருயிர்க் கணவனை மீட்டுத் தருவாய்" எனச் சாத்தனை வேண்டிக்கொள்வாள் போல் அக்கோட்டத்திலேயே தங்கிச் சாத்தற்குப் பூவும் நீரும் தூவி, வழிபாடு செய்துகொண்டிருந்தாள்.

தேவந்தி இவ்வண்ணம் சாத்தனுகிய தன் நாயகனே தான் கண்கண்ட தெய்வம் என உறுதியாக எண்ணி, அவனையே வழிபட்டு வரு நாளில், தன் உயிர்த்தோழியாகிய கண்ணகி கோவலன் பிரிவால் மிகவும் வருந்திக்கொண்டிருப்பதை உணர்ந்து, தானும் தன் தோழியின் நிலைக்கு நனி வருந்திச் சாத்தனுக்கு அறுகு முதலியவற்றைத் தூவிக் கண்ணகியும் தன் கணவனைப் பெறவேண்டும் என்று வணங்கிப் பின்னர் கண்ணகிபாற் சென்று, "நீ நின் கணவனைப் பெறுக" என்று வாழ்த்துக் கூறினுள்.

கண்ணகி, தேவந்தியின் வாழ்த்தைக் கேட்டு மகிழ்ந்து, "அன்பார்ந்த அருமைத் தோழி, நின் வாழ்த்தின்படி என் இன்னுயிர்த் தலைவரை நான் பெறுவேனுயினும், நான் கண்ட கனவினுல் என் நெஞ்சம் ஐயுறுகின்றது. அக்கனுவைக் கேள். என் கொழுநன் என் கையைப்பற்றித் தன்னுடன் அழைத்துக் கொண்டு செல்ல, ஒரு பெரிய பதியுட் புகுந்தோம். அப்பதியில் உள்ளோர் எங்களுக்குப் பொருந்தாத பழிச்சொல் ஒன்றை *இடுதேள் இடுமாறு போலக் கூறினர். அப்பழிச் சொல்லால் கோவலற்குத் தீங்கொன்று உற்றது எனக் கேட்டு, அவ்வூர் அரசன் முன்னர் நான் சென்று வழக்குரைத்தேன். அதன் பயனுக, அம்மன்னவனுக்கும் அவன் பதிக்கும் உற்ற தீங்கும் ஒன்றுண்டு. அது தீக்கனு ஆதலால், அதனை நினக்குச் சொல்ல ஒருப்படேன். பின்னர், கோவலனேடு

* 'இடுதேள் இடுதல்—தேளிடப்படுவார் காணுமே தேளல்லாத தொன்றை மறையக் கொடு வந்து மேலே இட்டு அவரைக் கலங்கப் பண்ணுதல்; பாய்ச்சுதேள் என்பாருமுளர்.'

—அடியார்க்கு நல்லார்.

யான் பெற்ற நல்ல பேற்றினை நீ கேட்பாயாயின், அது நினக்கு நகையைத் தரும்" என்றாள்.

கண்ணகி கண்ட கனவைக் கேட்ட தேவந்தியம்மை, அவளை நோக்கி, "பொன்னாலாய தொடியினையுடைய பாவாய், நீ நின் கணவனால் வெறுக்கப்பட்டவளும் அல்லை. முற்பிறப்பிலே நின் கணவன் பொருட்டுக் காக்க வேண்டிய நேர்ன்பொன்றினைக் காவாது விட்டாய். அதனால் உண்டான தீங்கு கெடுக. காவிரி தன் நீரைக்கொண்டு சென்று கடலோடு எதிர்த்து அலைக்கும் சங்க முகத்திற்கு அயலதாகிய பூவின் இதழ் அவிழும் நெய் தற் கானலிடத்து இரண்டு தடாகம் உள்ளன. அவை சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் பெயருடையன. அவற்றில் மூழ்கி, மன்மதன் கோயிலை அடைந்து, அவனை வணங்கினார் இவ்வுலகத்தில் தம் கணவரோடு பிரியாதிருந்து இன்புறுவர்; மறுமையிலும் போக பூமியிற் போய்ப் பிறந்து, கணவரோடு பிரி வின்றி இன்பம் நுகர்வர். ஆதலால், அப்பொய்கைகளில் யாமும் ஒரு நாள் ஆடக்கடவோம்" என்றாள்.

தேவந்தியின் கருத்தைக் கேட்ட கண்ணகி, அவளுக்குக் கூறிய பதிலை, இளங்கோ அடிகள் இரண்டு சொற்களான் இனிது விளக்கி இருப்பது கற்றோர் மனத்திற்குக் கழிபேரின் பம் பயக்கும். அச்சொற்கள், "பீடு அன்று" என்பனவாம். நாயகன் இருக்க, அவனையே இறையென மனத்தில் இருத்து தலை ஒழித்து, பிற தெய்வத்தைப் பேணுதல் நற்குடிப் பிறந்த நங்கைமாரின் கற்பொழுக்கத்திற்குப் பெருமை அன்று என்னும் பொருளை, "பீடு அன்று" என்னுஞ் சொற்கள் விளக்குந் திறனைக் கண்டு மகிழ்க. இத்தகைய பீடார்ந்த பெண்மணி களைப் பற்றி, வள்ளுவப் பெருந்தகையார்,

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'

என்று கூறியுள்ளார்.

நாயகனது பிரிவில், பூவும் புனைதலின்றிக் காமனென்னும் பெயரும் கூறாராய்க் கணவனையே வணங்கி வாழும், கற்பிற்

சிறந்த காரிகைமாரைப் பற்றிச் சீவக சிந்தாமணியில் வந்துள்ள அருஞ் செய்யுளை அடியிற் காண்க :

‘ சாமெனிற் சாதல் நோதல் தன்னவன் தணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் கணவற்கை [தொழுது
[வாழ்வார்
தேமலர்த் [திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்லல்
[தீர்ப்பார்.’

இவ்வண்ணம் கண்ணகியும் அவள் தோழியாகிய தேவந்தியும் உரையாடியிருந்த பின்னர், காவலன் போலும் கோவலன் கண்ணகியின் கடிமனையுள் பெருமையமைந்த படுக்கையிடத்தே புகுந்து, தன் வாழ்க்கைத்துணைவியின் வாட்டமுற்ற மேனியையும், உள்ளத்தே குடிகொண்டுள்ள வருத்தத்தையும் கண்டு மிகவும் வருந்தினன். பின்பு, அவன், கண்ணகியின் புன்முறுவல் பூத்த முகத்தை நோக்கி, “என் இன்னுயிரே, வஞ்சம் பொருந்திய கொள்கையை உடைய மாதவியொடு கூடி ஒழுகினமையால், நம் குலத்திலுள்ளார் தேடி வைத்த வான் பொருட்குன்றம் வறிதே தொலைந்ததால் உண்டான வறுமை எனக்கு நாணைத் தருகின்றது” என்று கூறி நாணி நின்றான்.

கோவலனது உள்ளத் தளர்ச்சிக்கும் நாணத்திற்கும் காரணம் மாதவிக்குக் கொடுக்கும் பொருட்குறைபாடே எனக் கருதிய கண்ணகி, தன் ஒளி பொருந்திய முகத்தே முறுவலைத் தோற்றுவித்து, “இன்னும் இரண்டு காற்சிலம்புகள் உள. அவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்” என மகிழ்ச்சியோடு கூறினள். இச்சொற்களிலிருந்து கண்ணகியின் உள்ளத் தூய்மையும் உறுதியும் புலனாகின்றன. கற்புடைய மகளிர் தம் கணவரது மன மகிழ்ச்சிக்குக் காரணமாயுள்ள செயலையே செய்ய விரும்புவர்.

கண்ணகியின் அன்பொடு கலந்த சொற்களைக் கேட்ட கோவலன், "செம்மனச் செல்வியே, நீ கொடுக்கும் இச் சிலம்பு களை வாணிப முதலாகக் கொண்டு, பரந்த புகழுடைய மாட மதுரைக்குச் சென்று, நான் அழித்த பொருள்களைத் தேடிப் பெறத்துணிந்துளேன். நீ இப்பொழுது இங்கு நின்றும் என்னோடு புறப்படுக" என்றான். கண்ணகியும் காதலன் கருத்திற் கிசைய, செஞ்ஞாயிற்றின் பேரொளி, செறி இருளைப் போக்குதற்கு முன், கோவலன், பழ வினையின் ஏவலால் தன் பழம் பதி யாகிய புகாரினின்றும் புறப்பட்டான்.

## வெண்பா

'காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சியா முன்.'

---

# நாடு காண் காதை

கோவலனும் கண்ணகியும் தம் வீட்டைவிட்டுப் புறப்படும் பொழுது வைகறையென்பதையும், பக்கம் பூருவ பக்கம் என் பதையுங் கீழ்வரும் அடிகள் தெரிவிக்கின்றன:

'வான்கண் விழியா வைகறை யாமத்து
மீன்திகழ் விசும்பின் வெண்மதி நீங்கக்
காரிருள் நின்ற கடைநாட் கங்குல்.'

இதுபற்றி அடியார்க்கு நல்லார் கூறியுள்ளதைக் கீழே கண்டு, கணித நூல் வல்லார் உதவியால் ஆராய்ந்து தெளிக:

"அந்தச் சித்திரைத் திங்கட் புகுதி நாள்—சோதி;—திதி மூன்றும் பக்கம்; வாரம்—ஞாயிறு. இத்திங்கள் இருபத் தெட்டில் சித்திரையும் பூரணையுங் கூடிய சனிவாரத்திற் கொடி யேற்றி, 'நாலேழ் நாளினும்' என்பதனான், இருபத்தெட்டு நாளும் விழா நடந்து, கொடியிறக்கி, வைகாசி இருபத்தெட்டி னில் பூருவ பக்கத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோமவாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலின், வைகாசி இருபத் தொன்பதில் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாச யோகத்து நிறை மதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழு தினிடத்து நிலவு பட்ட அந்தரத் திருளிலே யென்றவாறு. அது பூருவ பக்கம் என்பது தோன்றக் 'காரிருள் நின்ற கடை நாட் கங்குல்' என்றார்."

வீட்டை விட்டுப் புறப்பட்ட கோவலனும் கண்ணகியும், காவல் செறிந்த மிகப் பெரிய கதவையுடைய இடைகழியைக் கழிந்து, அப்பொழுதே அரவணைமீது அறிதுயில் கொள்ளும் மணி வண்ணன் கோயிலை வலஞ்செய்து சென்றனர்.

பின்னர், கையாலும், கருவியாலும் செய்யப்படாமல் இந்திரன் மனத்தால் நிருமிக்கப்பட்ட புத்தர் கோயில்கள்

எழிலையும் கண்ணகியும் கோவலனும் கண்டனர். அக்கோயில் களில் மா போதி நிழலில் எழுந்தருளிய அறவோனாகிய புத்தன் அருளிச் செய்துள்ள ஆகமத்தை, ஆகாய சாரிகள், மறைய இருந்து ஓதி, யாவர்க்கும் பொருள் விளங்கும்படி செய்வர்.

கண்ணகியும் கோவலனும் இந்திர விகாரத்தைக் கழிந்த பின்னர், அசோக மரத்தின் நிழற்கண்ணே திருவிழாக் காலங் களில் ஆகாய சாரிகள் வரத்தகும் என நினைத்து, சைன இல்லறத்தார் எல்லோரும் கூடி இட்டப்பட்ட சிலாவட்டத்தைக் கண்டு தொழுது வலங்கொண்டனர். ஈண்டு, இளங்கோ அடிகள் சைனத் துறவிகளின் உள்ளத் தூய்மையையும், விரதத் தையும் சில அடிகளான் விளக்கியுள்ளதைக் கீழே காண்க :

'புலவூண் துறந்து பொய்யா விரதத்து
அவலம் நீத்தறிந்து அடங்கிய கொள்கை
மெய்வகை உணர்ந்த விழுமியோர்.........'

சைனத் துறவிகள், புலால் உணவைத் துறந்து, பொய்யா விரதத்தை மேற்கொண்ட புண்ணிய சீலர்கள்; அழுக்காறு, அவா முதலிய மாசறு மனத்தினர்; ஐம்பொறிகளை அடக்கும் ஆற்றல் சான்ற அந்தணர்; மெய்வகை உணர்ந்த பொய்யில் விழுமியோர். இத்தகைய அருங்குணமும், அருஞ் செயலும் வாய்ந்த அருகப் பெருமக்களைப் பற்றிச் சீவக சிந்தாமணி கூறும் அருஞ் செய்யுள் ஒன்றை அடியிற் காண்க :

'ஐவகைப் பொறியும் வாட்டி
ஆமையின் அடங்கி ஐந்தின்
மெய்வகை தெரியுஞ் சிந்தை
விளக்குநின்று எரிய விட்டுப்
பொய்கொலை களவு காமம்
அவா இருள் புகாது போற்றிச்
செய்தவம் நுனித்த சீலக்
கனைகதிர்த் திங்கள் ஒப்பார்.'

கோவலனும் கண்ணகியும், மலையில் தொடங்கிச் செல்லும் பெரிய ஆறு போலும் ஊர் வாயிலை நீங்கி, இலவந்திகை யென்னும் சோலையின் மதிற்புறத்தே சென்றனர்.

இலவந்திகையை அரும்பத வுரையாசிரியர் நீராவி என்பர். இலவந்திகையின் சிறப்பை,

'கலையி லாளன் காமர் வேனிலொடு
மலய மாருதம் மன்னவர்க்கு இறுக்கும்
பன்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந்திகை..........................'

என வந்துள்ள அடிகள் விளக்குகின்றன.

வேனிற் காதையில் மன்மதனை மன்னவனாகவும், இன்னிள வேனிலை அவனுக்குத் துணைவனாகவும், பொதியின் மாமுனி பயந்த இளங்காற்றினைத் தூதனாகவும் உருவகஞ் செய்த அடிகள், ஈண்டு, வேனிலையும் மலய மாருதத்தையும் சோழ மன்னனுக்கு இடும் திறைப் பொருளாகக் கூறியுள்ளார். வேனிற் காலமும், தென்றலும், ஒன்று சேர்ந்து வருதலும், இவ்விரண்டும் மனத்திற்கு மகிழ்ச்சி அளித்தலும் கண்கூடு. இவ்விரண்டின் பின், மன்மதன் தோன்றி மக்களை மயங்கச் செய்வதை அடிகள் இங்ஙனம் அழகு பட உருவகஞ் செய்துள்ளமை உளத்திற்குப் பெரு மகிழ்ச்சியை அளிக்கின்றது. திறைப்பொருள் மன்னவன் மனத்தை மகிழ்விப்பதுபோல், காமர் வேனிலொடு மலய மாருதம் மன்னவன் மனத்தை மகிழ்வித்தல் காண்க.

இலவந்திகையின் எயிற் புறத்தே சென்ற கோவலனும் கண்ணகியும், இரு மருங்கும் சோலை சூழ்ந்த புதுப்புனல் ஆடப் போகும் பெரிய வீதியையுடைய சங்கமுகத் துறை வாயிலையும் நீங்கி, மேற்றிசை நோக்கி, நாட்டுக்கு வளப்பத்தை யளிக்க வல்ல நீரினையுடைய காவிரியின் பெரிய வடகரைக் கண்ணுள்ள பொழிலைக் கழிந்து, காத தூரம் என்னும் எல்லையைக் கடந்து சென்று, கவுந்தி யடிகள் இருந்தருளிய

பள்ளிக்கு அருகில் உள்ள பூ மரச்சோலையைப் பொருந்தினர். அப்பொழுது, மணங் கமழும் கூந்தலை உடைய கண்ணகி, சிற்றிடையும் சீறடியும் தளர இளைத்துக் கோவலனை நோக்கி, 'மதுரை என்னும் மாநகர் எது?' எனத் தன் மழலை மொழியால் மயங்கி வினவினள்.

கண்ணகி இதுவரை பெரு வழி நடந்தறியாப் பேதையாதலின், காதம் சென்றதும் களைத்தாள். அவளது வினவிலிருந்து, அம் மெல்லியலாளின் உள்ள நிலையையும், உடல் நிலையையும் அறிகிறோம். இராமனுடன் கானகம் செல்லத் துணிந்த கற்பரசியாகிய சீதை, அயோத்தியின் மதில் வாயிலைக் கடக்குமுன்னரே, "யாண்டையது கான்" எனக் கேட்ட செய்தியும், மனைவியொடும், மக்களொடும் நாடு நீங்கி, நனி வருந்திச் செல்லும் நளனை, அவன் மக்கள் அழுது நோக்கி, "வழியானதெல்லாம் கடந்தோமோ?" என வினவிய செய்தியும் இங்கு நினைவிற்கு வருகின்றன.

கண்ணகியின் உள்ளம், உடல் என்னும் இரண்டின் சோர்வையும் உணர்ந்த கோவலன், தன் மனைவியின் நிலையைக் கண்டு வருந்தினன் னினும், அவ்வருத்தத்தை வெளியே காட்டாது, அம் மடவரலை நோக்கி, "நீ வினவிய மதுரை மாநகர் நம் அகன்ற நாட்டிற்கு அப்பால் ஆறைந்து காதத்தில் உள்ளது. நாம் அவ்வூரை அணுகி விட்டோம்" என அவளுக்கு ஆறுதல் கூறித் துன்ப நகை புரிந்தான்.

"யாதென்றவட்கு முப்பதென்னும் பொருள் மறைந்து, காதம் ஆறு, காதம் ஐந்து என்றாற்போல் இருத்தற்கு ஆறைந்து காதம் என்றான்" என அடியார்க்கு நல்லார் உரை கண்டிருப்பதை அறிக.

கோவலன், கண்ணகியோடு சென்று, அருகர் பள்ளியகத்தே அமர்ந்து விளங்கிய கவுந்தி அடிகளைக் கண்டு, அடி தொழுது நின்றான். அங்ஙனம் நின்ற கோவலனையும்,

கண்ணகியையும் கண்ட அத் தவ மாது, "அழகும், நற்குடிப் பிறப்பும், உயர் பேரொழுக்கமும், பெருமகனாகிய அருக தேவன் அருளிய திரு மொழி பிறழா நோன்பும் உடைய நீங்கள், தீ வினையாளரைப்போல் உங்கள் இடத்தை விட்டு இவ் வாறு வருதற்குக் காரணம் என்னே?" என்றாள்.

கோவலன், கவுந்தி அடிகளை நோக்கி, "தவத்துறை நிற்கும் அடிகளே, மதுரை மாநகர் சென்று, பொருள் ஈட்டும் வேட்கை யுடையேன்" என்றான். அவன் கருத்தை உணர்ந்த கவுந்தி, "காடிடையிட்ட நாட்டைக் கடந்து செல்வதற்கு இவள் தன்மை ஏற்றதன்று. ஆனால் ஊழின் வன்மையை அறி வார் யார்? மாசறு கேள்விப் பயனையுடைய அறவோரது அறவுரை கேட்டு, அருக தேவனை ஏத்தத் தென் தமிழ் நன்னாட்டுத் தீது தீர் மதுரை மாநகர் செல்லும் கருத்துடையேன். நீங்களும் என்னுடன் வருக" என்றாள். அதனைக் கேட்ட கோவலன் மிக மகிழ்ந்து, கவுந்தி அடிகளைக் கைதொழுது ஏத்தி, "அடி களே, நீங்கள் சொல்லிய வண்ணம் எங்களோடு மதுரையம் பதிக்கு எழுந்தருள்வீராயின், என் மனைவியின் மனத்துயரை மாற்றியவனாவேன்" என்றான்.

பின்னர், கவுந்தி அடிகள், "கோவல, நாம் செல்ல நினைத்துள்ள நெறிக்கண் துன்பம் தருவன பல வுண்டு. அவற்றைக் கேட்பாய்:

இம் மெல்லியலாளை உடன்கொண்டு சோலையின்கண் செல் வோமாயின், அவ்விடத்து வள்ளிக்கிழங்கை அகழ்ந்து கொண்ட குழிகளைச் சண்பக மரங்கள் நிரப்பிய பூந்தாது சேர்ந்த பழம் பூக்கள் பொய்க்குழி படுத்தியுள. அவ்விடங்களை யறிந்து பாதுகாத்துச் செல்லாதவர்கள் மீளாத்துன்பம் உறுவர். அப்பொய்க்குழிகளை நாடுதற்கு, நிலம் நோக்கி ஒதுங்கிச் செல்லும் மக்களை, முற்றிய பலாப்பழங்கள் பகைவர்போல் மோதும்.

அங்குச் செல்லாமல் வெள்ளிடைப் போவோம் எனின் அவ்விடத்தே மஞ்சளும், இஞ்சியும் தலைமயங்கிய தோட்டங்களில் பலாவின் விதைகள் இவள் மெல்லடிக்குப் பகையாய் உறுத்தும்.

கயல் நெடுங் கண்ணியின் காதற் கேள்வ, நாம் வயல் நெறிச் செல்வோமாயின், மீனிரை தேரும் நீர் நாய் காணினும், கயல் மீன்கள் உகளக் காணினும், வாளை, வயற்கண் குறுக்காகப் பாயக் காணினும், மலங்கு மீன்கள் பிறழக் காணினும், இக் காரிகை கலக்கமுறுவாள்.

மேலும், கரும்பின்கண் வைத்த பெருந்தேன்கூடு சிதைந்து, வண்டுகள் சூழ்ந்த வாவிகளின் நல்ல நீரொடு கலந்துவிடும். இம்மாதரசி அடங்காத நீர் வேட்கையான் அந்நீரை அகங்கையான் முகந்து உட்கொள்ளவும் கூடும். களை பறிப்பார் பறித்து வரப்புகளில் இட்ட குவளைப் பூவொடு வண்டினம் மது மயக்கத்தால் உள்ளொடுங்கிக் கிடக்கும் இடங்களை நீங்கள் வழி நடந்த துன்பத்தால் அறியாது அவ்விடங்களில் அடியிட்டு நடத்தலும் கூடும். பெரு வாய்க்காலின் கரை வழியே போவோம் எனின், அங்குள்ள நண்டினையும் நத்தையையும் பாதுகாவாமல் செல்லும் செலவினால் அவைகளுக்கு மிக்க நோய் உண்டாயின், அதனால் நமக்கு வரும் கொலைப் பாவம் நம்மால் பொறுக்க முடியாது.

ஈண்டுக் கூறிய வயலும், ஆண்டுக் கூறிய சோலையும் அல்லது வேறு வழி நாம் செல்கின்ற இடத்தில் இல்லை. ஆகையால், நீ நின் மனைவியோடு அவ்விடங்களைக் குறிப்பான் அறிந்து, எவ்வுயிருந் துன்புறு வண்ணம் பாதுகாப்பாயாக" என்று கூறினார்.

கவுந்தி அடிகள் மதுரைக்குச் செல்லும் நெறிக்கண் உள்ள துன்பங்களைக் கூறு முகத்தான், இளங்கோ அடிகள்

கண்ணகியின் வெயில் நிறம் பொறு மெல்லிய தன்மையையும், சோணாட்டின் வளனையும், அருக சமயத்தாரின் கள்ளுண்ணாமை, கொல்லாமை என்னும் அறங்கள் எந்நிலையினும் வழுவ லாகாது என்பதனையும் கூறியுள்ள திறன் அறிஞர் அகமலரை அலர்விக்கின்றது.

கவுந்தி அடிகள், தமது பள்ளிக்கண் இருந்த வண்ணம், வழியில் உள்ள இடையூறுகளை யெல்லாம் கோவலனுக்குக் கூறிய பின்னர், குற்றமற்ற பிச்சைப் பாத்திரத்தையும், தோளில் இடும் உறியையும், மயில் தோகையையும் கொண்டு, *பொருள் மொழியாகிய "தெய்வம் யாம் செல்லும் நெறிக்கண் துணை வருக" என்பதைச் சொல்லிப் புறப்பட, அவரைக் கோவல னும் கண்ணகியும் தொடர்ந்து சென்றனர். இங்ஙனம் மூவரும் வழியில் பலவகைக் காட்சிகளையும், ஒலிகளையும் கண்டும், கேட் டும், வழி நடையால் வரும் துன்பத்தை மறந்து சென்றனர். காவிரிப் புதுநீரால் எழும் ஒலியையும், காவிரியின் சிறப்பையும் கீழே காண்க :

'கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிவப்பில் கடுங்குரல் ஏற்றெடும்
சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்
குடமலைப் பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை
ஓவிறந் தொலிக்கும் ஒலியே யல்லது
ஆம்பியும் கிழாரும் வீங்கிசை யேத்தமும்
ஓங்குநீர்ப் பிழாவும் ஒலித்தல் செல்லா.'

---

* பொருள்மொழி—உபதேச மந்திரம்; பஞ்ச மந்திரம் அ, சி, ஆ, உ, சா என்பன.

சனி கருநிறமுடையவன். ஆகையால், அவனைக் கரியவன் என்றார் அடிகள். சனி புகைந்தாலும், தூமகேது தோன்றினாலும், விரிந்த கதிரினையுடைய சுக்கிரன் தென்திசைக்கண் செல்லினும், குடக மலையில் மழை பெய்வதும், காவிரியில் நீர் பெருக்கெடுத்து வருவதும், தவறுதல் இல்லை என்பதை மேலே வந்துள்ள அடிகளிலிருந்து அறிகிறோம். அக்குட வரைக்கண் தோன்றிய பல பண்டங்களோடு கடுகி வரும் காவிரியின் நீர், மதகின் கதவின்மீது எழுந்து குதித்தலால் உண்டாகும் ஒலி அல்லது ஆம்பி முதலிய நீர் இறைக்கும் கருவிகள் அந் நாட்டில் ஒலித்தல் இல்லை.

நீர் நிலைச் செறுவில் உண்டாகிய தாமரைக் காட்டில் சம்பங் கோழியும், நாரையும், செங்கால் அன்னமும், பைங்கால் கொக்கும், கானக்கோழியும், நீர்நிறக் காக்கையும், உள்ளானும், குளுவையும், புள்ளும், பெரு நாரையும், ஒலிக்கும் ஓதையைக் கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் ஆகிய மூவரும் கேட்டனர்.

சிவந்த கண்ணையுடைய எருமை, தினவையுடைய தன் முதுகினை உராய்தலானே, புரிகள் அறுந்து நெகிழ்ந்த நெற் கூட்டின் கண்ணுள்ள கொழுவிய பல பண்டங்கள் கவரி போன்ற செந்நெல்லின் கதிரினிடத்துச் சிந்த, அங்ஙனம் சிந்துவதைக் காண்கின்ற பறையர், பள்ளர் முதலியோர் ஒன்று பட நின்று ஒலிக்கும் ஒலியையும், வயல்களில் களை பறித் தெறிந்து நாற்றை நடும் செங்கயல் நெடுங்கண் கடைசியர் பாடும் பாடலையும், நிலத்தைப் பிளப்பவரைப்போல ஏரைப் பூட்டி நின்றோர் பாடுகின்ற ஏர் மங்கலப் பாட்டையும், நெல்லை யரிந்து போரிட்டவர்கள் சூட்டைக் கடா விடுதலால் உண்டான முகவைப் பாட்டையும் கோவலனும் கண்ணகியும் கேட்டுத் தமது துயர் மறந்து, வழி நடந்து சென்றனர். பின்னர், புலிக்கொடியை யுடைய கரிகாலனது கொற்றத்துடனே மழைக்கும் கருப்பத்தைத் தோற்றுவிக்கும் அழல் திகழ் வேள்விச் சாலைக்கண் அந்தணர் ஆக்கிய அரும்புகையால் மங்கல மறையோர் மாடங்கள் மஞ்சு சூழ்ந்த மலைபோல் காட்சியளித்தன. காவிரிப்பாவையின் புதல்வரும், இரப்போர் சுற்றத்தையும் அரசர் கொற்றத்தையும்

தம் உழுதொழிலான் தோற்றுவிப்போருமாகிய வேளாள ருடைய ஊர்களும், ஏனையோர் உள்ள ஊர்களும், இடை யிடையே யுள்ள நாடு எல்லாவற்றையும் கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் ஆகிய மூவரும் கண்டு, ஒரு நாளில் ஒரு காத தூரத்திற்கு மேல் நடக்க முடியாமல், பல நாள் பல இடங்களில் தங்கிச் சென்றனர்.

மேலே வேளாளரது சிறப்பை,

'பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்.......................'

என்னும் அடிகளால் இளங்கோ அடிகள் விளக்கியுள்ளார். காவிரியின் வற்றாத செல்வத்தை வேளாளர் கைக்கொண்டு, அதன் பயனை உலகிற்களிக்கும் உத்தமராகையால், அப்பெரு மக்களைக் காவிரிப்பாவையின் புதல்வராக அடிகள் கூறியுள்ளது மனத்திற்கு மிக்க மகிழ்ச்சியை யளிக்கின்றது. கானல் வரியில்,

'வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழியுய்க்கும் பேருதவி யொழியாய் வாழி காவேரி'

எனக் காவிரியைத் தாயாகவும், சோழவள நாட்டை மகவாகவும் உருவகம் செய்துள்ளமை காண்க. தெய்வப் புலமைத் திரு வள்ளுவரும்,

'பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்'

எனக் கூறி, வேளாளர் தம் அரசனுக்குக் கொற்றம் பெருக்கி, மண் முழுதும் அவனதாகக் கண்டிருக்கும் சீரியர் என்பதை வெளியிட்டுள்ளார்.

கோவலன், கண்ணகி என்னும் இருவருடன் கவுந்தி அடிகள் மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு நாளில், அருக தேவனால் செய்யப்பட்ட அதிசயங்கள் மூன்றும் தப்பாத உண்மையினை யுடைய அறவொழுக்கங்களை அருளிச் செய்யும் சாரணர் அங்கு வந்து தோன்றினர். அவர்களைக்

கண்ட கவுந்தி அடிகள், "யான் முன் செய்த பழ வினைகள் எல்லாம் கெடுக" என்று நினைத்து, அவர்கள் அடியில் வீழ்ந்து வணங்கினர். அங்ஙனமே கோவலனும், கண்ணகியும், அங்கு வந்து காட்சியளித்த சாரணர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்.

அங்கு வந்து தோன்றிய சாரணர்களுள், உபதேசித்தற்குரிய மூத்த சாரணர் ஒருவர், தவ மாதினை நோக்கி, "பெருஞ் சிறப்பு வாய்ந்த கவுந்தியே, தீவினை, யாவரானும் ஒழிக்க ஒழியாததாய்த் துன்பம் நுகர்விக்கும். விளை நிலத்திட்ட வித்துப் போல நல்வினை வந்தடைந்து நற்பயனை நுகர்விக்கும் காலத்து அதனை ஒழிக்கவும் ஒண்ணாது. கடுங்காற்று வீசும் வெட்ட வெளியில் இடப்பெற்ற விளக்கென, உடலிடை நின்ற உயிர்கள் அழிந்தொழியும். விண்ணவனும், வேத முதல்வனும், ஆகமத்தின் கண் விளங்கும் ஒளியுமாகிய அருக தேவனது அடியிணைகளைச் சார்ந்தாலல்லது, பிறவியாகிய புழுக்கறையிலிருந்து வெளி வரல் முடியாது" என்று கூறினர்.

கவுந்தி அடிகளுக்கு அறவுரை கூறிய சாரணர் கூற்றிலிருந்து பல உண்மைகள் புலனாகின்றன. நல்வினை, தீவினையாகிய இரண்டும் தத்தம் பயனை ஊட்டாது அகலா என்னும் உண்மையையும், யாக்கை நிலையாமையையும், இறைவனடியைச் சாராதார் பிறவியினின்றும் தப்ப முடியாது என்பதையும் அறிகிறோம். திருவள்ளுவரும்,

*'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்'*

எனப் பிறவிக் கடல் நீந்திப் பேரின்பக்கரை யடைதற்கு ஓர் உபாயம் கூறியுள்ளார்.

சாரணர் வாய்மொழி கேட்ட கவுந்தி அடிகள், தம் கைகளைத் தலைமேல் வைத்துக் கொண்டு நின்று, கீழ் வருமாறு கூறுகின்றார் :

"காம வெகுளி மயக்கங்களைக் கெடுத்தோனாகிய அருக தேவன் அருளிச் செய்த ஞானத் திருமொழிக்கல்லது பிறி

தோன்றற்கு என் செவிகள் திறவா. என் நா, காமன் செயல் வென்றோனுடைய ஆயிரத்தெட்டு நாமங்களைப் பயில்வதல்லது வேறொரு நாமத்தினைக் கூறாது. என் கண்கள், ஐம்புலன் களையும் வென்றோனுடைய இரண்டு திருவடிகளைக் காண்ப தல்லது மற்றைக் கடவுளர் அடிகளைக் கையகத்தே காணினும் காணா. எனது பயனில்லாத வுடல், அருளையும் அறத்தையும் மேற்கொண்டோனுடைய திருவுடலத்திற்கல்லது வேறொன்றற் குப் பூமியில் பொருந்தாது. எனது இரண்டு கைகளும், அருக்கு அறங்கூறுவோனாகிய அறிவன் பொருட்டுச் சேர்ந்து குவிதலல்லது ஏனைத் தேவர் பொருட்டுக் குவியா. எனது தலை யின் உச்சியும், மலர்மிசை நடந்த மலர் அடிகளை அணியப் பொறுக்குமல்லது பிறிதொன்றனையும் அணியப் பொறாது. என் மனமும், முடிவிலா இன்பத்தினையுடைய இறைவன் அருளிச் செய்த ஆகமத்தை உருவேற ஓதிப் புடை பெயர்தல் அல்லது பிறிதொரு மொழியை ஓதிப் புடை பெயராது.”

இவ்வண்ணம் கவுந்தி அடிகள் அருக தேவனது புகழ் மொழிகளைப் போற்றிக் கூறினர். அம்மொழிகளைக் கேட்டு மன மகிழ்ந்த மாதவர், “பிறப்பினைத் தரும் பாசம் கவுந்திக்குக் கெடுக” என்று கூறி, விண்ணிடை விரைந்து சென்றனர். அங்ஙனம் நன்மொழி கூறிச் சென்ற சாரணர்களைக் கவுந்தி அடி கள், கோவலன், கண்ணகி ஆகிய மூவரும் வணங்கிப் பின்னர், காவிரியாற்றின் நெடுந்துறையைப் பள்ளியோடத்தில் ஏறிக்கடந்து, தென் கரை சேர்ந்து, ஆண்டு, மலர்களான் பொலிவு பெற்று விளங்கிய ஒரு சோலையில் இருந்தனர். அக்காலை, அச் சோலையை நெருங்கிச் சென்றுகொண்டிருந்த வம்பப் பரத்தை ஒருத்தியும், வறுமொழியாளன் ஒருவனும், கவுந்தி அடிகளை நோக்கி, “விரதத்தான் மெலிந்த யாக்கையையும், நுண்ணிய தவத்தினையும் உடைய அடிகாள், உம்மொடு வழி வந்து, காமனும் அவன் தேவியும்போல் காணப்படுகின்ற இவர் யார்?” எனக் கோவலனையுங் கண்ணகியையும் சுட்டிக் காட்டி வினவினர்.

கவுந்தி அடிகள் அப்பரத்தையையும், பயனில கூறித்திரியும் அப்பதடியையும் பார்த்து, “வழி நடையான் மிகவும் வருந்தி யுள்ள இவர்கள் என்னுடைய மக்களாவர். அவர்களை

அணுகாது நீவிர் இருவரும் செல்க" என்றனர். அடிகள் கூறியவற்றைக் கேட்ட அற்பர்கள், "கற்பவை கற்று, அதற்குத் தக நிற்கும் பெரியீர், ஒரு வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாய்க் கூடி வாழ்தல் நீவிர் கற்ற நூல் களில் கூறப்படுதலும் உண்டோ?" என இகழ்ச்சி தோன்ற இசைத்தனர். தீயொழுக்கம் மேற்கொண்டு திரியும் கீழ் மக்களின் தீ மொழிகளைக் கேட்ட கண்ணகி, இரு செவிகளையும் பொத்தித் தன் நாயகன் முன்னர் நடுங்கி நின்றனள். கண்ணகியை இகழ்ந்த அக்கயவரைக் கவுந்தி அடிகள் தீயெழ நோக்கி, "என் பூங்கோதையை இகழ்ந்த நீங்கள் முள்ளுடைக் காட்டில் முது நரி ஆகுக" எனச் சபித்தனர்.

'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது'

என்ற பொய்யா மொழிப்படி, விடனும் பரத்தையும் குறு நரி ஆகிக் கூக்குரலிட்டனர். கோவலனும் கண்ணகியும், அக் குரலைக் கேட்டு நடுங்கி, கவுந்தி அடிகளை வணங்கி, "பெருந் தவமுடைய பெரியீர், நல்லொழுக்க நெறியின் நீங்கிய கீழ் மக்கள் தீய மொழிகளைக் கூறினும், அக்கூற்றுக்குக் காரணம் அவர்களது அறியாமையே என்று பேரறிஞர் அறிதல் வேண் டும். ஆகையால் உம் திருமுன் தவறு இழைத்த இவர் களுக்கு உய்திக்காலம் உரைத்தருள் புரிக" என வேண்டினர்.

இங்குக் கோவலன், கண்ணகி ஆகிய இரு பெருமக்களும் தம்மை யெள்ளி நகையாடிய இருவர்பாலும் இரக்கம் காட்டி இதம் செய்த திறத்தான் அவர்களது உள்ளத்தின் உயர்வையும், அந்தணர்க்கும் அறவுரை கூறும் அறிவின் ஆற்றலையும் அறி கின்றோம்.

கோவலன், கண்ணகி ஆகிய இருவர் வேண்டுகோளுக் கிணங்கிய கவுந்தி அடிகள், "அறியாமை வாயிலாக இன்று இழி பிறவி பெற்ற இவர்கள், உறையூர் மதிற்புறமாகிய காவற் காட்டில் திரிந்து, பன்னிரண்டு திங்கள் வருந்திய பின்னர், முன்னை உருவம் பெறுக" எனச் சாப விடை அருளினர். பின்னர், தவப்பெருஞ் செல்வியாகிய கவுந்தியும், கற்பின் செல்வி

யாகிய கண்ணகியும், அருங்குணச் செல்வனாகிய கோவலனும், முறஞ்செவி வாரணத்தை முன்னொருகால் போரில் வென்ற புறஞ்சிறை வாரணம் என்னும் உறையூர் புகுந்தனர்.

### கட்டுரை

'முடியுடை வேந்தர் மூவருள்ளும்
கொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத் தவருறை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும் அவர்தம்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்
அரங்கும் ஆடலும் தூக்கும் வரியும்
பரந்திசை யெய்திய பாரதி விருத்தியும்
திணைநிலை வரியும் இணைநிலை வரியும்
அணைவுறக் கிடந்த யாழின் தொகுதியும்
ஈரேழ் சகோடமும் இடநிலைப் பாலையும்
தாரத் தாக்கமும தான்தெரி பண்ணும்
ஊரகத் தேரும ஒளியுடைப் பாணியும்
என்றிவை யனைத்தும் பிறபொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்
ஒருபரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று.'

### வெண்பா

'காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகா

...ப் பல்கலைக...

45291

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
25 DEC 1986
தஞ்சாவூர்

৪২৫৭।